பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

ஜூலை 2021






## பன்முக வித்தகர் பாவேந்தலுடன்

நேர்காணல்

நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும் ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்®

தோற்றம் 1972 ஜூலை 2021

ஆசிரியர் / வெளியிடுபவர் :

அமின் மொஹமெட்

இணையாசிரியர் :

முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி

நிர்வாக ஆசிரியர் :

சஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :

ஹிப்ஸுர் ரஹ்மான்

கவிஞர் பாலமுனை பாறூக்

கவிஞர் நெல்லை உலகம்மாள்

பாவலர்மணி இராம வேல்முருகன்

கவிஞர் தென்றல் கவி

வெண்பா வேந்தர் ஏடி வரதராசன்

கவிஞர் அ. முத்துசாமி

கவிஞர் ஈழபாரதி

ஆலோசகர்கள் :

பாட்டரசர் கி. பாரதிதாசன்

கவிதாயினி சக்தி ஜோதி

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் நூல்கள் விமர்சனம், மதிப்புரை, அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப மற்றும் அஞ்சல் தொடர்புகளுக்கு...

Amine Mohamed
TAMILNENJAM
59, rue des Entrechats,
95800 Cergy - France.
web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com




மேலுள்ள அட்டைப்படத்தில் டச் அல்லது க்ளிக் செய்து ஹைக்கூ திண்ணை 6 இதழினை தவிறக்கம் download செய்யவும்.

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன். படைப்பின் கீழ் படைப்பாளர்கள் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் மற்றும் தொடர்புக்கான தகவல்களையும் ஆக்கம் தங்களால் எழுதப்பட்டது எனும் உறுதியையும் தருதல் அவசியம்.

நூல் விமர்சனம் செய்திட நூலின் இரண்டு பிரதிகளை அனுப்பவேண்டும். படைப்புகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல. படைப்பாளிகளே பொறுப்பாவார்கள். ஆக்கங்களை செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

# நெஞ்சோடு நெஞ்சம்

அன்பானத் தமிழ்நெஞ்சங்களுக்கு வணக்கம்!

முதற்கண், என் பிறந்தநாளில் எனை வாழ்த்திய நல்லுள்ளங்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகளை சமர்ப்பிக்கிறேன். உங்கள் ஆழ்மனதிலிருந்து வந்த நல்வாழ்த்துகளாலும் பேரன்பினாலும் நான் தினந்தோறும் செழிக்கிறேன். மனம் பூரிக்கிறேன். இதைவிட எனக்கு வேறென்ன வேண்டும்? நன்றி! நன்றி!

கிட்டத்தட்ட ஆறு தசாப்தங்களாக தமிழ்த்தாயின் அரவணைப்பில், தமிழ்த்தொண்டு செய்து வருகிறேன். அதிலும் தமிழ்நெஞ்சம் பல்சுவை இதழை ஐம்பது ஆண்டுகளாகத் தொடர்ந்து வெளியிடுவதென்பது சாதாரணமான விடயமல்ல என்பது யாவரும் அறிந்ததாகும். பல சிரமங்களுக்கு மத்தியிலும், என் கடமை தவறாமல் என் அன்பு நெஞ்சங்களுக்காக இவ்விதழை தொடர்ந்து உங்கள் கரங்களில் ஒப்படைத்திருக்கிறேன் என்பதில் மனத்திருப்தி கொள்கிறேன்.

இது மட்டுமல்லாமல், எந்தவிதமான பிரதிபலனும் எதிர்பாராமல், என்னால் முடிந்தளவு தமிழுக்காக என்னையே அர்ப்பணித்து, செயல்பட்டு வந்திருக்கிறேன் என்பதில் பெருமிதம் கொள்கிறேன். இத்தனைக்கும் உங்கள் விலைமதிக்க முடியா பேரன்பே மூலதனமாக, உந்துசக்தியாக என்னை இவ்வளவு தூரம் வழிநடத்தி வந்துள்ளதென்பதையும் நானறிவேன்.

என் சேவையைப் பாரட்டி பல அமைப்புகள் விருதுகள் தந்து மகிழ்வித்திருக்கிறார்கள், கவிஞர்கள் என்னைப் புகழ்ந்துப் பாடி, பாராட்டியும் வருகிறார்கள். இவர்களுக்கெல்லாம் மீண்டும் நன்றி சொல்லி மகிழ்கிறேன். இவைகளிலெல்லாம் நான் இறுமாந்தும் விடவில்லை. மாறாக எனது கடமையென நினைத்து இளம் எழுத்தாளர்களுக்காக களம் அமைத்து கடமையாற்றி வருகிறேன்.

இனிவரும் காலங்களிலும், தமிழுக்காகத் தமிழ்த்தாயின் கரங்கோர்த்தே பயணிப்பேன். இன்னும் ஐந்து மாதங்களில் தமிழ்நெஞ்சம் இதழ் ஐம்பதாண்டு பூர்த்தியை அடையவிருக்கும் நிலையில், அனைவரும் ஒன்றிணைந்து கொரோனா எனும் கொடிய நோயை உலகிலிருந்தே விரட்டி, புதிதாய் உருவெடுப்போம் புதியன படைப்போம். புதுத்தெம்புடன் வெற்றிநடை பயில்வோம்.

வாழ்க நலத்துடன், வளத்துடன்!

தமிழ்நெஞ்சம் அமின்

# ஹைக்கூ

●
சுருங்கிக் கொள்கின்றன
கூட்டை அடையும் போது
வல்லூறின் சிறகுகள்

●
பாறையில் மோதி
கூர்மையாக்குகின்றது
தன் அலகினை கழுகு

●
சாலையைக் கடந்து
செல்கின்றது
மின்சாரக் கம்பியில் ஏறிய
காட்டுக்கொடி

●
வானத்தில் நடவு செய்ய
விரல்களில் வழிந்தபடி
செம்புலநீர்

●
மிதக்கும் உடலை
நகர்த்தியபடி கரையேறுகிறது
ஆற்று முதலை

●
மழையில் நனைந்த
பற்றுக் கொடியில் வரிசையாய்
சூரியன்கள்

●
இலைகளின் மேல் வெளிச்சம்
தொலைந்து போகின்றது
பனித்துளி

●
கூண்டிற்குள் பறந்தபடி
தொலைந்த பறவையின்
ஒற்றைச் சிறகு

●
பறந்து சென்ற பறவை
வெறுமையாக இருக்கின்றது
கூண்டு

●
கரியால்
காகிதத்தில் எழுதுகின்றேன்
பெருமரத்தின் கதை

●
தாழப் பறக்க
கதிர்களில் கிழிந்தபடி
பறவையின் நிழல்

●
பூச்சி தின்ற இடமெல்லாம்
வெளிச்சத்தை வடிகட்டி
அனுப்புகின்றது
பழுத்தயிலை

●
புத்தகத்தின் பக்கங்களை
புரட்ட ஈர்க்கின்றது
மரத்தின் வாசம்

- ஷர்ஜிலா பர்வீன்
கம்பம்

# தோழா....!

எதுக்கவிதையெனும்
ஆராய்ச்சியினியிங்கு
தேவையில்லை....!
நிறைபடிப்புக்காரரும்
குறைபடிப்புக்காரரும்
புரியும்வண்ணம்
எழுதுகிறவார்த்தைக்கு
மனிதமனம்
புரட்டுகிறசக்திவேண்டும்....!

இன்னுமேன் ஏழ்மையென
எவர்மனதும்கொதிக்கும்
வண்ணம்
வார்த்தைக்கு
வியர்க்கவேண்டும்...!

பாரதியின்
'அக்கினிக்குஞ்சு'போல்
வார்த்தைகளை ....
தமிழ்க்கவிதை வரவேற்க
இருகரம்நீட்டவேண்டும்...!

பெண்ணழகைக்கூட்டும்
பொன்நகைப்போல்
எதுகையும் மோனையும்
கவிதை
கட்டாயமணியவேண்டும்...!

குரும்பல்பொன்கிபாரதி
மணலி - 610203

# புரிதலுக்காக...

●

ஆதிக்கத்திற்கும்
அன்பாளுமைக்கும்
நடுவில்நசுங்குகிறது
இல்லறம்

●

இறுக்கிஅணைத்து
எலும்பைநொறுக்குவதாய்
இருக்கிறது நெருங்கிய உறவு

●

சமாதானத்தின் சாராம்சம்
சரணாகதியல்லவே
விட்டுகொடுப்பதும்
விட்டுவிலகுவதும்
வெவ்வேறல்லவா?

●

நுகத்தடி
அழுந்தியதழும்பை
நேசிக்கிற
அறுபடும்அடிமாடாய்
கிழிந்துகிடக்கிறது
வாழ்க்கை

●

சுயஇரக்கத்தின்காலடியில்
சுருண்டுகிடக்கிறது
சூடும்சுரணையும்

சிங்கார சுகுமாறன்



# உருவங்களை விடவும் உள்ளமே உயர்ந்தது!
## கொண்டாடுவோம் நல்லுள்ளங்களை!

ஒருவரின் தோற்றத்தின் அடிப்படையில் உறவுகளை ஏற்படுத்தியிருந்தால் வாழ்க்கையில் பல அழகான உறவுகளை நாம் நிச்சயமாகத் தவறவிட்டிருப்போம். எந்தவொரு உறவிலும் சிறப்பான அழகானது அவரது இதயமேயாகும்.

நம்மில் பெரும்பாலானோர் கண்களின் தீர்ப்பை மட்டும்தான் நம்பியிருக்கிறோம். ஒருவரைப் பார்க்கும்போது, அவரின் உடல் நிறத்தையும் பிறப்பினாலுண்டான வித்தியாசமான உடற்பாகங்களையும், அவர்களின் கட்டுப் பாட்டிற்கு அப்பாற்பட்ட சூழ்நிலைகள் காரணமாக மாறியுள்ள உடற் கட்டமைப்பையும் மட்டுமே பார்க்கிறோம்.

இவ்வெண்ணங்களை நாம் மாற்றிக் கொள்ள முடியாதிருக்கலாம். ஆனால் ஒவ் வொரு மனிதனும் தன் இதயத்தில் சுமந்து செல்பவற்றைக் கட்டுப்படுத்த முடியும். மற்றும் ஒருவரின் உண்மையான அழகை அறிந்து கொள்வதற்கான வழி அவர்களின் இதயத்துட னான நம் இணைப்புதான்.

எப்போதுமே இதயத்தின் மூலம் மனிதர்களை அறிந்துகொள்ளவும் புரிந்துக் கொள்ளவும் முயற்சிக்க வேண்டும். இதயத்தை மதிப்பிடுங்கள், அது உடலினுள் வாழும் விலைமதிப்பற்ற செல்வம்.

**- சப்னா நஸீர்**
கெலிஓய்

# வா என்னை ஆரத் தழுவிக் கொள்ள...

உன்னிடம்
கையை நீட்டுகிறேன்
முகத்தைத் திருப்பிக் கொள்கிறாய்..
போலிச் சிரிப்புகளின் மத்தியில்
உன் கோடிப் புன்னகைகள் தான்
என் சந்தோசங்கள் என்பதை
நீ அறிந்தே இருக்கிறாய்..

விதியை மாற்றும்
வரமொன்று கிடைத்தால்
உன் வாழ்வின் எழுத்துக்களை
அழகாய்த் திருத்தி
நட்சத்திரங்களைப் பரிசளித்திருப்பேன்...

ஓ
இப்போதும் அதைத்தானே
செய்கிறேன் என்கிறாயா?
சின்னத் திருத்தம்
உன் பயிற்சிகளையும்
உன் குணங்களையும் தான்
என்னால் திருத்த முடிகிறது இப்போது..

பார்வைக் குறையென்கிறாய்
பக்குவமாய்ச் சொல்லித்தருகிறேன்.
கேட்கவில்லையென்கிறாய்
கேட்கும்படி வசதியளிக்கிறேன்.
திக்கித் திக்கிப் பேசுகின்றாய்
நானும் சிறுவயதில்
உன்னைப் போல் திக்குவாய் தான் என்று
பொய்யும் சொல்கிறேன்.

நடக்கச் சிரமபப்படுகிறாய்
ஊன்றுகோலாய் வருகிறேன்.
உன் கைகள் பிடித்து
எழுதவும் உதவுகிறேன்.
இன்னும்
கற்பதில் சிரமமென்றாய்
கற்கண்டாய்ப் பலமுறைத் தூவினேன்
உன் உள்ளத்தில் கல்வியை..

கற்றவை ஞாபகமில்லை என்கிறாய்
பரவாயில்லை
நான் இருக்கிறேன் கண்ணே என்கிறேன்..
இவைகள் மட்டுமா
இன்னும் சொல்கிறேன் கேள்
என் அன்பு மகளே
சில பொழுது தாயாகவும்
சில பொழுது தந்தையாகவும்
சில பொழுது தோழியாகவும்
சில பொழுது தாதியாகவும்
உனக்காய் மாறுகிறேன்..

உற்று நோக்கினாய் என்னை
உள்ளத்தால்
அன்பு கொண்டேன் உன்னை..

மூர்க்கத்தனமாய்
அடிக்க வருகிறாய் என்னை
வாயில் வடியும் எச்சிலைத் துடைத்து
வாரியணைக்க வா என்கிறேன் உன்னை..

வா அருகில் வா என் செல்லமே!
வாழ்வதற்குக் கற்றுத் தருகிறேன்..
உயிரில் கலந்த ஒற்றை ரோஜாவே
உன் சாதனைகள் தான் என் கனவுகள்..

கற்கிறேன்
தினம் தினம் உன்னைக் கற்கிறேன்.
உனக்காகக் கற்கிறேன்.
என்றும் உன் இனிய
ஆசானாய் நான் ஆகிறேன் -
வா என்னை ஆரத் தழுவிக் கொள்ள...

இம்தியாஸ் சாஹுல்
இலங்கை

## புன்னகை

நீ.
இருக்கும்
ஊரிலிருந்தே..!

இயற்கையை
ரசிக்க.
கற்றுக்கொள்...!

வறண்ட போன
பூமியும்.
வாழ்க்கையின் தத்துவத்தை
கூறாமல் இருக்காது...!

காய்ந்து போன
புற்கள் கூட
வானம் பார்த்தே
புன்னகைக்கும்.. !

அ. செல்வரரஜ். க. நா. ஊர்.
உடுமலைப்பேட்டை.

## காதலெனும் யாகம்

— ஜென்ஸி.

கண்களை மட்டும்
பார்த்துப் பேசு.
தாவணித் தென்றலில்
மெய்சிலிர்த்துப் போ.
பொய்கள் பேசக்
கற்றுக் கொள்.
அவளைத் தவிர. அதிசயம்
இல்லையென்று சொல்.

•

கவிதைகள் வரும்
பொறுத்துக் கொள்.
ஷெல்லியையும் விட்மனையும்
அழைத்துக் கொள்.
காலையும் மாலையும்
குறுஞ்செய்தி அனுப்பு.
மின்கலன் தீய்வதற்குள்
உரையாடல் முடி.

••

காதலியின் பிறந்த நாளில்
கண் தானம் செய்.
கிப்ட்டுக்கு அப்பாவிடம்
ஆட்டையைப் போடு.
தொங்கும் தோட்டத்தில்
பிளாட்டினம் பயிரிடு.
மொக்கை பிகர்களுக்கும்
தாராளமாய் உதவிடு.

•••

மாயா லோகத்தில்
சலிக்காமல் சஞ்சரி.
கனவு காணும் கண்களுக்கு
நன்றி செலுத்து.
தவிப்புகள் தின்று
தனிமையைச் சீரணி.
கடிகாரத்தின் முட்களை
ரோஜாக்களாய் எண்ணு.

••••

ரெஸ்டாரெண்ட் இருட்டில்
கற்பைக் கடைப் பிடி.
காதலியின் தோழியை
தங்கையாய் நினை.
நிக்கோட்டின் உதடுகளால்
முத்தமிடாதே.
பறக்கும் முத்தங்களை
பார்த்து அனுப்பு.

•••••

கடமையைச் செய்.
பலனை எதிர்பாராதே.
கடந்து போனாலும்
தளர்ந்து போகாதே.
தாடி வளர்த்து
சரக்கடிக்காதே.
நாவிதர்க்கும் வயிறுண்டு
மறந்து விடாதே.

••••••

# கனாக் கண்டேனடி தோழி

முப்பத்து முக்கோடித் தேவர்கள் புடைசூழ
மன்னனவன் என் மாளிகை வாசலில்
பொற்பாதம் பதித்திடக் கனாக்கண்டேன் தோழி!

மின்னல் அம்பெய்து மிடுக்காகத் தூதுவிட்டு
கவிநயம் சொட்டும் பாக்கள் பலநூறு
வெண்ணிலவின் மேலெழுதி
வெகுமதியாய்த் தந்துவிட்டான்.

விரல்களிலே காதலிசை விழிகளிலோ மாயவிசை
கொத்தும் இதழ்களும் சுவைத்தேனின் வசம்
குறும்புக்கார கொற்றவனும்  கொஞ்சிடவே வந்தானடி

அவன் சுவாசத்தின் கதகதப்பில் வெந்தழலும்
குளிர் காய நாணி நான் சிவக்க,
எனையள்ளிக் குங்குமமாய் இட்டானடி

விழி மொழியும் காதலை மொழிபெயர்க்க
உலக மொழிகள் எல்லாம்  தர்க்கிக்கும்
ஆலயங்கள்  அவன் பெயரை அர்ச்சிக்கும்

விண்வெளியில் மஞ்சமிட்டு,
வெண்முகிலில் மெத்தையிட்டு
தென்றலது கவரிவீச, கண்ணுறங்க நானும்
காதலைத்தான் போர்த்து விட்டான்.

தங்கத் தாரகையை வானவில்லில் தான் கோர்த்து,
மங்கலநாண் பூட்டிக் கைத்தலம் பற்றிடவேக்
கனாக் கண்டேன் தோழி!

– வஃபீரா வஃபி



# கல்லறைப் பூக்கள்



அதிகாலைப் பொழுதினிலே இதழ்கள் விரித்தே!
தடாகை மேலே தாமரை மலர்ந்திட!
பகலவன் கதிரொளி பூமியின் மடியிலே!
மழலையாய் தவழ்ந்து மண்டியிட்டு சிரித்திட!
கருத்த தேகமென முடித்த கூந்தலோடு!
முந்தானைச் சொருகி மூச்சினைச்  சிறையிட்டு!
வாசலில் கோலமிட்டே வஞ்சியவள் மிளிர்வாள்!
கைகள் இரண்டையும் உளியென மாற்றியே
சிற்பங்கள் செதுக்கிடும் உயிரின் தேடலவள்!
அழிந்த கோடுகளாய் அவளின் ரேகைகள்!
பொதிகளைச் சுமந்தே மங்கிடும் மடந்தையவள்!
அழியாத சுவடுகளாய் அவளது தடங்கள்!
உணவினைப் படையலிட்டு உண்ணாத நோன்பவள்!
காலமெல்லாம் கனவாய் கலையாத சோகங்கள்!
நெற்றியின் சிரிப்பிலே போட்டிடும் தாளங்கள்!
ஏரியின் படிகளாய் ஏற்றியே நாளுமே!
குறிகளாய்க்  குனிந்தே குருடானத்  தேகமவள்!
உணர்வினைச் சிறையிட்டே உள்ளமதைக்  காவலிடும்!
கணநேரம் கண்ணிமைக்கா கண்ணாடி வளையலிவள்!
கொலுசொலியின் சிணுங்கலும் சிதறியே மடிந்திடும்!
பேதையின் பெருமூச்சில் பெருங்காயம் அடைந்திடும்!
கட்டியவன் கண்ணசைக்க தொட்டபணி விட்டிடுவாள்!
வள்ளுவனின் வாசுகியாய் தெள்ளுத்தமிழ் பேசிடுவாள்!
எரிமலைக் குழம்பென ஏக்கமது நிறைந்தாலும்!
கண்ணீரில் கதையெழுதி கவிதையாய் வடித்திடுவாள்!
விறகுகள் சுமந்தே சருகென உதிர்ந்திடும்!
விழுதுகள் சுமந்திடும் வேரென வாழ்ந்திடுவாள்!
விதியின் சதியென்று மதியினைப் புதைத்தே!
காய்ந்தே கருகிடும் கல்லறைப் பூக்களிவள்!

இரா. இராதை கண்ணன்

# எப்படியோ வந்து சேர்ந்தது !

என் வீட்டுக் கொல்லைப்புறத்து
கிணற்றில் பெய்த பெருமழைக்கு
தண்ணீர் மேலெழுந்து நின்றது.
ஆழமான கிணறு என்றாலும்
இன்னும் பதினைந்து அடிகளே
நீர் நிரம்பினால் கைகளால்
அள்ளிக் குடிக்கலாம்.
மகிழ்வோடு கிணற்றை நோக்கினேன்...
சுற்றுச்சுவர் கல் கட்டட இடுக்கில்
கூடு கட்டியக் குருவிகள்
குறுக்கும் நெடுக்குமாய்ப் பறந்து
இயல்புநிலை இழந்து
பரபரப்பாய்க் கூச்சலிட்டபடி இருந்தன !
குனிந்தபடி உற்று நோக்கினேன்...
சிறகு முளைத்து பறக்கும் நேரத்தில்
குருவிக்குஞ்சு கிணற்று நீரில்
தத்தளித்துக் கொண்டிருந்தது
பதைபதைத்துப் போய்
கிணற்றுக்குள் அனுப்பிய வாளிக்குள்
எப்படியோ வந்து சேர்ந்தது...
குருவிக்குஞ்சுடன் எப்போதோ
தாத்தா தொலைத்த
மூக்குக் கண்ணாடியும் !

– கா. ந.கல்யாணசுந்தரம்
சென்னை

## தன்முனைக் கவிதைகள்

நேர்மையின் கண்ணியம்
நேரினில் பகிர்வது
துரோகத்தின் பதிவுகள்
முதுகினைப் பிளப்பது.

- நயினைமைந்தன்

தயங்கித் தயங்கி
நின்று விடுகிறேன்
மனைவி சொல்லே
மந்திரம் அல்லவா...

- சா.கணேஷ் குமார்

விலகினால் நெருங்குவதும்
நெருங்கினால் விலகுவதும்
ஒன்றும் புரியவில்லையடி
உன்ஊடல் விளையாட்டு.

- கவியோகி கருணாகரன்

மீண்டும் பேசிட
ஆவலோடு இருந்தேன்
மாண்டு போனவரோடு
எப்படி பேசுவேன்

- க.குணசேகரன்

மௌனத்தில் சொற்களை
முடக்கி வைக்காதீர்
கருத்துகள் பரிமாற்றம்
காயத்திற்கு மருந்திடும்.

- வா.சண்முகம்.

தேடாமல் கிடைத்த
தேவலோகப் பொக்கிஷம் நீ
தொலைத்தப் பின்பு தான்
புரிந்துத் தவிக்கிறேன்

- கவிநிலா மோகன்
தஞ்சாவூர்.

# மழை

மழை
கடவுளின்
அற்புதமான படைப்பு

சாரல் மழையில்
நனைந்த காற்று
தென்றலாய் வீசுகிறது....

மழை கொட்டும் சத்தம்
புதியதோர் இசை அமைகிறது

விண்ணிலிருந்து அதிவேக சப்தமாய்
ஒலிக்கும்  இடியும்
மழையின் இசையமைப்பு தானோ

மழைநீரில் பறவைகள் குளித்து
உற்சாகக் குரலில் பாடும் பொழுது
மழையின் இசை அமைப்புக்கு
பாடலாய் கேட்கிறது

மழை எனும் இசை
நம்மையும் நிசப்தம் ஆக்கும்
அழகிய மௌன ராகம்

மழை நீரில் நனைந்து
மரங்கள் தலையாட்டி
புன்னகைக்கிறது

எல்லோர் மனதும்
மழையில் நனைய மன்றாடி கெஞ்சுகிறது

மழை வரும் போது
பூக்களின் நறுமணத்தை விட
அதிக வாசனையை தரும் மண்வாசனை

அந்த வாசனையுடன்  கலந்து
நம் மனமும் பூக்கின்றது

மழை என்றுமே
சொல்லப்படாத ஒரு அதிசயமே

**ஜெ.அனிதா வலங்கைமான்**





# அக்கினிச் சிறகுகள்

## திங்களிதழ் அறிமுகம்

அக்கினிச் சிறகுகள் வாட்ஸ்அப் குழுமமானது கடந்த 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நான்காம் திகதி அதன் நிறுவனரும் ஒருங்கிணைப்பாளருமான சப்னா நஸீர் அவர்களினால் ஆரம்பிக்கப்பட்டு சிறப்பான முறையில் இன்றுவரை வெற்றிநடை போட்டுவருகிறது.

வட்ஸ்அப் குழும உறுப்பினர்களின் எழுத் தாற்றலை மேம்படுத்தும் வகையில்; அவர்களால் எழுதப்படுகின்ற ஆக்கங்களை சேகரித்து இதழ் வடிவில் மாதந்தோறும் வெளிக் கொணரும் பயணத்தை கடந்த 2020ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் திகதி தொடங்கி அக்கினிச் சிறகுகள் மின்னிதழாக இன்று வரை 8 இதழ்கள் வெளிவந்துள்ளது.

குழுமத்தின் நிறுவனரும், ஒருங்கிணைப்பாளரும் இதழின் ஆசிரியருமான

**சப்னா நஸீர்**

அவர்களுடன் இணைந்து

நிர்வாகக்குழு அங்கத்தவர்களான

**நபீல் அபாபீல், இம்தியாஸ் சாஹுல், ஸைன் மர்சூக், அய்யாஷ், ரிஸ்னியா ஆப்தீன், அருபா அஃலா, ஹப்ஸா பஹுமீர்**

இவர்களோடு

முகநூல் பக்கப் பொறுப்பாளராக

**சகோதரர் ஸக்கி அஹமட்**

மற்றும், வடிவமைப்பாளராக

**ஸைன் மர்சூக்**

ஆகியோர் செயற்பட்டு வருகின்றனர்.

இதழில் உள்ளடக்கப்பட்ட சகல அம்சங்களும் மிகச்சிறப்பான முறையில் திட்டமிடப்பட்டு வடிவமைக்கப் பட்டிருப்பது பாராட்டுக்குரியது. ஒவ்வொரு ஆக்கமும் அதன் பின்னணியில் பொருத்தமான படங்களுமென வாசகர் மனதை ஈர்க்கும் விதமாக, நிறைவாகவும் தரமாகவும் உள்ளது.

நிறைய எழுச்சியான ஆக்கங்களையும் களமிறக்கி வாசிப்போருக்கு தெம்பையும் ஊட்டி சோர்ந்து போன மனங்களில் புத்துணர்வு பெருகச் செய்யும் பணியை நிர்வாகக் குழு திறமையாகச் செய்து வருகிற தென்று சொல்லலாம். ஆக்கத்தேர்வுகள் அருமை!

பத்திரிகை என்பது எல்லோருக்கும் செய்திகளை கொண்டு சேர்க்கும் எளிய ஊடகம். அது பலதரப்பட்ட மக்களையும் சென்றடைவதால் மதத்துக்கோ இனத் துக்கோ உட்பட்ட வரையறையில் மட்டும் நின்று விடாமல், எல்லோரையும் உள்வாங்கிக் கொண்டு எல்லோருடனும் கரங்கோர்த்து பயணித்தல் சாலச் சிறந்ததாகும். இதைக் கருத்தில் கொண்டால், இது ஓர் இஸ்லாமியப் பத்திரிகை என முத்திரை குத்தப்படாமல் வெற்றிப்பாதை நோக்கி செல்லலாம். மேலும், கதைக்களங்களும் இஸ்லாமிய பின்னணியை மட்டும் கொண்டிருப்பதை தவிர்த்தால் சிறப்பாக இருக்கும். மற்றும் புதியவர்களை உள்வாங்கி கரம்கோர்த்துக் கொள்வது, இன்னும் சிறப்பு சேர்க்கும். அக்கினிச் சிறகுகள் தமிழ் இலக்கியத்துறையில் திடமாக நின்று சாதிக்க தமிழ்நெஞ்சம் வாழ்த்துகிறது.

அக்கினிச் சிறகுகளோடு கைகோர்க்க விரும்பிய வர்கள் உங்கள் எழுத்துக்கான களத்தையும் உங்கள் திறமைகளை வெளிக்காட்டக் கூடிய களமாகவும் அக்கினி குழுமத்தில் இணைந்து செயற்படலாம். இளம் எழுத்தாளர்களுக்கான திறந்த வாசல்.....

அக்கினிச் சிறகுகள் மின்னிதழினைப் பெற்றுக் கொள்ள மற்றும் வாட்ஸ்-அப் குழுமத்தில் இணைந்து கொள்ள +94765325884 எனும் இலக்கத்தின் வாயிலாகத் தொடர்பு கொள்ளவும்.

Email : akkinisirahuhal2020@gmail.com
Facebook : https://www.facebook.com/akkinisirahuhal/

**சாதிக்கத் துடிக்கும் இளம் எழுத்தாளர்களின் சஞ்சிகை**

# ஓர் இதய நாட்குறிப்பிலிருந்து...!!



முப்(f)ரா பின்த் கமர்தீன்
தங்காலை

பெண்ணானவள் சிறுபிராயம் தொட்டு தாய், தந்தையின் அரவணைப்பில் வாழ்கின்றாள். தாயை விட தந்தையின் அன்பில் அதிகம் ஈர்க்கப்படுகின்றாள். இளவயது தொடக்கம் வீளஎ-ஐழிஆள வயதை தாண்டியும் அவளுக்கு பெரிதாய் தெரிவது தந்தையின் அன்பு மட்டுமே..

தந்தையின் ஒவ்வோர் அசைவையும் பின்பற்றத் தொடங்குகிறாள்.

அவளுக்கு அவளது தந்தை தான் hero - role model எல்லாமே...

தந்தையின் வீரம், தைரியம் எல்லாம் அவளுக்குள் பிரதிபளிக்கும் போது வீரமங்கையாய் உணர்வாள்..

தந்தையின் அன்பு மழையில் நனையும் போது தேவதையாக மாறுவாள்.

வீளஎஐழிஆளஷெ பருவத்தினருக்கு எதிர்ப் பாலினர் மேல் ஏற்படும் ஓர் ஈர்ப்பு அவளுக்கு மட்டும் ஏற்படாமல் இருந்ததற்கு காரணம் ‘தன் தந்தையின் அன்பிற்கு இணையில்லை’ என்ற மன உறுதி விரும்புவதாய் கூறிய அத்தனை உள்ள ஙகளையும் புறக்கணித்து விட்டது.. தந்தையின் அன்பு அவளது உள்ளத்தில் நிறம்பிருந்தது..



தனக்கு கிடைத்த நெருங்கிய தோழனாய் தந்தையைப் பார்த்தாள். அவளது இதய ஏட்டில் பதியப்படும் உளக்குமுறல்கள், பிரச்சினைகள், நினைவுகள் மற்றும் உணர்வுகள் அனைத்தும் கண்ணாடி போல் தந்தைக்கு பிரதிபளித்தது.. ஆம், அன்று அவள் கண்ணாடியாக மாறியிருந்தாள்.. தந்தையிடம் அனைத்தையும் மறைவின்றி கொட்டித் தீர்த்தாள்.. செய்த தவறுகளை தானே முன் வந்து கூறி, திட்டையும் வாங்கிக் கொள்ளும் குறும்புக்காரி அவள்..

தந்தையுடன் மனம் விட்டு பேசிக் கொண்டு நீண்ட தூரம் நடைப் பயணம் மேற்கொள்வதில் அவளுக்கு அளாதிப் பிரியம்..

தந்தை உடனிருந்தாலே போதும் அவளது முகத்தில் புன்னகை மலர் என்றும் வாடாது... படிப்பிற்காக அயலூர் விடுதியில் தங்கியிருந்த போதும் தந்தையின் முகங்காண வார விடுமுறைகளுக்கு ஓடோடி வருவாள்.. தந்தையுடன் நிறைய பேசனும்.. அதிக நேரத்தை அன்பான உறவுடன் கழிப்பதில் தங்கியிருந்தது அவளது அத்தனை சந்தோசங்களும்... அவளது தந்தைக்கு ஒரு பிரச்சினையென்றால் நீண்ட பிரார்த்தனைகள் அழுகையுடன் இருகரம் ஏந்தத் தவறுவதுமில்லை..

தந்தைக்கும் மகளுக்குமான உறவுப்பாளம் அன்பு எனும் முடிச்சால் இருகப் பிணைந்திருந்தது..

தந்தையின் எதிர்ப்பார்புகளையும் கனவுகளையும் நிறைவேற்ற மலரத் துடித்துக் கொண்டிருந்த மொட்டவள்..

தனது தந்தையின் கனவுகளை மெய்ப்பிக்க படிப்பில் கெட்டிக்காரியாய்த் திகழ்ந்தாள்.. வறுமையிலும் பல வெற்றிகளை தனதாக்கிக் கொண்டாள்.. தந்தையின் ஊக்கமளிக்கும் வார்த்தைகளில் கருமையும் வறுமையும் துமியாய்த் தெரிந்தது அவளுக்கு..

காலங்கள் உருண்டோடின..

தாய், தந்தையின் உறவில் ஏற்பட்ட சில விரிசல்கள் அவர்களுக்குள் பிணக்கினை தோற்றுவிக்கத் தந்தை இரண்டாவதாக ஒரு துணையை கரம்பிடித்து விட்டார்.. கரம் பிடித்து, அவர்களுக்கு கல்வி பயிலும் வயதில் இரு பிள்ளைகளும் இருக்கும் பட்சத்தில் அச்செய்தி அவளை எட்டி மிரள வைத்தது..

அதை ஏற்றுக் கொள்ள முடியாமல் தவித்துப் போனாள்..

அழுதாள்...

கதறினாள்...

பல இரவுகள் உறக்கத்தை தொலைத்தாள்..

தனது அன்பு இன்னொரு பிள்ளைக்குச் சொந்தமானது அவளுக்கு மிகுந்த வேதனையளித்தது...

அன்பை கூறுபோடுவதற்கு இது என்ன பங்குடமை வியாபாரமா???

முதன் முதலில் உயிராய் நேசித்த உறவை இழந்து துடியாய் துடித்தாள்..

வெறுக்கவும் முடியாமல் ஒதுக்கவும் முடியாமல் விட்டுப் பிரியவும் முடியாமல் களங்கிப் போனாள்..

இரத்த உறவை துண்டித்து இவ்வுலகில் வாழ்வது இறைவனின் சாபத்தை பெற்றுத் தரும் என்பதில் உறுதியாய் இருந்தவளுக்கு அந்த அதிர்ச்சியில் இருந்து மீள பல வருட கால அவகாசம் தேவைப்பட்டது..

வாழ்வில் எதிர்கொண்ட முதற் போராட்டத்தில் இவள் தோற்பாளா?

~~மலரத் துடிக்கும் மொட்டுக்குத் தெரியாது, மலர்ந்தால் மரணமென்று...~~

இதய ஏட்டின் அடுத்த பக்கம் புரட்டப்படுகிறது

# அன்றும் இன்றும்

**அறையுமா டரங்கும்படப் பிள்ளைகள்**
**தறையில் கீறிடத் தச்சருங் காய்வரோ**
**இறையும் ஞானமு மிலாதவென் புன்கவி**
**முறையின் நூலுணர்ந் தாரும் முனிவரோ!**

*(கம்பராமாயணம் பாயிரம் ஒன்பதாம் பாடல்)*
*இன்றையநிலையில் இந்தப் பாடலுக்கான தெளிவுரை இந்தக்கவிதை!*

மேடைகள் தேடிப் பாடுகிறார்கள்
பாட விட்டுப் பாருங்கள் !

எழுதும் வாய்ப்பால் எழுதுகிறார்கள்
எழுதவிட்டு ரசியுங்கள்!

விருதுகள் நூறு பெறுகின்றார்கள்
பெறட்டும் என்று போற்றுங்கள்!

சான்றிதழ் ஆயிரம் வாங்குகிறார்கள்
வளரட்டும் என்று வாழ்த்துங்கள்!

அந்தக்காலக் கவிஞர்கட் கெல்லாம்
இந்தக்காலக் கொடுப்பினை இல்லை
இந்தக் காலம் இவர்கள் காலம்
வெல்லட்டும் நமது வீட்டுப் பிள்ளை!

மரபோ புதிதோ துளிப்பா வினமோ
கவியே இல்லா காட்சிக் கிறுக்கலோ
அவரவர் திறமை அவரவர் பெருமை
எதுவரு தோவதில் இயங்குதல் உரிமை!

சரியானதென்றும் சரியில்லை என்றும்
நிறுக்கின்ற உரிமை நமக்கிங் கில்லை!

புடைப்பதைப் புடைத்து விடுப்பதை விடுத்து
எடுப்பதை எடுத்து கொடுப்பதைக் கொடுத்து

காலம் மட்டுமே கவனப்படுத்தும்
எனக்கும் உனக்கும் ஏனிதில் வருத்தம்?

கம்பனை வெல்லவோர் கவிஞனே இல்லை
பின்பற் றலாமப் பெருங்கவி சொல்லை!

**- பொற்கைப்பாண்டியன்**

# உலகப் பண்பாட்டின் வேர் தமிழ் இலக்கியம்

முத்து ரத்தினம்

"வடதிசை கங்கையும் இமயமும் கொண்டு, தென்திசை ஆண்ட தென்னவன் வாழி" - இது இளங்கோவடிகளால் காட்டப் பெறும் இமய வெற்றி.

இராச ராச சோழனும், ராஜேந்திர சோழனும் தரைபடையும் கப்பற்படையும் வைத்திருந்தனர். கங்கைவரைபடையெடுத்து கங்கைகொண்டான் என்றும், கடாரத்தை வென்றதால் கடாரம் கொண்டான் என்றும் பெயர் பெற்றவர்கள்.

சேரன் செங்குட்டுவன், தமிழர்களைப் பழித்துரைத்த கனக விசயனை வென்று, அவர்கள் தலையிலே கல்சுமத்தி, - கண்ணகிக்குச் சிலை அமைத்தவன் வெற்றித் திருமகன்களாக வாழ்ந்தவர்கள் தமிழர்கள். புலி, வில், மீன் கொடிகளை இமயத்திலே பொறித்தவர்கள் தமிழர்கள்.

பூம்புகார்த் துறையிலே முத்தும், பவளமும், மணியும், மிளகும், அரபு நாட்டுக் குதிரைகளும் நிறைந்திருந்தன./ உலகுக்கு வணிகத்துறையாக விளங்கியது பூம்புகார்.

"ஒன்றே குலம்; ஒருவனே தேவன், யாதும் ஊரே யாவரும் கேளீர்" பகுத்துண்டு பல்லுயுர் ஓம்புதல், நூலோர் தொகுத்தவுற்றுள் எல்லாம் தலை - என்ற உயர்ந்த நாகரீகத்தை உலகுக்குப் பரப்பியவன் தமிழன். "முச்சங்கம் வைத்து முத்தமிழ் வளர்த்து, உயர் தனிச் செம்மொழி தமிழ் என டாக்டர் கால்டுவெல் அவர்களால் பாராட்டப்பெற்ற மொழியை உடையவன் தமிழன்.

ஆனால், பின்னாளில் அவன் பின்னடைந்து விட்டான். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்றது போய் - ஓராயிரம் சாமிகளும், ஓராயிரம் சாதிகளும் படைக்கப்பட்டன. சமுதாய ஒற்றுமை உடைக்கப்பட்டன. ஏழடுக்குக் கோபுரம் வைத்துக் கோயிலைக் கட்டிய ஏற்றமிகு தமிழ் அரசர்கள், எழுத்தறிவு பெறத் தமிழ் மக்களுக்கு எத்தனை பாடசாலைகள் அமைத்தார்கள்? கல்வி கண் ஒளியைத் தமிழ் மக்கள் பெறவே இல்லை. கண்ணிருந்தும் குருடர்களாய் வாழ்ந்தார்கள்.

வாழ்க்கை என்பது தேடல்; அலை நடுவில் போராடிக் கரை சேருவது தான் வாழ்க்கை.

ஒரு காலம் இமயம் முதல் குமரி வரை தமிழ் நாடாக இருந்தது. மாற்றார்கள் பலர் படையெடுத்து பற்றிக் கொண்டார்கள்.

இடையில் வந்த எல்லை தான் வடவேங்கடம் தென்குமரி. சிந்து வெளி நாகரிகம், தமிழர் நாகரிகம் என்பன போன்ற தமிழர்களின் சரிவுகள். தமிழ் அரசர்களுள் ஒற்றுமை இல்லை. எனவே வந்தேறிகளுக் கெல்லாம் தமிழர்கள் அடிமை ஆயினர்.

ஆனால், தமிழ்மொழி வந்தவர்களை அடிமை ஆக்கியது. அவர்கள் தமிழைக் கற்றார்கள். தமிழிலேயே தங்கள் சமய இசைவுக் கருத்துக்களை வழங்கினார்கள். இலக்கியக் கொள்கையும் தமிழ் வழிக் கண்டார்கள். தமிழ் அவர்களை வென்றது.

தமிழர்கள் அடிமையாகி இன்று ஆங்கிலத்தைக் கட்டித் தழுவுவதைப் போல அன்று வந்தவர் மொழிகளுக்கெல்லாம் வாழ்வளித்தார்கள். உழவர்கள், பாமரர்கள் தான் தமிழ்மொழியைக் காத்தார்கள். தமிழ்ப் புலவர்கள், கவிஞர்கள் தங்கள் கடமைகளைச் செய்தனர். காலந்தோறும் தமிழில் இலக்கியம் படைத்தனர். அரசுப் படைகளுக்கு மேட்டுக் குடியினர் வந்தவர் தாள்கள் பணிந்து வாழ்ந்து ,தமிழகத்தைப் பிறர்க்கு அடிமை ஆக்கினர்.

இப்படி ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் அடிமைப்பட்ட தமிழர்கள் ஆங்கிலேயர்கள், பிரஞ்சுக்காரர், பல நாட்டினர் ஆட்சி ஆதிக்கத்தின் போது அடிமைக் கூலிகளாக தென் ஆப்பிரிக்கா, மொரீசியசு, மலேசியா, பிஜூ போன்ற நாடுகளுக்கு அனுப்பப் பட்டனர். பர்மாவில், இலங்கையில் தமிழர்கள் படாதபாடுகள் பட்டனர். கண்ணீரும், செந் நீரும் வடித்து, சென்ற நாடுகளை செழுமை செய்தனர்.

குமரி முதல் இமயம் வரை தமிழ் நிலம், ஆதி இனம் தமிழினம், ஆதிமொழி தமிழ்மொழி, மூன்று சங்கங்கள், ஐம்பதாயிரம் ஆண்டுகட்கு முன்பே தமிழ், வளம் கொழிக்கும் மொழியாக இருந்தது. உலகப் பண்பாட்டின் வேர் தமிழ் இலக்கியம். ■

# கோபம்

கோப உணர்ச்சி என்பது எல்லா மனிதர்களுக்கிடையிலும் ஏற்படக்கூடிய ஒரு செயலாகும்.


இருமனிதர்களுக்கிடையிலான புரிந்துணர்வின்மை, சந்தேகம், வலி கவலை, நம்பிக்கையின்மை என்பவற்றின் மூலம் இவை ஏற்படுகின்றன.

இதனால் பகை, குரோதம், சண்டை உறவுகள் முறிவு என்பன உறவுகளுக்கிடையே வருகின்றன.

கோபம் ஏற்படும் போது உடலில் ஊக்கிகள் (hormones) சுரக்கப்பட்டு செயற்படுகின்றன. மேலும் கோபம் கவலை ஏற்படும் போது மூளையிலுள்ள கலங்கள் அழிவடைக்கின்றன.

உளவியளார்களின் கருத்துப்படி "**கோபம் மோசமான உணர்வல்ல என கூறுகிறார்கள்.**" கோபத்தை வெளிக்காட்டும் விதத்தில்தான் அதன் விபரீதங்கள் தங்கியுள்ளது. (தேவையற்ற வார்த்தை பிரயோகம், தேவையற்ற செயற்படுகளில் ஈடுபடுதல்) .

யதார்த்த நிலையில் இருந்து கோபத்தை நோக்கும்போது கோபம் ஏற்படும் போது மனிதர்கள் சுயாதீன நிலையில் இருந்து விலகுகிறார்கள். [hormones (ஊக்கிகள்) இன் தாக்கத்தினால்] அதன் போது பேசும் வார்த்தைகள், நடவடிக்கைகள் தன்னையறியாமலே நிகழ்கின்றன. இவ்வாறான விடயங்கள் கோபத்தில் நிகழ்ந்தாலும் மனிதன் சுயாதீன நிலையை அடைந்ததும் இரு உறவுகளும் இணைந்து மன்னிப்பு கேட்டுக் கொள்வதன் மூலம் கோபம் இல்லாமல் போகின்றன.



**பஹ்ரியா பாயிஸ்**
ஹெம்மாதகம



இலங்கையில் நடைபெற்ற நுட்பக் குழும விழாவில் பங்கேற்க வந்திருந்த தன்முனைக் கவிஞர் கா.ந. கல்யாண சுந்தரம் (இந்தியா) தமிழ்நெஞ்சம் ஆசிரியர் அமின் (பிரான்சு) பேராசிரியர் செ. யோகராசா ( இலங்கை) ஆகியோரோடு பாவேந்தல் பாலமுனை பாறூக்.

# பாவேந்தல் பாலமுனை ஃபாறூக் அவர்களுடன்...

**நேர்கண்டவர் : தமிழ்நெஞ்சம் அமின்**

## நேர்காணல்




ஊவா வானொலியில் இடம் பெற்ற கவியரங்கிற்கு தலைமை யேற்ற பின் பங்கு கொண்ட கவிஞர்களோடு..

இலங்கையின் தலைசிறந்த கவிஞர் களில் ஒருவர், சிறந்த எழுத்தாளர், சிந்தனையாளர் என பல சிறப்புகளும் பன்முகத் திறமையும் கொண்ட இலக்கிய வாதி நீங்கள். உங்களைப் பற்றிய சிறு அறிமுகத்துடன் ஆரம்பியுங்கள்!



இலங்கை அம்பாரை மாவட்டத்தில்- பாலமுனையில் மீராலெவ்வை மரைக்கார் முஹம்மது லெவ்வை, ஆதம்லெவ்வை முஹல்லம் அலிமாநாச்சி தம்பதியினரின் புதல்வன்.

பாலமுனை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை, மட் / மெதடிஸ்த மத்திய கல்லூரி, கல்முனை ஸாஹிறா கல்லூரி என்பவற்றின் பழைய மாணவன்.

இலங்கை வங்கியில் 1977ம் ஆண்டில் கனிஷ்ட இலிகிதர் / உதவிக் காசாளராகச் சேர்ந்து 2013ம் ஆண்டில் முகாமையாளர் தரத்தில் பணிஓய்வு பெற்றவன்.

கலை இலக்கிய முயற்சிகளில் நகைச்சுவை, மேடை அறிவிப்பு என ஆரம்பித்து, கலை இலக்கியத்தின் பல் வேறு துறைகளிலும் ஐம்பது வருடங் களுக்கும் மேலாக இயங்கி வருபவன்.

தந்தையின் வழியில், சமூக நலன் சார்ந்த நடவடிக்கைகளில் பள்ளி வாசல் தலைவராக, கிராமோதய சபைத்தலைவராக, மத்தியஸ்த சபை உறுப்பி னராக, அகில இலங்கை சமாதான நீதிபதியாக என்று பல தளங்களில் இயங்குபவன் என்று குறித்துக் கொண்டு தொடரலாம்.

ஆரம்பத்தில் வங்கியில் பணியாற் றிய அனுபவத்தைப் பகிருங்களேன்!

இலங்கை வங்கியில் நான் சேர்ந்த 1977 காலப்பகுதியில் கணினி வசதிகள் இருக்கவில்லை. பேரேடுகள் இருந்தன. அதனை தூக்கி எடுத்துவைத்துப் பதிவதே சிரமமாக இருக்கும். பதிவேடுகளைப் பதிவது, பரீட்சை மீதிகள் தயாரிப்பது, சமப்படுத்துவது, அறிக்கைகள் தயாரிப்பது என்பன அப்பொழுது கஷ்டமான பணியாகவே இருந்தது. இப்போது கணினி அப்பணிகளை மிக இலகுவாக்கி இருக்கின்றது.

வங்கியில் சேர்ந்த புதிதில், விவசாயக் கடன்களை அறவிடும் வெளிக்கள உத்தியோகத்தராகவும் நான் நியமிக்கப் பட்டிருந்தேன். வீடு, வீடாகச் சென்று கடன்களை அறவிட வேண்டிய கடமைப் பொறுப்பும் எனக்கிருந்தது. சூறாவளி கோரத் தாண்டவமாடி ஓய்ந்திருந்த சில மாதங்களின் பின், கடனை அறவீடு செய்வதற்காக நான் சென்ற பொழுது கண்ட காட்சி கதி கலங்க வைத்தது. கடனைக் கட்ட முடியாமல் இருப்பதற்கான காரணங்களைக் கேட்டபோது நெஞ்சம் நெகிழ்ந்தது. அப்போது அது ஒரு கவிதையாக நெஞ்சுக் குள் ஊற்றெடுத்தது. இன்னும் என் நினை வில் நிற்கும் அக்கவிதை இது...

“இன்னும் கடனை ஏன்தீர்க்க வில்லை”யென
உன்னி டத்தில் கேட்டேன்நான்
ஓ...!ஏன் அழுதாயோ?
எல்லோ ரிடத்தும் இயம்புதலைப்
போலேதான்
சொல்லி வைத்தேன் உன்னிடத்தும்
சோகமேன் கொண்டாய்நீ?

சூறாவளி வந்து சுழன்றடித்து
உங்களது கூரையினைப் பிய்த்து
குடிசைகளைச் சீரழித்துப்
பேராபத்தைத் தந்த
பெருங் கஷ்டம் சொன்னாய்நீ!




தோட்டுப்பாய் மூத்தம்மா நவீன கவிதை நூலுக்கான அரச சாஹித்ய மண்டல விருதை அப்போதைய கலாசார அமைச்சரிடமிருந்து பெற்ற போது..

தீராப் பிரச்சினைகள் சொல்லி
யழுதுநின்றாய்!

"அப்பா இறந்து விட்டார்
அண்மையிலே" என்றுரைத்தாய்
அப்படியே பயிர்களதும்
அதைத் தொடர்ந்த வெள்ளத்தால்
செத்து மடிந்து சீரழிந்து போனகதை
செப்பி யழுதேநீ சிந்தை கலங்கி நின்றாய்!

உன்னைநான் நோவிக்க
ஒருபோதும் எண்ணவில்லை
என்றன் கடமையிது இதனால்
உனைக் கேட்டேன்.
என்னைநீ தவறாக ஏதும்
நினைத் திருந்தால்
பெண்ணே மறந்துவிடு
பிழை செய்ய வில்லை நான்!

**இலக்கியத்துடன் உங்கள் வாழ்வை இணைத்துக் கொண்டது எப்போது? எப்படி?**

பாடசாலைக் காலத்தில் இருந்தே பேச்சு, விவாதம், நாடகம் போன்ற துறைகளில் ஆசிரியர்களின் ஒத்துழைப்போடு ஈடுபாடு காட்டி வந்தேன். மட் / மெதடிஸ்த கல்லூரியில் படிக்கும் போது எனது "ஹோல்டம்" இல்லத்திற்காக விவாத, பேச்சுப் போட்டிகளில் பங்குபற்றி பரிசுகள் சான்றிதழ்களைப் பெற்றிருக்கின்றேன்.

அதன் தொடர்ச்சியாகவே எழுத்துலக முயற்சிகள் அமைந்து வந்திருக்கின்றன. எழுபதுகளில், "சிந்தாமணி"யில் நகைச்சுவை எழுதிப் பரிசு பெற்று, அதன்பின்

“தினபதி”யில் கிடைத்த கவிதாமண்டலம் பகுதியைப் பயன்படுத்தி அறிமுகம் பெற்றதனூடாக எனது படைப்பாக்க முயற்சிகள் தொடர்கின்றன.

எழுத்துலகில் பேசப்படும் ஒருவராகத் திகழ்கிறீர்கள். ஆரம்பத்தில் உங்கள் எழுத்துக்களுக்கு கிடைத்த வரவேற்பு எப்படி இருந்தது?

இப்போது போல அப்போது பிரசுர வசதிகள் நிறைந்திருக்க வில்லை. இலங்கை யில் வெளிவந்த சில தினசரிப் பத்திரிகைகள், அவற்றின் வார வெளியீடுகள், சில சஞ்சிகைகள் இலங்கை வானொலி என்பனவற்றையே நமது படைப்புகளை வெளியிடுவதற்கு நம்பியிருக்க வேண்டிய நிலை இருந்தது. என்ற போதிலும், எனது படைப்புகள் இலங்கையில் வெளியான பெரும்பாலான பத்திரிகைகள், சஞ்சிகைகளில் இடம் பெற்றிருக்கின்றன. பத்திரிகை சஞ்சிகை களில் ஆசிரியர்களாக இருந்தவர்கள், பிரபலம் பெற்ற எழுத்தாளர்களாகவும், கவிஞர்களாகவும் இருந்தார்கள். தரமான படைப்புகளும் வெளி வந்தன.

எனது படைப்புகளுக்கும் சிறந்த வரவேற்புக்கள் கிடைத்தன. பத்திரிகை ஜாம்பவான் எனப் புகழ் பெற்றிருந்த தினபதி, சிந்தாமணி ஆசிரியர் எஸ். டீ. சிவநாயகம் ஐயா அவர்கள், சிந்தாமணி வாரப்பத்திரிகையில் எனது «சிவப்புக் கோடு «என்ற கவிதையைப் பிரசுரித்துப் பாராட்டி இருந்தார். அவருடைய காத்திரமான குறிப்பும் பாராட்டும் என்னை எழுத்துத் துறையில் ஊக்குவித்தது. அந்தக் கவிதை, அன்றைய இக்கட்டான பயங்கரவாத சூழல் குறித்து நானெழுதிய கவிதை.

கவிதை இதுதான்..

விடிந்து விட்டது
வெளிக்கிட வேண்டுமே!

இல்லத் தரசியே இங்குவா,
இப்படி பிள்ளையைக் கொண்டு வா
முத்தம் கொடுத்திட..!

கன்னம் இங்கே காத்திருக் கின்றது
இன்னுமோர் முத்தம்
எனக்கிடு இச்சென..!

வேலைக்கென்று நான்
வெளிக்கிடப் போகிறேன்
போருக் கென்று புறப்படல் போலது!

அடையாள அட்டை
அதனையும் கொண்டுவா
தடைகள் பற்பல
தாண்டிட வேண்டுமே!

கொண்டுவா இப்படி
கோப்பியைப் குடிக்கிறேன்
சென்று முடிக்குமோ
செல்கிற வாகனம்..?

செல்லும் வழியில்
அதிரடி, எதிரடி
எதிரெதிர் கொள்ளுமோ?
அதிலெதில் பட்டுநான்
இறையடி செல்வதோ?

சாதனை புரிந்த வீரனாய் நானும்
காரியாலயம் போய் அடைவேனோ?
காரியாலயப் படிகளைத் தாண்ட
நேரம் ஒன்பதைத் தாண்டி அங்கும்
“சிவப்புக் கோடு” சிக்னல் செய்யுமோ?

காவியங்கள் படைப்பவர்களை மிக அரிதாகவே இப்போது காணக்கூடியதாக

டாக்டர் பி .அருணகுலசிங்கம் ஐயா அவர்களின் பொன்விழாவில் கவிதை வாசித்த பின்னர், அவர்களால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்ட நிகழ்வு



உள்ளது. அப்படி இருக்கையில், உங்களுக்கு காவியங்கள் எழுத தூண்டு கோலாய் அமைந்தது எது?

காவியம் எழுதுவது என்பது கடினமான முயற்சி யென்று சொல்வர். கற்பனை வளம், மொழியறிவு, தொடர்ந்து தொய்வு பெறாமல் கதையை நகர்த்திச் செல்லும் ஆற்றல் என்பன வாய்க்கப் பெற வேண்டும். இலங்கையில் வரன் முறையான காவியங்களைகாப்பியக்கோஜின்னாபடைத்து வருகின்றார். எனது காவியங்கள் மக்களின் வாழ்வியலை- அவர்களின் பிரச்சினைகளை எடுத்துச் சொல்கின்ற நவீன காவியங்கள். நவீன கவிதை,காவிய முன்னோடியாகப் பார்க்கப் படுபவர் பாரதியாரே. அவருடைய குயிற்பாட்டு, பாஞ்சாலி சபதம் என்பன நவீன காவியத்திற்கு முன்னுதா ரணமான படைப்புகள். இலங்கையில், மஹாகவி, முருகையன், நீலாவணன், அப்துல்காதர் லெவ்வை, எம்.ஏ. நுஃமான் உட்பட இன்னும் சிலர் நவீன காவியங் களைப் படைத்தனர். பெரிய காண்டங்களாக அமைந்து விடாமல் சிறிய இயல்களாக அமைந்து மக்களுடைய வாழ்வியலை எளிமையாய், இயல்பாய் சொல்லக் கூடியவாறு அமைந்த நவீன காவிய வடிவம் எனக்குப் பிடித்திருந்தது.

மஹாகவிஇலங்கையில்நவீனகாவிய முன்னோடியாக இருந்தார். அவருடைய நவீன காவியங்களோடு, இலங்கையில் இருந்து வெளிவந்த நுஃமான், அப்துல்காதர் லெவ்வை, முருகையன், போன்றோரினதும் ஏனையோரினதும் பல நவீன காவிய நூல்களையும் நான் படித்திருக்கின்றேன். இவற்றைப் படித்ததனால் ஏற்பட்ட உந்துதலும் நவீன காவிய முயற்சியில் நான் ஈடுபடக் காரணமாக அமைந்திருக்கலாம். இப்போது இலங்கையில், நவீன காவிய வடிவத்தில் தொடர்ந்து இயங்குபவனாக நானே இருப்பதாக விமர்சகர்களால் நான் அடையாளப் படுத்தப்படுவது எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. எனது நான்காவது நவீன காவியமும் (மீளப் பறக்கும் நங்கணங்கள்) அண்மையில் வெளிவந்திருக்கின்றது.

இதுவரை நீங்கள் எழுதிய நூல்கள் பற்றியும், அவைகளுக்கு

யாழ் .வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற யோ.புரட்சி அவர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற1000 கவிதைகள் பெருநூல் வெளியீட்டில் அதிதியாகக் கலந்து கொண்டு நூல்களை வழங்கி வைத்த போது..





சம்மாந்துறையில் தமிழா ஊடக வலையமைப்பு நடத்திய பெரு விழாவில், மூத்த கவிஞர் விருது பெறுவதற்காக வரவேற்கப்பட்ட போது.. இ-வ. கனிவான ஹனீபா,பாவேந்தல்,அன்கபுடன் ஜெலீஸ் கவிஞர் இளம்பரிதி(இந்தியா), கவிஞர்,எழுத்தாளர் வித்யா சாகர்( குவைத்) சம்மாத்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் நஜீம் ஆகியோர்.

கிடைத்த வரவேற்பு, விருதுகள் பற்றியும் குறிப்பிடலாமே!

எனது முதலாவதுகவிதைத் தொகுதி ''பதம்'' என்றபெயரில் 1987ல் வெளிவந்தது எனது தனிப்பட்ட கவிதைகளின் தொகுப்பு அது. மருதூர்க்கொத்தனின் கனதியான அணிந்துரை அதற்கு அழகு சேர்த்தது. அண்மையில்,''ஈழத்து நவீன கவிதை வளர்ச்சியில் பாலமுனை பாறூக்கின் சில தடங்கள்'' எனும் தலைப்பில் பேராசிரியர் செ.யோக ராசா அவர்கள் அந்நூலை முழுமையாக ஆய்வு செய்திருந்தார்.

சந்தனப்பொய்கை 2009ல் வெளி வந்த எனது 2வது கவிதை நூல் .மத ஆன்மீகம் சார்ந்த கவிதைகள் அதில் இடம் பெற்றன. காப்பியக்கோ டாக்டர் ஜின்னா ஷெரிபுத்தீன், பேராசிரியர் கலாநிதி தீன்முஹம்மது ஆகியோர் அந்நூலுக்கு அணிந்துரை களைத் தந்திருந்தனர்.

கொந்தளிப்பு 2010ல் வெளியான எனது முதலாவது நவீன காவிய நூல். சுனாமிப் பேரவலம்,அதன் பின்னரான எமது தென்கிழக்கு முஸ்லிம் பிரதேசத்தாரின் வாழ்வியல், அரசியல், இருப்பு என்பன பற்றிப் பேசிய நவீன காவியம். வயல் பிரதேசத்தின் குழுக் குறியீட்டுச் சொற் களையும் இந்நூல் பிரதிபலித்தது. கவிஞர் மு.சடாட்சரன், பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ் ஆகியோரின் அணிந்துரை யோடு இந்நூல் வெளிவந்தது. இந்நூல் இலங்கை சாஹித்ய மண்டலத்தின் இறுதிச் சுற்றுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு அதன் சான்றிதழைப் பெற்றுக் கொண்டது.

2011ல் எனது 2வது நவீன காவியம் தோட்டுப்பாய் மூத்தம்மா வெளிவந்தது. செய்னம்பு என்ற பெண்ணை முதல்நிலைப் பாத்திரமாகக் கொண்ட கதையம்சத்தோடு வெளிவந்த அக்காவியம் முஸ்லிம் மக்களின் பேச்சுமொழி, பழமை,பழக்க வழக்கங்கள்,சடங்குகள்,சம்பிரதாயங்கள்,என்பவற்றைப் பதிவுசெய்யும் படைப்பாகவும் இருந்தது. பேரா. .செ.யோகராசா,ஏபிஎம் இத்ரீஸ் என்பாரின் அணிந்துரையோடு வெளிவந்த



இலங்கை அரசின் கலை இலக்கியத்திற்கான அரச உயர் விருதான கலாபூசண விருதை அமைச்சர் கௌரவ ஏ.எச்எம் அஸ்வரிடம் இருந்து பெற்ற போது..

இந்நூலுக்கு இலங்கை அரச சாஹித்ய மண்டல விருது, கொடகே நிறுவன சாஹித்ய மண்டல விருது ,இலங்கை இலக்கியப் பேரவை சான்று என்பன கிடைத்தன.

2012ல் எஞ்சியிருந்த பிரார்த்தனை யோடு என்ற எனது 3 வது காவிய நூல் வெளிவந்தது.இந்திய அமைதிகாக்கும்படை இலங்கையில்இருந்தகாலகட்ட யுத்தசூழல், கிழக்கில் தமிழ் முஸ்லிம் மக்களுக் கிடையே ஏற்பட்ட இனவிரிசல் என்பன வற்றை அந்நூல் பேசியது. பேரா. எம்ஏ. நுஃமான் அவர்களின் எனது கவிதைகள், காவியங்கள் பற்றிய விரிவான பார்வை ‘‘பாலமுனை பாறூக்: கவிதைகளும் காவியங்களும்’’ எனும்தலைப்பில் அந்நூலில் இடம் பெற்றது.

இஸ்லாமிய தமிழ் இலக்கிய 15 வது மாநாடு காயல் பட்டணத்தில் நடை பெற்ற போது,இந்திய,இலங்கை இலக்கிய உறவுகளோடு..




2013ல் ‘‘பாலமுனை பாறூக் குறும்பாக்கள்’’எனும்தலைப்பில்எனது100 குறும்பாக்களின் தொகுதி வெளியாகிற்று. ஆங்கிலக் கவிதை வடிவமான Limerickஐ தமிழுக்கு இலங்கைக் கவிஞர் மஹாகவி அவர்கள் கொண்டுவந்து குறும்பா என்று பெயரிட்டார். குறுமையும குறும்பும் சேர்ந்த அந்த வடிவம் என்னைக் கவர்ந்தது.

இலங்கையில்குறும்பாவடிவத்தைக் கையாளுபவர்கள் மிகச் சிலரே. தற்போது, அவ்வடிவத்தை இலக்கியச்செழுமையோடு ,பல்வேறு பரசோதனை முயற்சிளையும் செய்து விரிவுபடுத்தி அடையாளப்படுத்தி வருகின் றேன். எனது குறும்பாக்களுக்கு நல்ல வரவேற்பிருப்பதை விமர்சகர்கள், ஆய்வாளர்களின் குறிப்பு களினால் உணர முடிகின்றது. எனது அந்த நூலுக்கு பேரா.சி. மௌனகுரு, புதுக்கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர், பேராசிரியர், முனைவர் மு.இ. அகமது மரைக்காயர், கவிஞர்ஏ.எம்.எம். அலி ஆகியோர் அணிந்துரை வழங்கி இருந்தனர்.

எனது ‘‘வலைக்குள் மலர்ந்த வனப்பு’’ (2017) முக நூலில் வெளிவந்த கவிதைகளின் தொகுப்பு. தமிழ்நெஞ்சம் ஆசிரியர் அமின் அவர்களின் முயற்சி யினால் வெளிவந்த நூல் அது. எனது முக நூல் லிங்கை மாத்திரம் பெற்றுக் கொண்டு அதனை அவர் நூலாக்கம் செய்து உதவியிருந்தார். கவிஞர் ஜவாத் மரைக்காரின் அணிந்துரை, இசைவாசி க.சிவராஜின் சிறப்புரை, தமிழ்நெஞ்சம் அமின் அவர்களின் மகிழ்ந்துரை என்பன நூலை அலங்கரித்தன.

‘‘பாலமுனை பாறூக்கின் மூன்று நவீன காவியங்கள்’’ எனது முந்தைய மூன்று நவீன காவியங்களின் தொகுப்பு இது.2020ல் ஜீவநதி வெளியீடாக வெளி வந்திருக்கின்றது. எனது மூன்று காவியங் களையும் ஆய்வு செய்து சென்னை புதுக்கல்லூரியில் திரு சேகர் என்பவர் எம்.பில் பட்டம் பெற்றுள்ளார். இதனால் இக்காவியங்களை ஒருசேரப் பார்க்க வேண்டிய அவசியம் உணரப்பட்டது.

மீளப்பறக்கும் நங்கணங்கள் 2020ல் வெளிவந்த எனது நான்காவது நவீன

காவியம் .தள்ளாத வயதில் பெற்றோர் பிரித்து வைக்கப்படுவதால் ஏற்படும் உடல் உளநோய்கள் குறித்தும், உளவியல் ரீதியான பாதிப்புகள் குறித்தும் பேசுகின்ற நூல். பேராசிரியர் செ.யோகராசா, கலாநிதி த.கலாமணி ஆகியோரின் அணிந்துரை யோடு வெளிவந்திருக் கின்றது;




காயல் பட்டணத்தில் கவிஞர் ஈரோடு தமிழன்பன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஊடகம் எனும் தலைப்பிலான கவியரங்கில் பங்கேற்றபோது, காத்தான்குடி மௌலவி பௌஸ், பேராசிரியர் மு. இ. அகமது மரைக்கயர் ( இந்தியா) ஆகியோரும் எனது இருபுறங்களிலும் அமர்ந்திருக்கின்றனர்.

**இலக்கியத்துறையில் முழு ஈடுபாட்டோடு இயங்கி வரும் நீங்கள், இலங்கை வானொலி நிகழ்ச்சிகள், கவியரங்கங்கள் போன்றவைகளிலும் கலந்து சிறப்பிப்பதை காணக் கிடைக்கிறது. இது எப்படி சாத்தியமாகிறது?**

வானொலிக் கவியரங்குகள், நிகழ்ச்சிகள் என்பவற்றில் முடியுமான வரைப் பங்கேற்கிறேன். வானொலி, சமுக வலைத்தள தொலைக் காட்சிகளில் இடம்பெற்று வருகின்ற கவியரங்க நிகழ்ச்சிகளுக்கு தலைமை தாங்கி நடத்தி வருகின்றேன். இலக்கியத்தில் இருக்கின்ற ஈடுபாடு, அவ்வாறான நிகழ்ச்சிகளை தொடர்ந்து செய்யவேண்டுமென ஆர்வம் காட்டிவரும் நிறுவனங்களின் வரவேற்பு, நண்பர்களின் ஆதரவு என்பன எனது இவ்வாறான பங்களிப்பினைச் சாத்தியமாக்கு கின்றன என்று நினைக்கின்றேன்.

கொடகே நிறுவனத்தின் மஹாகவி உருத்திர மூர்த்தி சாஹித்ய விருது தோட்டுப்பாய் மூத்தம்மா நூலுக்கு கிடைத்த போது பிரபல விமர்சகர் கே. எஸ். சிவகுமாரன் அவர்களிடம் இருந்து அதனைப் பெற்றுக் கொண்ட போது



**இதுவரை நூற்றுக்கணக்கான இலக்கிய நிகழ்வுகளில் கலந்து கொண்ட உங்களால் மறக்கவே முடியாத நிகழ்வுகளாகப் பார்க்கப்படுபவை?**

இலக்கிய நிகழ்வுகள் ஒவ்வொன்றுமே என்னைப் பொறுத்தவரை மறக்க முடியாததவை யும் மனதிற்கு இன்பமளிப் பவையுமே. அப்படி எனது ஒவ்வொரு நூல் வெளியீட்டு நிகழ்வுகளும் மறக்க முடியாதவை.

உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடுகளில் - மலேசியா, இந்தியா போன்ற நாடுகளில் பங்கேற்கக் கிடைத்தமை, இந்திய மாநாட்டில் “ஊடகம்” என்ற தலைப்பில் கவிபாடிக் கவனத்தைப் பெற்றமை, யோ. புரட்சி யாழ்ப்பாணத்தில் நடத்திய 1000 கவிஞர்களின் பெருநூல்



யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெற்ற , 1000 கவிதைகள் பெரு நூல் வெளியீட்டின் போது பேராளர்களோடு மங்கல விளக்கேற்றிய போது

வெளியீட்டிலும் பெரு விழாவிலும் அதிதியாக கலந்து கொண்டு கௌரவம் பெற்றமை, கல்முனையில் இலங்கை - இந்திய எழுத்தாளர்களின் உறவுப்பாலமாக அமைந்த கரவாகு இலக்கியச் சந்தி நிகழ்ச்சியினைதலைமைதாங்கிநடத்தியமை என்பன இன்றும் மகிழ்ச்சியைத் தருகின்ற வித்தியாசமான இன்பரசத்தை ஏற்படுத்திய மறக்க முடியாத நிகழ்ச்சிகள்.

**உங்களுக்கு கிடைத்த விருதுகள், கௌரவிப்புகள் பற்றி பகிர்ந்து கொள்ள முடியுமா?**

இலங்கை அரசின் கலை, இலக்கியம் தொடர்பான உயர்விருதான "கலாபூஷணம்"

கிழக்கு மாகாண கலாசார பண்பாட்டமைச்சு வழங்கும் உயர் விருதான, "வித்தகர் விருது"

அரச சாஹித்ய மண்டலத்தின் நூலுக்கான விருது

கொடகேநிறுவனத்தின்நூலுக்கான "மஹாகவி உருத்திர மூர்த்தி விருது"

கொழும்பில் நடைபெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் "சிரேஷ்ட கவிஞர்" விருது

புகவத்தின் "பாவேந்தல்" பட்டம்

காத்தான்குடி நவ இலக்கிய மன்றம் வழங்கிய "இலக்கிய வாரிதி" விருதும் கவிதைப் போட்டியில் வெற்றி பெற்றமைக்கான பணப் பரிசும்

புலவர் மணி ஆமு.ஷரிபுத்தீன் அவர்கள் நினைவாக இடம்பெற்ற சர்வதேசக் கவிதைப் போட்டியில் முதற் பரிசு.

இலங்கை கலாசார அமைச்சு வழங்கிய "சுவதம்" விருது. இவற்றினோடு,

முன்னாள் அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசியத் தலைவருமான கவிஞர் கௌரவ ற ஊப் ஹக்கீம் பா.உ அவர்களினால் பாலமுனையில் இடம்பெற்ற விழாவொன்றின் போது மூத்த கவிஞர் விருது பெற்று, பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்ட போது. பேராசிரியர் றமீஸ் அப்துல்லா அவர்களும் பக்கத்தில்..





நுட்பக் குழுமத்தின் நூல் விருதினை வலைக்குள் மலர்ந்த வனப்பு நூலுக்குப் பெற்றுக் கொண்ட போது. கவிமணி கவிநுட்பம், தமிழ்நெஞ்சம் அமின் ஆகியோரோடு..

கவிப்புனல், கவிஞர் திலகம், சிராஜுல் புனூன் என்று பல்வேறு அமைப்புகளாலும் வழங்கப்பட்டுள்ள பட்டங்களையும் ஞாபகப்படுத்தலாம்.

இலங்கையில் இலக்கியத் துறையின் வளர்ச்சி தற்போது எந்த நிலையில் உள்ளது?

இலங்கையின் இலக்கியத் துறையின் வளர்ச்சி காலகட்டங்களாகப் பிரித்து நோக்கப்படுகின்றது. நூல்வெளியீடுகள், எழுத்தாளர் சங்கங்களின் தோற்றம் அவற்றின் செயற் பாடுகள், சஞ்சிகைகளின் வரவு என்பவற்றை அடிப்படையாக வைத்தே இலக்கிய வளர்ச்சி நோக்கப்பட்டு வந்திருப்பதை அவதானிக்க முடியும்.

இலங்கையில் புதிய இலக்கிய முயற்சிகள் பெருகியிருக்கின்றன. புதிய இலக்கியவடிவங்களில் (ஹைக்கூ,லிமரிக்ஸ்) இளைஞர்கள் காட்டிவருகின்ற அக்கறை, பிரசுர வசதிகள், இலத்திரனியல் ஊடகங்களினால் ஏற்பட்டுள்ள பன்னாட்டு இலக்கியத் தொடர்பு,, இலக்கியக் குழுமங்கள் நடத்திவருகின்ற துறைசார் இலக்கியப் பயிற்சி வகுப்புகள், என்பன அவ்வாறான வளர்ச்சியை சாத்தியப் படுத்துகின்றன என்று சொல்ல முடியும்.

யுத்தநிலைமையில் எம்மவர்கள் புலம் பெயர்ந்த நிலையில், புலம் பெயர்ந்தவர்களின் இலக்கிய முயற்சிகளும் இலங்கையின் இலக்கியத்தின் புது வகையான திருப்பத்தை ஏற்படுத்தி இருப்பதைக் குறிப்பிட முடியும்.

இலங்கையைப் பொறுத்தமட்டில் இலக்கியம் சார்ந்த விருதுகளுக்காகத் தகுதியானவர்கள் உள்வாங்கப் படுகிறார்கள் என நினைக்கிறீர்களா?

இலக்கியம் சார்ந்த விருதுகளை, இலங்கையில் அரசாங்க கலாசார அமைப்புகள், அரச மாகாண அமைப்புகள், தனியார் நிறுவனங்கள், குழுமங்கள் என்பன வழங்கி வருகின்றன.

இவ் விருதுகளுக்குத் தகுதியானவர்கள் உள்வாங்கப்படுகின்ற போதிலும் சில வேளைகளில் சில தவறுகள் நடந்துவிடுவதை



"கிழக்கு மாகாண வித்தகர்" விருதினை மாகாணப் பண்பாட்டலுவல்கள் அமைச்சரிட மிருந்து பெற்ற போது..



நுட்ப விழாவில் திருமதி சுமதி சங்கர்(இந்தியா) வாழ்த்து தெரிவித்து சால்வை அணிவித்த போது..

அவதானிக்க முடியும். இத்தவறுகள் பின் வரும் சில காரணங்களினால் ஏற்படுவதாகச் சொல்லப் படுகின்றது.

- விருதுக்காக விண்ணப்பிக்க வேண்டி யிருப்பது (தகுதியான சிலர் விண்ணப்பித்து விருது பரிசுபெறுவதை விரும்புவ தில்லை)
- வயதுக் கட்டுப்பாடு .(இலக்கியத்தில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தாலும் குறிப்பிட்ட வயதை அடையாவிட்டால் விருது கிடையாமலிருப்பது. அதே வேளை மிகக் குறைந்த கால ஈடுபாட்டோடு குறிப்பிட்ட வயதை அடைந்து விட்ட வருக்கு விருது பெறும் வாய்ப்புக் கிடைப்பது.)
- சில தனியார் நிறுவனங்கள்,குழுமங்கள் உறுப்பினர்களுக்கே விருதுகளை வழங்கு வது - பட்டங்களை அள்ளி இறைப்பது.
- உறுப்பினர்களிடம் பணம் வசூலித்து விருது வழங்குவது..
- போட்டி விதிமுறைகளில் உள்ள குறைபாடு, புள்ளி வழங்கும் முறையில் உள்ள குறைபாடு .

இப்படி... பல.

ஒரு சமூகத்தின் கட்டமைப்புக்கு இலக்கியத்தின் பங்களிப்பு எந்தவகையில் வழிகோலுகிறது?

இலக்கியம் என்பது சமூகத்தின் கட்டமைப்புக்கு பல வழிகளில் பங்களிப்புச் செய்கின்றது. ஒழுக்க விழுமியங்களை, அற நெறிக்கருத்துகளை சமுகத்திற்கு எடுத்துச் சொல்வதிலே இலக்கியம் பங்காற்றுகின்றது. நமது பண்பாடு, மரபு என்பவற்றை புதிய தலைமுறைக்குக் கொண்டு சேர்ப்பதிலும் அதன் பங்கு இருக்கின்றது.

மேலும், புதிய சிந்தனைகளை விதைப் பதிலும் ,சமூகத்தைத் தடம் புரளாமல் கட்டிக் காப்பதிலும் , மனதை இரம்மியப் படுத்தி சுகானுபவத்தைத் தருவதிலும் இலக்கியம் பங்களிப்புச் செய்து வருவதனையும் இங்கு குறிப்பிடலாம்.

இந்த சமுதாயத்தில் ஒரு கவிஞ னாக, கலைஞனாக ஒரு சிறந்த இலக்கியவாதியாக தம்மை நிலைநிறுத்திக் கொள்ள வளர்ந்து வரும் இளம் தலைமுறைக்கு நீங்கள் சொல்லக்கூடிய அறிவுரை என்ன?

எழுத ஆரம்பித்த பின்பும் ஒரு நல்ல வாசகனாக - கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆவலோடு செயற்படுவது,

குழுநிலைப்பட்ட எண்ணத்தால்



பேராசிரியர் எம்.ஏ நுஃமான் அவர்களோடு தென் கிழக்குப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற இலக்கியக் கலந்துரையாடல் நிகழ்வொன்றின் பின்னர..



தோட்டுப்பாய் மூத்தம்மா நூலுக்கு இலங்கை இலக்கியப்பேரவை யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில்வைத்து வழங்கிய சான்றினை டாண் குழும நிறுவனர் எஸ்எஸ் குகநாதன் அவர்களிடமிருந்து பெற்றபோது

பிரிந்து விடாமல் பல தரப்பட்ட இலக்கிய வாதிகளையும் வாசிப்பது,

புதிது - பழசு என்ற விதத்தில் பிரிந்துவிடாமல் பழந்தமிழ் இலக்கிய நூல்களை கற்பதிலும், புதிய இலக்கிய வடிவங்களை தேடிக் கற்பதிலும் ஆர்வம் செலுத்துவது,

விருதுகள், பரிசுகள் என்பவற்றை ஒரு பொருட்டாகக் கருதாமல் எழுதிக் கொண்டே இருப்பது,

இவை ஒரு நல்ல படைப்பாளியாக நிலை நிறுத்த உதவக் கூடியன என்று நான் கருதுகின்றேன்.

நம் தமிழ்நெஞ்சம் இதழின் இலங்கைப் பிரதிநிதியாக ஆசிரியர் குழுவில் பயணிக்கும் தாங்கள் தமிழ்நெஞ்சம் பற்றிய கருத்து என்ன?


தமிழ்நெஞ்சத்தின் இலங்கைப் பிரதிநிதியாக ஆசிரியர் குழுவில் எனக்கு இடமளிக்கப்பட்டிருப்பதனை ஒரு உயர் கௌரவமாகவே நான் பார்க்கின்றேன்.

தமிழ்நெஞ்சம், தமிழ்கூறும் நல்லுல கெங்கும் ஐம்பது வருடங்களுக்கும் மேலாக தன் மொழி அழகால்,இலக்கியச் செயற்பாட்டால், எழுத்தூழியத்தால் பெயர் பதித்திருக்கின்ற இதழ்.

மூத்த இலக்கியவாதிகளையும் புதியவர்களையும் ஒருசேரக் கவர்ந்திருக் கின்ற இதழ் இது. பழந்தமிழ் இலக்கிய வடிவங்களோடு, புதிய வடிவங்களை அறிமுகப் படுத்துவதில் அக்கறை செலுத்துகின்ற இதழ். கலை இலக்கியத்தின் பல்வேறு அமசங்களையும் உள்ளடக்கி அழகான வடிவமைப்பில் வெளி வருகின்றது.

உண்மையில் மொழிப் பற்றோடு, ஐம்பது வருடமாகத் தொடர்ந்து, இப்படி ஒரு நல்ல இதழை நமக்குத் தருகின்ற தமிழ்நெஞ்சத்தின் ஆசிரியராகிய அமின் தாஙள் பாராட்டப்படவேண்டியவர்.

தங்களின் தேக நலனுக்காகப் பிரார்த்திக்கின்றேன். ■




அன்பில் வளர்ந்த அல்லிப் பூவே
அனுதினம் சூடிகொள்ள மனம் ஏங்குதே
கிள்ளி பறித்திட துணிந்த கைகள்
ஒரு கனம் நின்று தவிக்குதே...

**ச. இராஜ்குமார்**
திருப்பத்தூர் மாவட்டம்

# தேவைகள் தீர்ந்ததா ?



திரும்பிக் கிடந்த உடலை
திருப்பி விடுகிறீர்கள்
ஆசை தீர்ந்ததும்
அப்படியே உறங்கி விடுகிறீர்கள்
அவளை விசாரிப்பதை விட
அவள் சமைத்த உணவையே
அதிகம் விசாரிக்கிறீர்கள்
தேவைப்படும் போதெல்லாம்
அவளை தேடுகிறீர்களே?
அவள் தேவை என்றேனும்
அறிந்ததோ...கேட்டதோ உண்டா?
உன் பசிக்கு மட்டும் உணவாக
அவள் தேவைப்படும்போது
அவளுக்கும் பசிக்கும் என்பதை
எப்படி அறியாமல் போனீர்கள்?
நீ உண்டவுடன் உறங்கவா
அவள் உறங்காமல் விழித்திருந்தாள்?
காமமோ காதலோ
இருவருக்கும் பொதுதானே?
வாழ்க்கை வாழாமலேயே
இறந்து போகிறதே பெண் குலம்
உன் தேவையை
உன் விருப்பத்தை
அவள் பூர்த்தி செய்யும் போது
அவள் தேவைக்கும்
அவள் உணர்வுகளுக்கும்
உணவளிப்பதில்
உங்களுக்கு என்ன அப்படி
ஒரு சுய கௌரவம்?
காசு பணத்தைக் கொடுத்து சிலர்
அடுத்தவள் கால்பிடிக்கும் போது
எங்கே போனது அந்த
சுயமும் சுய கௌரவமும்?
உனக்காக வாழும் அவளுக்காக
ஒரு முறையேனும் வாழுங்கள்
நீங்கள் இறந்தால் தாலியறுப்பதும்
தலைமாட்டில் அமர்ந்து அழுவதும்
மனைவி மட்டும் தான்
இன்றேனும் மனைவிக்கும்
ஆசை உண்டென உணருங்கள்.
எனக்கான குரல் அல்ல
இது ஒட்டுமொத்த பெண்களின்
கண்ணீர் குரல்.

கவி செல்வ ராணி திருச்சி



# அப்பனிமலை உருகுகிறது

– அயாத் அக்பர்

செல்வம் பெயரில் மட்டுமே. வாழ்க்கையில் அதே செல்வத்தை தேடிக் கொண்டு இருப்பவன். அப்பா சுடலை முத்து ,அம்மா மூக்காயியும் விவசாயக் கூலிகள்.

வாழ்க்கையில் சொத்து சேர்க்க இயலாதவர்கள்... மக்கட் செல்வத்தை சேர்த்தனர். நான்கு பெண்பிள்ளைகள் ஒரே ஆண்பிள்ளை மொத்தமாக சேர்த்து ஐந்து பிள்ளைகள்.

கூலிக்கு போய் வரும் சொற்ப வருமானத்தில் கம்மங்கூழோ, கேப்பங் கலியோ... இதுதான் இவர்களின் உணவு. வெள்ளைச் சோறு பௌர்ணமி போலத்தான் இவர்களுக்கு.

மகனை எப்படியாவது படிக்க வைத்து ஒரு வேலைக்கு அனுப்ப வேண்டு மென்பது சுடலையின் பெருங்கனவு.

அப்பாவையும், அம்மாவையும் கடவுளா பார்க்கும் செல்வம். இன்னைக்கு வரைக்கும் ஒத்த வார்த்த அப்பாவையும், அம்மாவையும் பார்த்து சொன்னதும் இல்ல, எதிர்த்துப் பேசுனதுமில்ல.

டேய்! செல்வம் நீ ஏன்டா கூலி வேலைக்கு வர... போய் படிடா. எங்களோடையே போகட்டும் இந்த கஷ்ட மெல்லாம்.

அப்படி சொல்லாத பா, நானும் உங்களுக்கு ஒத்தாசையா செய்றேன் பா. கண்ணு கலங்கி போச்சு சுடலைக்கு, மூக்காயி துக்கத்த நெஞ்சுக்குள்ளே அடைச்சு கிட்டா. கஷ்டப்பட்டு நான்கு அக்காக்களுக்கும் திருமணம் நல்லபடியா முடிஞ்சது. அம்மாவுக் கும், அப்பாவுக்கும் வயசு கூட ஏறிடிச்சு.

ஏதோ அவங்களால முடிஞ்ச சின்ன சின்ன வேலையை செய்துகிட்டு, மூன்று வேளைக்கு இரண்டு வேளை வயிறு ரொப்பிகிட்டு. எனக்கு மட்டும் மூணு வேளை கஞ்சி ஊத்த கஷ்டப்பட்டு நாளை நகர்த்திக் கொண்டிருந்தாங்க.

எந்த சாமி என்ன பார்த்ததோ! படிச்ச படிப்புக்கு வட்டாட்சியர் அலுவலகத்தில் சின்னதா எழுத்தர் வேலை... அரசாங்க உத்தியோகமா... அமைஞ்சிதனால. ஊர்ல எல்லோருக்கும் ஒரே சந்தோஷம்.

அந்த ஊர்லேயே முதல்முதலா சர்க்கார் வேலை வாங்கினது செல்வம் மட்டும்தான்.

நம்ம சுடலை பையனுக்கு சர்க்கார்ல வேலை கிடைச்சதாமிலே. ஊர்கூடி பேசிச்சு. செல்வம் எட்டு மைல் சைக்கிள்ல போய் வேலை செஞ்சுகிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தான்.

முதல் முதலா வாங்கின சம்பளத்துல அப்பா, அம்மாவுக்கு வேட்டி சட்டை, புதுசீலை ஒரு மூட்டை அரிசியை வாங்கி வந்து... கொடுத்து ஆசிர்வாதம் வாங்கும் போது... சுடலை, மூக்காயி கண்ணுல அருவி கணக்கா... கண்ணீர் கொட்டிடிச்சி. வெள்ள சோறு பொங்கி சாப்பிட்ட போது... உலகமே ஜெயித்தது போல ஒரு சந்தோசம் மூணு பேரு முகத்திலேயும் தெம்புட்டுது.

செல்வத்திற்கு அதுக்கு முன்னாடி ஊர்ல யாருமே பொண்ணு கொடுக்க முன்வரல.

இப்ப ஊர்ல பொண்ணு கொடுக்க ''நீ''... நான்னு... போட்டி போட்டு நின்னாங்க செல்வத்திற்காக. ஒன்ன விட்ட தூரத்து சொந்தம் பட்டணத்திலிருந்து ஒரு பொண்ணு வாக்கப்பட்டு வந்தது.

கல்யாணமெல்லாம் சிறப்பா நடந்துச்சு. ஒரு வாரம் கூட ஆகல. பொண்ணோட அப்பா செல்வம் உனக்கு அரசாங்க உத்தியோகம் இருக்கறதுனால என் பொண்ண கொடுத்தேன். என் பொண்ணு கூலி வேலைக்கு எல்லாம் போக மாட்டாள். அவ பட்டணத்தில் பிறந்து வளர்ந்த பொண்ணு நீதான் புரிஞ்சு நடந்துக்கணும்; பு ரிஞ்சுதா?

அவர் பெண்ணின் மீது அவர் கொண்ட பாசமா? இல்லை எனக்கு கொடுத்த எச்சரிக்கையா? எனக்கு இன்னும் புரியல.

குடிசை வீடு விழுந்து போச்சு. கொஞ்சம் கொஞ்சமா பணத்தை சேர்த்து கல்லு வீடு கட்டினேன். பொண்ணு வீடு கட்டி இருக்கான்னு சின்னதா தொலைக் காட்சிப் பெட்டியைக் கொண்டு வந்து போட்டாரு மாமா.

இத்தன நாள் எனக்காக குடித்தனம் செய்து கொண்டிருந்தவள், இப்போ தொலைக் காட்சிப் பெட்டியிலேயே மூழ்கிப் போனா அவ.

வீடு கட்டண கடனுக்கும், அக்காக்கள் கல்யாணத்திற்கு வாங்கின கடனுக்காகவும் அப்பாவும், அம்மாவும் தினமும் நான் விடுமுறை நாட்களில் கூலி வேலைக்கு போய்க்கிட்டுதான் இருக்கோம்.

அதுக்கு நடுவுல ரெண்டு புள்ளையை நான் பெத்தேன். மூத்தது பொண்ணு, இரண்டாவது மகன். நாமதான் கஷ்டப்பட்டு இப்படி இருக்கமே. இவர்களையாவது நல்லா படிக்க வைக்கணும் என்று மனக் கோட்டை கட்டினேன், ஆனால் பணக் கோட்டைக்குத்தான் வழி எங்கிட்ட அகப்படல.

நாலு பேருக்கு உதவி செஞ்சா நமா நல்லா இருப்போமென்னு அப்பனும், ஆத்தாளும் கத்துக்கொடுத்தது என்னைக்கும் வாழ்க்கையில மறக்காம கடைபிடிச்சிட்டு வரேன். இலஞ்சம் இன்னும் யாருகிட்டயும் ஒத்த ரூபா வாங்கினதில்ல.

ஊருல நல்ல பேரு இருந்துச்சு. ஆனா வீட்டுல பொண்டாட்டிகிட்டயும், பிள்ளைங்ககிட்டயும் கையாலாகாதவன் பேரு மட்டும்தான் கொடுத்துச்சு.

கஷ்டத்தை சொல்லி வளர்த்தா பசங்க புரிஞ்சுப்பாங்கென்று நினைச்சேன். ஆனா நான் சொல்வதுதான் அவங்களுக்கு கஷ்டமா இருக்குதுன்னு இப்பத்தான் புரிஞ்சுக்கிட்டேன்.

நல்லா படிச்சிட்டு இருந்த பொண்ணை மேல்படிப்புக்காக நகரத்தில் கொண்டு போய் சேர்த்தேன். நகரத்தில் கொண்டு போயி சேர்த்தா நாகரீகம் வளரும் என்று நினைச்சேன். ஆனா நரகத்தில் கொண்டு போய் விட்டுவிடும் என்று இப்பதான் புரிஞ்சது.

எல்லார் கையிலயும் டச் போன் இருக்கு எனக்கு ஒன்னு வாங்கி கொடு அப்படி என்று அடம்பிடிச்சா.

என்ன சொல்ல. நான் சம்பாதிக்கிற இந்த வருமானத்துல விடுதி கட்டணம், மெஸ் கட்டணம் தான் கட்டமுடியும். மத்தது முடியாதுன்னு எப்படி நான் சொல்ல. நான் அப்படியிருந்தும் மகளுக்கு புரிய வைக்க முயற்சி பண்ணிணேன் அவ

அத புரிஞ்சுக்கல. அதற்கு பதிலா என்னை ஏசினா... அது மட்டுமில்லமா அப்ப ஏன்? என்ன பெத்தன்னு கேட்டா! நாலு பேருக்கு முன்னாடி.

அவ கேட்ட ஒத்த சொல்லு நெஞ்சிலே "தீ" மாதிரி சுட்டுடிச்சி. என் மனசு சுக்குநூறாகி போச்சு அங்கு.

இது கேட்ட அம்மாவும், அப்பா வும் மனசுக்குள்ள பையனுக்கு நாம பாரமா... இருக்கிறோமென்று தினம் தினம் கவலைப் பட்டார்கள். பணக் கவலையை விட, மனக்கவலை ஆள ஒன்னு மில்லாம பண்ணுமென்று அப்பதான் புரிஞ்சுகிட்டேன்.

அம்மாவும், அப்பாவும் அடுத்தடுத்து என் "கையை" விட்டுட்டு போனாங்க. நெஞ்சு வலித்தது யாருகிட்ட நான் சொல்லி அழ என் கஷ்டத்தை.

இதோடு என் பையனும் வளர்ந்து விட்டிருந்தான். உலக அனுபவம் எனக்கு இருக்கோ இல்லையோ எனக்கு தெரியாது. நான் போட்ற பனியனில் மட்டும் பின்பக்கம் உலக வரைபடம் மாதிரி கிழிசல்கள் நிறைந்து கிடந்தது என்று பல பேர் சொல்லி கேட்டிருக்கேன்.

பத்தாம் வகுப்பு படிக்கையிலேயே ஓட்டுவதற்கு வண்டி வேண்டுமென்று மகன் கேட்டான். இன்னும் நான் சைக்கிளில்தான் போய்கிட்டு இருக்கேன்.

பையன்கிட்ட வீட்டு கஷ்டத்தை சொன்னேன். படிடா என்று... சொன்னேன். அதுவே அவனுக்கு ரொம்ப கஷ்டமா போயிடுச்சு போல. அவ அம்மாகிட்ட கத்த ஆரம்பிச்சான்; அப்பா இப்படியே சொல்லிக்கிட்டு இருந்தா; நான் இந்த வீட்டை விட்டு போய் விடுவேன், இல்ல தூக்குல தொங்கிடுவேன் புரிஞ்சுதா!

என்னடா இந்த கலிகாலம் நான் எது சொன்னாலும் தப்பாவே தெரியுதே. வாய திறந்து அன்பா! அனுசரணையா! பாசமா சொன்னாலும் புரிய மாட்டேங்குது. அவங்க வாழ்க்கைக்காக நான் பட்ட கஷ்டத்தை அவங்க படக்கூடாது அப்படி என்று திட்டினாலும் தப்பா தெரியுது.

வாய்மூடி மௌனமானேன். அவங் களுக்குபிடித்தஅப்பாவாமாறஎவ்வளவோ முயற்சி பண்ணேன். என் பொண்டாட்டி நாளைக்கு வர நெடுந்தொடர் பத்தி கவலைப்பட்டாளே தவிர, எதிர்காலத்தில் அவளை காப்பாத்த போற இரண்டு பிள்ளைகளைப் பற்றி கவலைப்பட்டதாக அவ தெரியல.

என்ன பார்த்து ஊர்ல பாதி பேரு நல்லா படிச்சு நல்ல வேலைக்கு போக ஆரம்பிச்சாங்க. நீதான்டா இந்த ஊருக்கு முன்மாதிரி அப்படியென்று பலபேர் சொல்ல கேட்டு இருக்கேன். ஆனால் என் வீட்டில் மட்டும் இன்னிக்கும் நான் உதவாக்கரைதான்.

பொழைக்கத் தெரியாதவன்; இலஞ்சம் வாங்க தெரியாதவன்; ஏமாற்ற தெரியாதவன்; ஊருக்காக வாழற ஏமாளி இன்னும் அதிகமா சொன்னா ஓவரா சீன் போடுறவன்... என்று பல பெயர்களை எனக்கு வைத்துக் கொண்டே இருந்தார்கள்.

எப்படியும் என் மகனையும், மகளை யும் நல்லபடியா படிக்க வைத்து; நான் பட்ட கஷ்டத்தை அவங்க படக்கூடாது என நினைக்கிற சராசரி அப்பனா நான்.

புள்ளைங்கள விட்டுப் புடி என்று பல பேரு சொன்னாங்க. நான் விட்டேன், ஆனா அவங்கள என்னால பிடிக்கவே முடியல.

உன் பசங்க எப்படிப்பா இருக் காங்க? எப்படி படிக்கிறாங்க? என தெரியாதவன் கேட்கும்போது.

என் பசங்க மாதிரி யாருமே இல்லை. நல்லாபடிக்கிறாங்க. அதைவிட என்னையும் அம்மாவையும் நல்லபடி பார்த்துக்கறாங்க. இது மாதிரி பிள்ளைங்க பிறக்க என்ன தவம் செய்தேனோ? அடுக்கடுக்கான பொய்யை அழகா சொன்னேங்க.

நீ ரொம்ப அதிர்ஷ்டசாலிடா செல்வம். எங்க வீட்டு குழந்தைங்க இது மாதிரி இல்லடா! தன் ஆற்றாமையை என்னிடம் இறக்கி விட்டு போனார். அந்த தெரியாத மனிதர்.

இன்னைக்கு இருக்கிற குழந்தை களுக்கு எல்லாமே தெரியுது. ஆனால் ஒரு சராசரி அப்பனா என்னால மட்டும் தான் புரிஞ்சுக்க முடியலையே.

உங்க பசங்கள நீங்க எல்லாம் நல்லா வளர்க்கிறங்க போல எனக்கு

வளர்க்க தெரியல. அதான் இப்படி புலம்பிக்கிட்டே இருக்கேன் போல.

செருப்பும் தேஞ்சு போச்சு, வயசும் முடியப்போகுது. இன்னும் நான் கூலி வேலைக்கு என் வீட்டுக் கடனை தீர்க்க... போய்க்கிட்டே இருக்கேன்.

எல்லா லோனையும் போட்டு படிக்க வைச்சேன். ஆனா நான் ஒன்னும் பெரிசா ஆசைப்படல! மாநிலத்தில் முதலிடமோ, மாவட்டத்தில் முதலிடமோ கேட்கல. சராசரி மதிப்பெண் எடுத்து தேர்ச்சியாவது ஆவுன்னுதான் கேட்டேன்...! அது ஒரு பெரும் குத்தமா போயிருச்சி.

அவனவன் எவ்வளவு சப்ஜெக்ட் அரியர் வெச்சிருக்கான் தெரியுமா? எப்ப பார்த்தாலும் படி படின்னு... நொய், நொய்யின்னு எங்க உயிர வாங்குற.

உலகத்திலேயே நீங்க மட்டும்தான் பிள்ளைகளைபெத்துபடிக்கவைக்கிறாப்பில.

அதுக்கு மேல சொல்லறதற்கு... ''நா'' கூசுது. தோளுக்கு மேல் வளர்ந்த பையனையோ, பொண்ணையோ அடிக்கிறது தப்பு ஊருசெனம் சொல்லுது.

சைக்கிள் மிதிக்கிறதுக்கு காலிலேயும் தெம்பில்ல. எட்டு சப்ஜெக்ட் அரியர் வச்ச பையன் வண்டிக்காக உயிரை வாங்கினான். நாலு சப்ஜெக்ட் அரியர் வச்ச பொண்ணு டச் போனுக்காக உயிரை வாங்குனா.

போன வருஷம் தானே டச்போன் வாங்கி கொடுத்தேன். அந்த மாடல் பழசாகிப் போச்சு. அதெல்லாம் ஒரு வருஷம்தான் வரும் புது போன் வாங்கி கொடு.

கஷ்டத்தை சொல்லி வளர்க்க... முடிந்த எனக்கு. காசு கொடுத்து வாங்கிக் கொடுக்கிற சக்தியில்லை.

அந்த கஷ்டத்த மறக்க பொண்டாட்டிக்கிட்ட சொன்னா,அது போகட்டும் டிவி ரீசார்ஜ் எப்ப பண்ணுவிங்கயென்று கவலை படறா?

இல்லன்னா... என் அப்பாவுக்கு போன் போட்டு ரீசார்ஜ் செஞ்சிக்கு வா! அப்பா இருந்த வரை என்னை மிரட்டினா! அவ அப்பா போனபிறகு யாருமே அவளை கண்டுக்கல.

அதுக்கென்று புருஷன் மேல பாசம் இல்லன்னு சொல்லக்கூடாது. மூணு வேளையும் வக்கணையா சமைச்சு போடுவாள்.

எல்லார் வாழ்க்கையும் கிட்டத்தட்ட இப்படித்தான் இருக்குமா? அதெனக்கு தெரியல. ஒரு சராசரி மனுஷனா இதைக் கடந்துதான் போகவேண்டும் போல இருக்கு.

என் மனசு இதநெனைச்ச போதெல்லாம் அப்பப்போ இடது பக்க மார்பில் வலி.

எனக்கு பித்தவாயுவென்று நானே சமாதானம் செய்துகொண்டேன். மருத்துவ செலவுக்கு என் வருமானம் இடம் கொடுக்கல. ஒரு நாள் என்னாலேயே கட்டுப் படுத்த முடியாத அளவுக்கு வலி.

நிரந்தரமாக நின்னுபோச்சு என் ''வலி''.

அரசாங்க வேலை இல்லையா? செத்த உடனே கணக்கு பார்த்து ஆறு மாசத்துக்குள்ள நான் கட்ட வேண்டிய லோன் போக அனைத்து பணமும் வந்துடுச்சு.

அம்மா ! உனக்கு ஒன் இயர் ரீசார்ஜ் பேக் போட்டு இருக்கேன். டிவி இனிமே தொடர்ந்து வந்துகிட்டே இருக்கும்மா கட்டேயாகாது மகன் சொல்ல. அப்படியா என்று வாயை பிளந்தாள் மனைவி.

மகள் என்கிட்ட கேட்ட அதே டச் போன்ல என் படத்தை போட்டு... ஐ மிஸ் யூ அப்பா...சில கவிதைகளோடு தன் சோகத்தை வெளிக்காட்டிக் கொண்டிருந்தாள்.

என் மகன் ஆசைப்பட்ட ''பைக்'' வாங்கிக் கொண்டு ஊர் சுற்றிக் கொண்டிருந்தான்.

ஆண்டவர் என் ஆன்மாவை பார்த்து உனக்கு ஏதாவது கடைசி ஆசை இருக்கான்னு கேட்டதற்கு.

என்ன மாதிரி என் பிள்ளைங்க கஷ்டப்படாமல் இப்ப இருக்கிற மாதிரியே எப்பவுமே இருக்கணும் சாமி. அதஒன்னு மட்டும்தான் நான் கேட்கிறேன் என்றபோது... சாமியும் என்னை ஏறிட்டு பார்க்காமல் என்னை தள்ளிவிட்டார்.

நான் ஒரு சராசரி அப்பன்தானுங்க. இதில ஏதாவது தப்பு இருந்தா என்னை மன்னிச்சிடுங்க.

# நன்றி உணர்ச்சி

புலவர்.தியாகு.சோமு

பண்பு களுக்கெல்லாம் தலையாய பண்பாக கருதப்படுவது நன்றியுணர்ச்சி என்கின்ற பண்புதான் நண்பர்களே.. நன்றி யுணர்ச்சி மட்டும் இல்லாமல் போகுமானால் அவன் திறமையானவராக இருந்தாலும் கூட அவன் வாழ்வின் வெற்றி படிக்கட்டுகளில் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாது நண்பர்களே..

நன்றி பாராட்டுதல் என்பது நம் வாழ்வின் பிறப்பு தொட்டு நடக்கக்கூடிய அன்றாட நிகழ்வுகளில் தொடங்கி சிறியது பெரியது என்கின்ற பேதம் இல்லாமல் அவை இயல்பாகவே நாம் அதைப் பாராட்ட கடமைப்பட்டிருக்கின்றோம்.

உலகத்தின் மாபெரும் தலைவர் களின் உயர்வுக்கு காரணம் என்ன என்பதை சிந்தித்துப் பாருங்கள் நண்பர்களே அவர்கள் ஒவ்வொரு நிகழ்வுகளுக்கும் நன்றி பாராட்டியது தான் முதன்மையானதாக இருந்திருக்கும்.

நம்மை ஈன்றெடுத்த தாய் தந்தையை துவங்கி கல்வி என்கின்ற கண் கொடுத்த ஆசிரியர்கள் முதலாக தற்பொழுது நம்மைக் காத்தருளும் கடவுளுக்கும் நம்முடைய வளர்ச்சிக்கு காரணமாக இருந்துகொண்டு இருக்கக்கூடிய அனைவர்க்கும் தினம் தோறும் உங்களுக்குளே ஒரு 5 நிமிடம் நன்றி பாராட்டுங்கள்.

புறநானூறு, திருக்குறளை அறநூல் என்று பாராட்டுகிறது ஏன்? அறங்களில் சிறந்தது நன்றி மறவாமை. இந்த நன்றி மறவாமை என்ற சிறந்த பண்பின் வாயிலாக பல்வேறு நற்பண்புகள் தோன்றி வளர வாய்ப்புள்ளது.

இந்த 'நன்றி' என்ற சொல் இன்று பொருள்சார் கலாச்சார உலகத்தில் சாதாரண வழக்கிற்கே கையாளப் பெறுகிறது.

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது அன்றே மறப்பது நன்று" (திருக்குறள் – 108) என்ற வள்ளுவரின் வைர வரிகளுக்கு இணங்க நன்றி உணர்ச்சியோடு வாழ்வோம் நன்றி. ■

# கையில் மிதக்கும் கனவா நீ...!



கன்னல் தமிழின் சுவையா நீ
கற்பனையில் வரும் கவிதையா நீ
கம்பன் நாவின் சொல்லா நீ
கதிரில் விளையும் பயிரா நீ

காற்றில் கலந்த மணமா நீ
காமன் விடுத்த கணையா நீ
கானகம் உலாவும் பிடியோ நீ
கானம் பாடும் குயிலோ நீ

கிறுக்கும் வார்த்தையின் பொருளோ நீ
கிழக்கு வானின் கதிரோ நீ
கிளர்க்கு மாசையின் உணர்வோ நீ
கிள்ளி வளவன் தோன்றலோ நீ

கீர்த்தி மிகுந்த பெண்பாவாய் நீ
குறுகிய சிற்றிடை கொண்டவள் நீ
கூடியே மகிழ்ந்திட வாராய் நீ
கெண்டை உருளும் நீராவியும் நீ

கேண்மை சூழ்ந்த விண்மீன் நீ
கையில் வந்த கனவா நீ
கொள்ள வேண்டும் துணையாய் நீ
கோதையே எனை ஏற்பாய் நீ

இரா. பேச்சியம்மாள்



# கிராவின் மருத்துவ நினைவுகள்

நைனாவ பார்க்க வரேன் பெண்ணியம் எனத் தொலைப்பேசியில் ஒரு கணீர்குரல் ஒலித்தது. அந்தக் குரலுக்குச் சொந்தக்காரர் சாகித்ய அகாடமி விருது பெற்ற சூல் நாவல் ஆசிரியர் சோ தர்மன் அவர்கள். வாங்க வாங்க என்று ஆர்ப்பரித்தேன் . நீ வரியா என்று அவர் கேட்ட போது, கேக்கவா வேணும் இரண்டு இலக்கிய பேராளுமைகளை ஒரே நேரத்தில பார்க்கறதுக்கு கசக்குதா என்ன என்று மனதில் நினைத்துக் கொண்டதில் ஒரு மகிழ்ச்சி. பள்ளிக்கு லீவு போட்டாவது வருவேன் என்றேன். பலமுறை கிராவை அவர் வீட்டில் சந்தித்திருந்த போதும் இந்தச் சந்திப்பு வரலாறாகும் என நினைத்தேன். ஆம் அப்படித்தான் நடந்தது. சோதர்மன் அவர்களுடன் தேனி மாவட்ட துணை ஆட்சியர் திருவாசகம் அவரும் அவர் குடும்பத்தாரும் வந்திருந்தனர். அவர்களோடு சென்று கரிசல் கடிதாசியைச் சந்தித்தோம்.

> மேதை என்ற பட்டம்
> கொடுத்து மகிழ்கிறது சமூகம்
> மனதில் இல்லை மகிழ்ச்சி
> செல்லாததால் பள்ளி
>
> தமிழ்நெஞ்சம் அமின்

அன்று கவிஞர் மு.பா, மேகலா செழியன், புதுவைப்பிரபா ஆகியோர் என் அழைப்பின் பேரில் இலக்கியத்தின் முன்னத்தி ஏரைப் பார்க்க வந்திருந்தனர். வயசு கடந்ததால் ஞாபகமறதி வந்தாலும் இலக்கி யத்தில் மறதியில்லை அவருக்கு. எல்லாவற்றை யும் உள்வாங்கிச் சரளமாகப் பேச ஆரம்பித்தார்.

கணவதி அம்மாள் அவர்கள்தான் எப்போது போனாலும் இன்முகத்தோடு வரவேற்பார்கள்.அவர்கள் இப்போது நம் மோடு இல்லையே. என்றாலும் இப்போது

அவருடைய மகனும் மருமக ளும் வணக்கம் சொல்லி,அந்த மனக் குறையைத் தீர்த்தனர். அப்போது தர்மன் தங்கள் ஊர் கோவில்பட்டி ஸ்பெசல் கடலைமிட்டாயும் கடலை பர்பியும் வாங்கி வந்திருந்தார். அதை கிராவுக்கு பையோடு கொடுத்தார். அங்கிருந்த அனைவருக்கும் மிட்டாய் பரிமாறப்பட்டது. முன்னமே எனக்கும் கிராவுக்கும் சமமாகப் பகிர்ந்து எனக்கானதை என்னிடம் கொடுத் திருந்தார். அம்மிட்டாய்கள் எனக்கு மிகவும் பிடித்தமானவை என்பதால் எனக்காகவும் கொஞ்சம் வாங்கிவரச் சொல்லியிருந்தேன். அடடே கோவில்பட்டி பலகாரமா எனக் கேட்டுவிட்டு, அவ்வூரில் கடலை விளைவதில்லை என்றும் எல்லாம் வெளியிலிருந்து வருவதாகவும், மிட்டாய்கள் உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் படுவதை விலாவாரியாகச் சொன்னது ஆச்சர்யமாக இருந்தது. அவ்வூர் பெரும்பாலான மக்களின் குடிசைத் தொழில் இதுதான் எனச் சொன்னது கூடுதல் சிறப்புச் செய்தி. சிலகண மௌனத் திற்குப் பின்னர் ஒவ்வருவரும் அறிமுகப் படுத்திக் கொண்டோம். புன்சிரிப்போடு தலை யசைத்துக் கொண்டார்.

கிராவோடு பேசுகையில் எனக்கு மனதிலேயே தோன்றியது இதுதான். 99 வயது கடந்தவர் ஈசி சேரில் ஒரு வளைந்த மூங்கிலைப் போல சாய்ந்திருந்தார். மூங்கில் வளையும் என்றும் முடங்காது. அதுபோலத்தான் கிராவும். அத்தனை வயசிலும் ஒருகம்பீரம் ஆளுமை இருந் தது. வெற்று உடம்பு நரைத்த முடி கைகாலெல்லாம் வயதின் முதுமை தோற் றம். இடுப்பில் ஒரு வெள்ளை வேட்டி .மேல்சட்டையில்லை. அரைநிர்வாண காந்தி ஜியை தான் எனக்கு நினைவூட்டி னார். கொஞ்சம் முகம் வாட்டமாக இருந்ததாக உணர்ந்தேன். ஏனெனில் அவருடைய மனைவி இறந்து சில மாதங்களில் நாங்கள் சென்று இருந்தோம். யாரையும் அதிகமாக அவர் பார்ப்பதில்லை என்பதாக சொல்லி இருந்தார்கள். இந்த முதுமை வயதிலும் குரல் மட்டும் இளமை மாறாமல் துடிப்போடு உயிர்ப்போடு இருக்கிறதே எப்படி?







எல்லாரையும் கேட்டறிந்து விட்டு சிரித்தார் பற்கள் பளிச்சிட.

சோதர்மன் பக்கம் திரும்பி அவர் ஊர் பற்றி. உறவு பற்றி அவரோடு பேச ஆரம்பித்தார். இரண்டுபேரும் கதைக் குள் கதையாக ஐக்கியமாயினர். அதோடு சோ தர்மனும் அவரும் நாட்டு நடப்புகள் இன்றைய இலக்கிய வாதிகள் என அவர்களுக்கே உரிய தோரணையில் நெடுநேரம் பேசிக் கொண்டார்கள். இடையிடையே எங்களைப் பேச்சு சொல்லி கலாய்த்தார்கள். நாங்களும் கேட்டுச் சிரித்து மகிழ்ந்து கொண்டாடி னோம் என்றுதான் சொல்ல வேண்டும்.

சோதர்மன் அவர்களோடு வந்திருந்த துணைநிலை ஆட்சியர் திருவாசகம் அவர்கள் இலக்கியப் பேச்சை ஆழ்ந்து கேட்டார். அவரும் இலக்கியம் குறித்துப் பேசினார். அடுத்த படைப்பு என்ன எழுது கிறீர்கள் என்று கேட்ட போது "அவள்" என்ற நா வல் எழுதுவதாகச் சொன்னார். இந்த வயதிலா? என வாய்ப்பிளந்து கேட்க நினைத்த வார்த்தைகள் உள்ளுக்குள் சென்றன. இந்நாவலை எழுதி முடித்தாரா எனத் தெரியவில்லை. ஆயினும் எனக்கது வியப்பாகத் தானிருந்தது.

அடுத்ததாக அவர் நாவலைப் பற்றி சொன்னபொழுது, நாவல் எப்படி தோன்றியது தெரியுமா? என்று கேட்டு அதன் வரலாற்றை மிக அழகாக தேர்ந்த கதை சொல்லியாக சொன்ன விதத்தை விவரித்தால் இடம் போறாது. கடிதமே கதையானவரலாற்றை ,அதுவே நாவலான வரலாற்றை அடுக்கு மொழியில் சொல்லிச் சென்றார். இடையிடையே நீண்ட நேரம் உரையாடலும் நடத்தினோம். இரண்டு மணி நேரம் போனதே தெரியவில்லை

அங்கு இலக்கிய ஆளுமை கிரா பற்றி வேறொன்றையும் புரிந்து கொள்ள முடிந்தது. அவருடைய மருமகள் மோர் கொண்டு வந்து தந்தார்கள் . எல்லோரும் பருக ,நான் மட்டும் வேண்டாம் என்றேன். ஏன் என்று கேட்டார். எனக்கு வீசிங் இருக்கிறது அது அதிகப்படுத்திவிடும் என்றவுடன் கலகலவென்று சிரித்து இப்படி தான் இந்த சமூகம் நாசமாக போகிறது அவருக்கேயுரிய தொனியில் சொன்னார். இந்த முழு உடம்பையும் மனசையும் குளிர்விக்ககூடியது மோர்.காலங்காலமாக நாம் அதை பருகிக் கொண்டிருக்கிறோம். அது ஓர் அருமருந்து. குடிங்கம்மா ஒன்றும் செய்யாது என்றவுடன் தட்டாமல் குடித்தேன். இப்ப உங்களுடைய மனசும் ஒடம்பும் அருமையாக இருக்கும் என்று சொன்ன போது எனக்கு அதிர்ச்சி . அவர் ஒரு இலக்கியவாதியாக மட்டுமல்ல கைத் தேர்ந்த மருத்துவராகவும் அங்கு என்மனதிற்குள் உதித்தார்.

எல்லோரும் புகைப்படம் எடுத்துக் கொண்டு புறப்படத் தயாரானோம். தன் மகனை அழைத்து அவர் வீட்டிற்குப் பின்னால் இருக்கும் தென்னை மரத்தில் ஒரு வெற்றிலை கொடி படர்ந்து இருந்த திலிருந்து கொஞ்சம் வெற்றிலை பறித்துத் தரச் சொன்னார். சளிக்கு ரொம்ப நல்ல தென்றார். அவர் மகனும் நிறைய வெற்றிலை பறித்துக் கொடுத்தார். வேண்டும் போதெலாம் வந்து பறித்துப் போகும்படிச் சொன்னார். வேண்டு மட்டிலும் வெற்றிலையைப் பாக்கோடு தின்று தீர்த்தேன். கொஞ்சம் வீசிங் போய் விட்டதையும் உணர்ந்தேன்.

அடடா இந்தக் கொரோனா காலத்துல நிறைய பேருக்கு வெற்றிலை தேவைப் படுகிறதே. ஒரு வெற்றிலை இரண்டு கிராம்பு ஒரு ஏலக்காய் கொஞ்சம் தேன் எனத் தேவைப்படுகிறதே. கொடுக் கவோ பறிக்கவோ ஆளின்றி அந்த வெற்றிலைக் கொடி எப்படி இருக்கும்? இப்போது எங்கு வெற்றிலையைப் பார்த் தாலும் கிராவின் நினைவுதான் வருகிறது.

முனைவர்.
**பெண்ணியம் செல்வகுமாரி,**
புதுச்சேரி.



# பெண்

பெண் இல்லா உலகம் இல்லை,
பெண் இல்லா சரித்திரம் இல்லை,
பெண் என்பவள் யார்???..

பெற்றவளுக்கு பெண்ணாக பிறந்ததால்,
அவள் மகளாகிறாள்...
அக்கா அண்ணனோடு பிறந்ததால்,
அவள் தங்கையாகிறாள்...
தம்பி தங்கையுடன் பிறந்ததால்,
அவள் தமக்கையாகிறாள்...
தாய் இல்லாததால் உடன்பிறப்பிற்கு,
அவள் தாயாகிறாள்...
கன்னி வயதில் காதலை சுமப்பதால்,
அவள் காதலியாகிறாள்...
மணமாலை சூடியதும் ஒருவனுக்கு,
அவள் மனைவியாகிறாள்...
கணவனை கரம் பிடித்ததால்,
அவள் அவனுக்கு முதல்
குழந்தையாகிறாள்...
மழலையை ஈன்ற பின்,
அவள் தாய்மையாகிறாள்...

வேர்கள் இல்லாமல் விழுதுகள்
எப்படி மண்ணில்...
விதைகள் இல்லாமல் மரங்கள்
எப்படி காடுகளில்...
பெண்கள் இல்லாமல் மானிடர்கள்
எப்படி இவ்வையகத்தில்...

பெண் என்பவள் பொக்கிஷம்,
உலகின் உயிரோவியங்கள் பெண்கள்,
நாட்டின் கண்கள் பெண்கள்,
பெண்மையை போற்றுங்கள்,
பெண்மையை மதியுங்கள்,
பெண்மைக்கு முக்கியத்துவம் கொடுங்கள்,
அவளுக்கும் சம உரிமை கொடுங்கள்...
நான் ஒரு பெண் என்பதால் அல்ல...
நீங்கள் ஒரு ஆண் மகான் என்பதால்..

– இளம் தாரகை
(ஷஹ்னா ஸப்வான்)

# மௌனியானவள்

மௌனியானவளுக்கு
பேசத் தெரியாது
என்பதெல்லாம் இல்லை
அவள் உள்ளத்தை
உடைப்பதை விடவும்

உறவை நிலைக்கச் செய்வதில்
அக்கறை கொண்டிருக்கிறாள்

உங்களை அவள் நேசித்த
காரணத்துக்காகவே
அதிகம் விட்டுக் கொடுக்கிறாள்
அதிகம் கருணை காட்டுகிறாள்
அதிகம் சகித்துக் கொள்கிறாள்

அவளை நீங்கள் காயப்படுத்தும்
போதெல்லாம்
அவள் கண்ணீர்தான்
பேசிக் கொள்கிறது
அவள் மொழிகள் விலங்கிட்டுக்
கொள்கின்றன

நீங்கள் அவள் உணர்வுகளை
உடைக்கும் போதெல்லாம்
அவள் இதயம் இறந்து போகிறது
அவள் இதழ்கள் மட்டும்
உங்களுக்கு மகிழ்ச்சியாய் இருப்பதாய்
காட்டிக் கொண்டிருக்கின்றன

அவளை விடவும்
நீங்கள் நேசிக்கும் ஒருவர் இருந்தால்
அவளை விடவும்
நீங்கள் நம்புமொருவர் இருந்தால்
அவளை விடவும்
நீங்கள் கொண்டாடித் தீர்க்கும்
ஒருவர் இருந்தால்

அவளை விடவும் நீங்கள்
விரைவில் காயப்பட்டு போவீர்கள்

அவள் மௌனி தான்
உங்கள் உணர்வுகளை
மதிக்கும் வரை
உங்களைப் பொருத்த மட்டும்
அவள்
மௌனியாகவே இருக்கின்றாள்
மௌனியாகவே இறக்கின்றாள்

**- ஏரூர் நிலாத்தோழி**
(பாத்திமா அஸ்க்கியா முபாறக்)

# நெஞ்சத்திற்கு ஆறுதல் தர வா!

பூபாளத்தில் தொடக்கி வைத்த காதலை...
ஏன் முகாரி கொண்டு
முற்றுப்புள்ளி வைக்க நினைக்கிறாய்?
பிரிவு என் அகராதியிலிருந்து
அழிக்கப்பட்ட சொல்....
அதை ஏன் என்... வாழ்க்கை
அத்தியாயத்தில்
சேர்க்க நினைக்கிறாய்?
எனக்கொரு வாழ்வென்றால்
அது உன்னோடு தான் என்றாய்
வாழ வந்த எனக்கு
வருத்தங்களை மட்டும் தந்து விட்டு ...
ஏன் வசந்தத்தை தர மறுக்கிறாய்..?

உனை என் தெய்வமென நினைத்து ...
உனக்காகக் கட்டிய என்
இதயக் கோயிலில்
வாழத்தான் மறுத்தாய் - பரவாயில்லை ...
ஏன் இடித்துச் சாய்க்கவும்
நினைக்கிறாய்???

இதயக் கதவுக்குள் வரத்தேவையில்லை...
வாசல் வரையாவது வந்து செல்
வாசல் படியருகில் தான்
என் கால்கள் தவமிருக்கின்றன....

ஒவ்வொரு நாளும் விடியும் பொழுதாக
வரத் தேவையில்லை...

மாதமொருமுறை
பௌர்ணமி போலாவது வந்து விடு...
அது உனக்காக ஏங்கிக் கொண்டிருக்கும்
நெஞ்சத்திற்கு ஆறுதலாக அமையட்டும்...

**ராஷிட் ஜலால்.**
கொல்லம்.



# INNER CHILD

சர்வதசே வாழ்வியல் ஆலோசகர்

# Dr. ஃபஜிலா ஆசாத்

**(International Life Coach – Mentor – Facilitator)**

Some of us think holding on makes us strong but sometimes it is letting go – Herman hesse

நின்று பிடிப்பது மட்டும் அல்ல சில நேரங்களில் கடந்து செல்வதும் வலிமையே – ஹெர்மென் ஹெஸ்ஸே

உங்களுடைய ஏழு வயது குழந்தையை உங்கள் காரை சாலையில் ஓட்டிச் செல்ல அனுமதிப்பீர்களா....

சொல்லும்போதே பதை பதைப்பாக இருக்கிறதல்லவா. ஏழு வயது குழந்தையை காரை ஓட்ட அனுமதிப்பதா, எந்தப் பெற்றோராவது அப்படிச் செய்வார்களா என்று கூறும் முன் உங்கள் வாழ்க்கையை பல நேரங்களில் அத்தகைய சிறு குழந்தையின் பொறுப்பில்தான் கொடுக்கிறீர்கள் என்பதை அறிவீர்களா....

நீங்கள் என்றாவது யோசித்திருக்கிறீர்களா....சிலர் மிகவும் படித்திருப்பார்கள். விளையாட்டு வேடிக்கை என்று எல்லாவற்றிலும் ஆல்ரவுண்டராக இருப்பார்கள். ஆனால் சிறு வயதில் ஒரு முடிவை எடுக்க தயங்குவது போலவே இப்போதும் தயங்குவார்கள். அல்லது ஏதாவது ஒரு முடிவை எடுத்து விட்டு, பின் சிறு பிள்ளைத் தனமான தவறான முடிவை எடுத்து விட்டேன் என்று வருந்திக் கொண்டிருப்பார்கள். படித்த பண்பட்ட அவர்கள் தவறான முடிவை எப்படி எடுத்தார்கள் என்று நீங்கள் வியந்திருப்பீர்கள்.

பல நேரம் உங்களுக்கும் கூட அந்த மாதிரியான ஒரு அனுபவம் ஏற்பட்டிருக்கும். வாழ்க்கையில் எவ்வளவோ பக்குவபட்ட பின்பும் பலதும் அறிந்து தெரிந்து கொண்ட பின்பும் ஏன் உங்கள் முடிவுகள் முன்பு போலவே பயனற்று போகின்றன என்று வியந்திருப்பீர்கள். எவ்வளவோ தெளிவாக இருந்தாலும் ஏன் மீண்டும் மீண்டும் எல்லா முடிவுகளும் தவறாகவே போகின்றன என்று தோன்றி இருக்கக் கூடும்.

பல நேரங்களில் பல விதமான அனுபவங்களின் பேரில் உறவுகளுடனும்

நண்பர்களுடனும் வேலை பார்க்கும் இடங்களிலும் எப்படி நடந்து கொள்ள வேண்டும், அவர்களிடம் எப்படி பேச வேண்டும், எதைச் சொல்ல வேண்டும், எதைத் தவிர்க்க வேண்டும் என்று மிகத் தீர்மானமாகத் தயாராக இருந்தாலும், கடைசியில் ஏதாவது ஒன்று பிரச்னையாக மாறி சண்டை சச்சரவுகள் என இல்லாத பிரச்னைகள் எங்கிருந்தாவது வந்து விடுகின்றனவே என உங்கள் மனம் தவித்திருக்கும். என்ன சொன்னாலும் ஏன் தவறாகப் போகிறது என சங்கடமாக இருந்திருக்கக் கூடும்.

என்ன இருந்து என்ன.. என் வாழ்க்கையில் எனக்கு கன்ட்ரோல் இல்லையே.. என்னவோ செய்ய நினைக்கிறேன்.. ஆனால் என்னவோ நடக்கிறது என மனம் வருந்தி இருப்பீர்கள்.

இதற்கு மிக முக்கியமான காரணம் உங்களுக்குள் இருக்கும் குழந்தை மனப்பான்மை பல நேரங்களில் உங்களையுமறியாமல் உங்களைத் தன் போக்கில் இழுத்து செல்வதுதான் என்பதை நீங்கள் அறிவீர்களா. இதனை 'Inner Child Effect' 'மனக் குழந்தையின் பாதிப்பு' என்கிறது வாழ்வியல்.

அதாவது, சிறு வயதில் ஒவ்வொன்றைப் பற்றியும் ஒரு பிம்பம் உங்கள் மனதில் உருவாகி இருக்கும். நீங்கள் வளர்ந்த பின்பும், சூழல்கள் மாறி இருந்தாலும் சிலவற்றில் அது பற்றிய உங்கள் attitude மட்டும் உங்களிடம் மாறாமல் அப்படியே இருக்கும். உங்களுக்கு முன்பு பிடித்த பொருள் இப்போது மாறி இருக்கலாம். இளவயதில் பொம்மைக் கார் பிடித்திருந்தால் இப்போது உண்மைக் கார் பிடிக்கலாம். ஆனால் அப்போது எப்படி அந்த பொம்மைக் கார் கிடைக்காத போது ஒரு இயலாமையாக இருந்ததோ அதே வகையிலேயே இப்போது உண்மையான கார் வாங்கும் வரை ஒரு இயலாமை உங்கள் மனமெங்கும் நிரம்பி இருக்கும். ஏன் எனக்கு மட்டும் இப்படி எனும் கேள்வி உங்கள் மனதில் தொங்கி நிற்கும்.

உங்கள் வாழ்க்கையில் ஏதேனும் ஒரு விஷயம் தவறாக நடந்து இருந்தால், அதிலிருந்து வெளியேறி உங்களை நீங்கள் வேறு எந்த விசயங்களில் ஈடுபடுத்திக் கொண்டிருந்தாலும் அவற்றிலும் முன்பு நடந்தது போன்ற பிரச்னைகளே மீண்டும் மீண்டும் ஏற்படுவது போலத் தோன்றும்.

கோபம், வருத்தம், பொறாமை என்று பல்வேறு எதிர்மறை உணர் வுகள் சிறு பிள்ளைத்தனமான விஷயங்களுக்கெல்லாம் உங்களுக்குள் தோன்றி, உங்கள் வாழ்க்கைப் பாதையையே மாற்றக் கூடிய முடிவுகளை உங்களை எடுக்க செய்யக் கூடும்.

உங்களையும் மீறி ஏதாவது ஒன்றிற்கு மீண்டும் மீண்டும் addicted ஆவதும் புரிந்தும் புரியாமல் ஒன்றால் இழுத்துச்செல்லப்படுவதும்சின்னச்சின்ன விஷயங்கள் கூட உங்களைத் தடுமாறச் செய்வதும் ஏன் என்று உங்களுக்குப் புரியாமல் இருக்கும். இதிலிருந்து எப்படி மீள்வது என்று வருந்தி இருப்பீர்கள் உங்கள் செய்கைகளையே உங்களால் நம்ப முடியாமல் இருந்திருக்கும்.

இவையெல்லாம் நீங்களாகச் செய்யவில்லை. உங்கள் மனதில் இன்னும் தங்கிப் போயிருக்கும் inner child இன் வெளிப்பாடே என்கிறது வாழ்வியல்.

இதைப் புரிந்து கொண்டால், இன்றைய உங்கள் உணர்வுகளின் வெளிப் பாடு என்பது, உங்களிடம் சிறு வயதில் தங்கிப் போன ஏதோ ஒரு விருப்பத்தின் ஏக்கம் அல்லது ஏதோ ஒரு ஆற்றாமையின் வலி அல்லது மனதில் ஆழமாக தங்கிப் போன தீர்க்கப் படாத ஒரு கோபத்தின் குரல் அல்லது என்றோ ஏற்பட்ட அவமானத்தின் அடிச்சுவடு, இன்று எழுந்து பேசுகிறது என்று உங்களுக்குப் பிடிபடும். அன்றைய அந்த உணர்வுகள் மனதில் பாசி போல் படிந்து போயிருப்பது புலப்படும். அது இன்று நீங்கள் எடுக்கும் முடிவுகளிலும் உங்கள் வாழ்க்கையிலும் பிரதிபலிக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

உதாரணமாக நீங்கள் சிறு பிள்ளையாக இருக்கும் போது பட்ட அவமானம், உங்கள் சுற்றம் நட்பு ஆசிரியரென யாராவது உங்களை கடினமாக பேசிய போது உங்களுக்குள் எழுந்த இயலாமை அப்போது நீங்கள் உங்களுக்குள் ஏற்படுத்திக் கொண்ட சில வைராக்கியமான

முடிவுகள் உங்களையுமறியாமல் உங்கள் மனதில் நிரந்தரமாக தங்கி அது இன்று உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எடுக்கும் பிரதான முடிவுகளில் வெளிப்படும்.

ஆனால் என்றோ ஒரு காலத்தில் ஏதோ ஒரு சூழலில் நிகழ்ந்த ஏதோ ஒரு நிகழ்வினை அடிப்படையாக வைத்து இன்றைய நிலையில் எடுக்கும் முடிவுகள் எப்படிச் சரியாக இருக்க முடியும் என்று யோசியுங்கள். என்றோ நடந்த ஒன்றை வைத்து இப்போது உங்கள் முடிவுகளை எடுக்கும் போது அது உங்கள் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் எப்படி யெல்லாம் பாதிக்க கூடும், உங்கள் வளர்ச்சியை அது எந்த வகையில் தடுக்க கூடும் என்பது உங்களுக்குப் பிடிபடும். சிறுபிள்ளை மனப்பான்மையோடு ஒன்றைச் செய்யும் போது, நீங்கள் இதுவரை கற்ற விஷயங்கள் அனைத்தும் எந்தப் பலனும் அற்றதாகி விடுகிறது.

நீங்கள் உங்கள் முந்தைய கால கட்டங்களையும் உங்கள் அன்றைய மனப்பான்மையையும் இப்போதைய கால கட்டங்களையும் இன்றைய மனப் பான்மை யையும் அது இரண்டிற்கும் இருக்கக் கூடிய வேறுபாடுகளையும் சரியாகப் புரிந்து கொள் ளுங்கள். மற்றவர் களை நீங்கள் முன்பு பார்க்கக் கூடிய கோணத்தையும் இப்போது பார்க்க வேண்டிய கோணத்தையும் அலசிப் பாருங்கள். எது உங்களை தூண்டி விடுகிறது என்பது புரியும். எதனால் உங்களுக்கு எதிர்மறை உணர்வுகள் வருகிறது, எது உங்கள் வாழ்க்கையின் ஓட்டத்தில் எத்தனை கற்றாலும் எதிர்நீச்சல் போட்டாலும் மற்றவர்களை விட பின் தங்கிப் போக செய்கிறது, என்பதை அறிந்து அதை சரி செய்ய முடியும். அது உங்கள் communication னையும் உங்கள் வாழ்க்கையையும் மேம்படுத்தும்.

தவிர, சிறு வயதில் ஏற்பட்ட எதிர் மறை எண்ணங்களை சரி செய்யும் போது அன்று நீங்கள் அனுபவித்த நேர்மறை எண்ணங்கள் உங்கள் நினைவில் நிறை யும். அது இன்றைய வாழ்க்கைக்கான நம்பிக்கையை தரும்..

இன்றால்...அன்றை வெல்லுங்கள்.. நாளை நன்றாகும்! ■

# என்னவளே

ருவிழிகள் போதாது..!!
என்னவளே
உன் அழகைக்காண
இருவிழிகள் போதாது..!!

நிலவிலே அழகேது..!!
என்னவளே
உன்னோடு ஒப்பிட்டால்
நிலவிலே அழகேது..!!

நடமாடும் மலரேது..!!
என்னவளே
பூமியிலே உன்போல்
நடமாடும் மலரேது..!!

சிரிக்கின்ற சிலையேது..!!
என்னவளே
உலகிலே உன்போல்
சிரிக்கின்ற சிலையேது..!!

பிறந்தது கிடையாது..!!
என்னவளே
பேரழகி உன்போல்
இம்மண்ணில் இதுவரை
பிறந்தது கிடையாது..!!

- தமிழ்மதன்





# தமிழ் தென்றலின் தீராக்காதல் பசுமை

அரிமா மகளிர் சங்க நிர்வாகிகளுடன் மருத்துவர் தமிழ் தென்றல் அருகில் வலங்கைமான் அரசினர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர் கு தமிழரசு மற்றும் பேட்டி கண்ட இராம வேல்முருகன் இடம் கல்லூரி வளாகம்

மனித உயிர்களைக் காக்கும் மகத்தான பணியை ஆற்றுபவர்கள் மருத்துவர்கள்; எனவேதான் மருத்துவர்களை இறைவனுக்கு ஒப்பானவர்களாக நாம் போற்றுகிறோம். அந்த மருத்துவர்கள் மனிதகுலத்தை நேசிப்பவர்களாக இருக்கும்போது அவர்களது பணி மேலும் சிறக்கும். மனிதகுலத்தைத் தாண்டி உலகில் உள்ள உயிர்களையெல்லாம் நேசிப்பவராக அந்த மருத்துவர் இருப்பின் அவரது பணி நிச்சயமாகப் பாராட்டக் கூடியதாகத்தான் இருக்கும். வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய வள்ளலாரைப் போல தாவர இனங்களின் மேல் அன்பு கொண்டு மரங்களை வளர்த்து அவற்றைப் பாதுகாப்பாக வளர்க்கவும் செய்யும் ஒரு மருத்துவரைத்தான் நாம் சந்திக்கின்றோம். தனது மருத்துவப் பணிகளுக்கிடையே சமூகம் நலம் பெற வேண்டி இதுவரை 10000 மரங்களுக்கு மேல் வளர்த்து வரும் மருத்துவர் சகோதரி திருமதி தமிழ் தென்றல் அவர்களிடம் கண்ட நேர்காணல் இதோ...

**சந்திப்பு : தமிழ்செம்மல் இராம வேல்முருகன்**

வணக்கம் அம்மா

தமிழ்நெஞ்சம் மின்னிதழுக்காகத் தங்களை நேர்காணல் செய்ய விரும்புகிறன்

தங்கள் பெயர் தமிழ்த்தென்றல் என்று உள்ளதே இது தங்கள் பெற்றோர் இட்ட பெயரா அல்லது தாங்களே வைத்துக் கொண்டீரகளா?

ஆம். எனது தந்தையார் தமிழரசன் எனக்கு இட்ட பெயர் தென்றல். அப்பாமீது கொண்ட அளவுகடந்த அன்பின் அடையாள மாகவும், தமிழ், தமிழினம் மீதுள்ள எனது பற்றும், நான் ஒரு தமிழ்ப்பெண் என்பதை என் பெயரை பார்த்ததுமே தெரியும்போது ஏற்படும் பெருமிதமும் தமிழ் என்ற முன்னெழுத்தை எனது 26வது அகவையில் இணைத்துக்கொண்டேன்.

தங்கள் பெற்றோரைப் பற்றி கூறுங்களேன்

அப்பா PUC வரை படித்தவர்.. ஒரு ஒப்பந்தக்காரர்..கம்யூனிசக்கொள்கையை கடைப்பிடித்தவர். தொழிலில் நேர்மையும், தொழிலாளர்களிடம் மனிதாபிமானதத்துடன் இருந்ததால் அதிகம் நட்டத்தையே சந்தித் தவர். அம்மா செயலட்சுமி SSLC வரை படித்தவர்..என்னையும், என் இளைய சகோ தரி ஜென்னியையும் சிறப்பாக வளர்த்த அன்புத்தாய்...

தங்கள் சொந்த ஊர் மற்றும் மாவட்டத்தைப் பற்றி..

எனது ஊர் மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் தாலுக்காவில் காவிரிக்கரையோரம் இருக்கும் ஒரு அழகிய சிறிய கிராமம்தான் மாதிரிமங்கலம்..

தாங்கள் விரும்பிப் படித்து மருத்து வர் ஆனீர்களா அல்லது பெற்றோரின் வற்புறுத்தலால் மருத்துவர் ஆனீரகளா?

ஆறாம் வகுப்பில் படிக்கும்போது அப்பா என் மனதில் விதைத்தது. நாளடைவில் மருத்துவராக வேண்டுமென்பது லட்சியமாகி விட்டது..

ஹோமியோபதி என்ற மருத்துவப் படிப்பைத் தாங்கள் தெரிவு செய்ய என்ன காரணம்?

12ம் வகுப்பு முடித்து Entrance exam முடிவு தெரியும்வரை எனக்கு ஹோமியோபதி பற்றி எதுவும் தெரியாது. நான் பெற்ற மதிப்பெண் என்னை ஹோமியோபதி

பள்ளி மாணவிகளுடன் மரக்கன்றுகள் நடும் பணியில் மருத்துவர் தமிழ் தென்றல்





களப்பணியில் மரக்கன்றுகளை நடுவதற்குக் குழிகளைத் தோண்டும் பணியில் மருத்துவர்

படிக்க தகுதியானவளென்று அறிவித்ததால் இந்தப்படிப்பை நான் தேர்வு செய்தேன்...

**ஹோமியோபதி மருத்துவத்தில் அனைத்து வகையான நோய்களுக்கும் தீர்வு உள்ளதா?**

ஆம். இருக்கிறது. ஆனால் நோயின் தீவிரம் அதிகமாக இருந்தால், இயற்கையின் விதிகளுக்குட்பட்டே மருந்து வேலை செய்யும்.

**ஹோமியோபதி மருத்துவத்தில் நோய்க்கு நிரந்தரத் தீர்வு ஏற்படும் எனக் கூறப்படுகிறதே அது உண்மையா?**

ஆம். பலபிணிகளைஹோமியோபதி முழுமையாக குணப்படுத்துமென்பது முற்றிலும் உண்மைதான்..

**எந்தெந்த நோய்களுக்கு நிரந்தரமான தீர்வு ஹோமியோபதியில் உள்ளது?**

ஆயிரக்கணக்கான நோய்களில் 75% சதவீதம் நிரந்தரமாக குணப்படுத்தலாம். உதாரணமாக அறுவை சிகிச்சை தேவைப் படும் தொண்டைசதை அழற்சி (Acute tonsillitis,), கால்ஆணி (Corns), சிறுநீரகக்கல் (Renal calculi), ... போன்ற நோய்களை அறுவை சிகிச்சையின்றி, ஹோமி யோபதி மருந்துகள் மூலம் நிரந்தரமாக குணப்படுத்தலாம்.

**ஹோமியோபதி மாத்திரைகள் பெரும்பாலும் ஒரே மாதிரியாக உள்ளனவே. அதனை எவ்வாறு கையாள்வது?**

கடினம்தான். மருந்துப்புட்டி மீது மருந்தின் பெயரை எழுதி ஒட்டிவிட்டு பிறகுதான் மருந்தை (Dilutions) சர்க்கரை உருண்டைகளில் சேர்க்க வேண்டும். குறிப்பிடப்படாவிட்டால் என்ன மருந் தென்று கண்டுபிடிக்க முடியாது.

**தாங்கள் மருத்துவராகப் பணி யாற்றும்போதே சமூகநலன்களிலும் ஈடு பாடு உடையவராக உள்ளீர்களே? அந்த ஈடுபாடு எவ்வாறு ஏற்பட்டது?**

Noble profession.. ஒரு மகத்தான தொழில்... மருத்துவம்.. படித்ததே மக்கள் பணி செய்யத்தான்.. எளிமையான குடும் பத்தில் பிறந்த எனக்கு வறுமையின் வலிகள் நன்றாகவே தெரியும். மருத்துவம் பயின்ற அரசுக்கல்லூரியில் மருத்துவம் பயிற்சி பெற்றபோது வறுமையின் கோடுகள் பதிந்த நோயுற்ற மக்களையே அதிகம் சந்தித்ததால், மக்கள்பணி செய்ய வேண்டுமென்ற எண்ணமே மேலோங்கியது..

**எம்மாதிரியான சமூகநலப் பணி களைத்தாங்கள் மேற்கொண்டு வருகிறீர்கள்!**

பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்கள் வசிக்கும் குக்கிராமங்களுக்கு, சில தன்னார்வ நிறுவனங்கள், அரிமா குழுக்கள். மற்றும் நண்பர்கள் உறவினர் களின் உதவியோடு மருந்துகளோடு மருத்துவக்குழுவோடு சென்று, அங்கே வசிப்பவர்களின் வீட்டு வாயிலில் அமர்ந்து

மருத்துவம் செய்துவிட்டு வருவோம் ..

மழைக்காக மரம் நடுகிறேன்

பறவைகளும் நானும் பகிர்ந்துண்ண பப்பாளி வளர்க்கிறேன் ...

ஒவ்வொரு வீட்டிலும் கட்டாயமாக வளர்க்கப்படவேண்டிய மரங்களான மா, பலா தென்னை கொய்யா நெல்லி மரக்கன்றுகள் கொடுத்து வளர்க்க சொல்லுகிறேன்.

மரம்வளர்ப்பில் தங்களுக்கு ஈடுபாடு வர என்ன காரணம்?

இயற்கை வளங்களை கொள்ளை யடிப்பதோடு தமிழ் மக்கள் வாழமுடியாத ஒரு சூழலை ஏற்படுத்தும் அரசின் ஒரு திட்டமான டெல்ட்டா விளைநிலங்களை பாழாக்கும் மீத்தேன் எரிவாயு திட்டத்தி னால் வரப்போகும் தண்ணீர் பஞ்சத்தை தவிர்க்கவே, மரமிருந்தால் மழை வரும் என்ற நம்பிக்கையோடு மரம் வளர்க்கிறேன்..

மற்றவர்களைப்போல் அல்லாமல் தாங்கள் பெரியமரக்கன்றுகளை அதாவது ஐந்து அடிக்குக்குறையாத உயரம் உடைய மரக்கன்றுகளை வழங்குகிறீர்கள் அதுமட்டுமல்லாது அவற்றைப் பாதுகாக்க இரும்புக் கூண்டுகளையும் வழங்கி வருகிறீர்கள். இந்த எண்ணம் எவ்வாறு தோன்றியது?

ஒரு அடி இரண்டு அடி மட்டுமே வளர்ந்த கன்றுகள் பைகளிலிருந்து பூமிக்கு மாற்றப்படும்போது, அதிக வெப்பம் அல்லது மழை இரண்டையுமே தாங்காது... அசைவப் பிரியர்கள் அதிகம் வாழும் நாட்டில் ஆடு மாடுகளுக்கா பஞ்சம்.. அவைகளிடமிருந்து காப்பாற்றிடவே பாது காப்பு கூண்டுகள்..

இதுவரை எவ்வளவு மரக்கன்றுகள் நட்டிருப்பீர்கள்?

கொடுத்தது வைத்தது என்று கணக்கு போட்டால் 10ஆயிரம் மரக் கன்றுகள். .

சமூக சேவைகளை ஆற்றுவதற்கான நிதியை எவ்வாறு திரட்டுகிறீர்கள்? அல்லது தங்கள் சொந்தச் செலவில் செய்கிறீர்களா

மரக்கன்று நடும் ஒரு விழாவில் அதிகாரிகள் சிறப்பு விருந்தினர்களுடன் மருத்துவர் தமிழ் தென்றல்





மகளிர் தின விழாவில் மருத்துவர் தமிழ் தென்றலைக் கௌரவிக்கும் தமிழ்ச்செம்மல் இராம வேல்முருகன்

75% நண்பர்கள் மற்றும் உறவினர் கள், 25% என் பங்கு.

**தாங்கள் நட்ட மரக்கன்றுகள் பெரிய மரமானபிறகு அவற்றைக் காணும் போது தங்கள் உணர்வுகள் எவ்வாறு இருக்கும்?**

நான் உயிர்வாழ உயிர்வாயு கொடுத்த இயற்கை அன்னையிடம் நான் பட்ட கடன் தீர்ந்த திருப்தி வரும்... அந்த மரம் தரப்போகும் மழை , நிழல், குளிர்ச்சி, பூ, காய், கனி, மருந்துகள் உயிர்வாயு என பல நன்மைகளை நினைத்தால் மனம் பரவசமடைகிறது..

ஒரு பெண்ணாகச் சமூகச்சேவை ஆற்றுவதில்தங்களுக்குஏற்பட்டநேர்மறை மற்றும் எதிர்மறை அனுபவங்கள் குறித்து. முதலில் எதிர்மறை.. என்னுடைய சமூக சேவை என்பது கடலில் கரைத்த பெருங்காயம் போலத்தான்.. மிகச்சிறிது..பிறருக்கு உதவ பொருளாதாரம் தேவைப் படும்போது மற்றவர்களிடம் அதற்கான உதவியை கேட்க தயக்கமாக இருக்கும்..குறிப்பாக ஆண் நண்பர்களிடம்..மறுத்து விட்டால் அவமதிப் பாகிடுமே என்ற எண்ணம்.. அவ்வளவுதான் ...

ஒரு சமூக சேவகியாக., மக்களின் சின்ன சின்ன தேவைகளை மட்டுந்தான் பூர்த்தி செய்துள்ளேன். ஆனால் அதுவுமே அவர்களுக்கு மகிழ்ச்சி தந்தபோது என் மனம் நிறைவடையும்...

ஒரு நீண்டநாள் கனவும் உள்ளது.. எங்கள் கிராமத்தில் இயங்கும் அரசு உதவிபெறும் துவக்கப்பள்ளிக்கு ஒரு காரைக்கட்டிடம் கட்டித்தந்நால் பெரும் பாலான பிள்ளைகளை தமிழ்வழி கல்விக்கு மாற்றிடலாம்.. தனியார் பள்ளிகளில் படிப்பவர்களை திருப்பி கொண்டுவரலாம், அதன்மூலம் இரண்டு அரசு ஆசிரியப்பணி கிடைக்கும்... அதற்கான முயற்சிகளில் இருக்கிறேன்..

மற்றவை எல்லாமே மகிழ்ச்சியான அனுபவங்கள் தான்.

**கொரானா ஊரடங்கு காலத்தில் தங்களுடைய பணி எவ்வாறுள்ளது?**

3500 மக்கள் தொகையுடைய எங்கள் கிராமத்தின் அத்தனை பேருக்கும், சிறுவர்கள் மற்றும் சில இளைஞர்களின் உதவியோடு கபசுரக்குடிநீர் இரண்டு சுற்று வழங்கப்பட்டது .

நண்பர்களின் உதவியோடு 200 குடும்பங்களுக்குமட்டும்,குடும்பத்தலைவர் இல்லாத, ஊனமுற்று, நோயுற்று வேலை செய்யமுடியாதவரின் குடும்பங்களுக்கு தலா 5 கிலோ அரிசி, அரைகிலோ பருப்பு, அரைகிலோ எண்ணெய் வழங்கப்பட்டது.

தமிழர் திருநாளாம் பொங்கலுக்கு புத்தரிசிகூட வாங்க முடியாத குடும்பங்கள் ஏராளம்.. சில குடும்பங்களுக்கு புத்தரிசி யோடு, புத்தாடையும் கொடுத்து, அவர்

கள் ஆனந்தமாக பொங்கல் கொண்டாடிய போது மனம் நெகிழ்ந்தது...

தொலைநோக்கு சிந்தனையோடு, 750 குடும்பங்களுக்கு தலா ஒரு தென்னை, மாங்கன்று, கொய்யாச்செடி வழங்கப் பட்டது..

மருத்துவச் சேவையில் தங்களுக்கு ஏற்பட்ட மறக்க இயலாத அனுபவம் ...

மருத்துவத்தில் நம் தேசம் எத்த னையோ புதுமைகளை கண்டிருந்தாலும், அது நலிந்தோர்க்கு தேவைப்படும்போது எட்டாக் கனியாகத்தான் இருக்கிறது. பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கி யிருக்கும் மக்களுக்கு மருத்துவச் சேவை செய்யும்போது, அங்கே குழந்தைகளும் வளரிளம் பெண்களும் ரத்தச் சோகை நோயிலும், பல்வேறு தொற்று நோய் களாலும் பாதிக்கப்பட்டு முறையான மருத்துவம் கிடைக்காமல் வாழ்வதை பார்த்தபொழுது, எதிர்காலத்தில் அவர் களின் உடல் வலிமை குறித்து மனதில் எண்ணற்ற கேள்விகள் எழுந்து மறக்க முடியாமல் செய்துவிட்டது..

சமூகப் பணிகளில் தங்களுக்கு ஏற்பட்ட மறக்க இயலாத அனுபவம்...

சமூகப்பணிக்கு போகும்போது நான் சந்தித்த, நேர்மையான முறையில் எதை யாவது செய்து தன் வாழ்வில் ஏற்றத்தை பார்க்க முயற்சிக்கும் பெண்களுக்கும், மனித ஆற்றலில் 50%ஐ கைக்குள் வைத்திருக்கும் பெண்களின் மனித ஆற்றல் பெரும்பாலும் வீட்டிற்குள் முடங்கியிருப்பதை பார்க்கு ம்போது.., மதுவுக்கு அடிமையான ஆண் களால் பாதிக்கப்பட்ட பெண்கள் தன் பிள்ளைகளுக்கும், தனக்கும் பயன்படுத்திய உடைகளை கேட்டபோது கண்கள் நிரம்பியது... இவர்களின் வாழ்க்கையை சரிசெய்ய நாம் என்ன, எப்படி செய்யலாம் என்ற எண்ணம் தொடர்ந்து மனதில் ஓடுகிறது.. மறப்பதெப்படி?



பெண்களை முன்னேற்றத் துடிக்கும் மருத்துவர் ஒரு குடும்பத் தலைவியை மரம்நடச்செய்த போது...

நீங்கள் நட்ட மரக்கன்றுகள் மரங் களாக வளர்ந்து சிரிக்கும்போது தங்களுக்கு ஏற்படும் மகிழ்வை எவ்வாறு பார்க்கிறீர்கள்?

என் தாயென நேசிக்கும் பூமித் தாயின் ஆடையில் ஏற்பட்ட ஒரு ஓட்டையை நிரப்பிட என்னால் முடிந்த தென்று மட்டற்ற மகிழ்ச்சி கொள்வேன். அவளுக்கு போர்த்திட இன்னும் நிறைய ஆடைகளை உருவாக்குவதில் எனக்கு பெருமகிழ்ச்சியே...

தாங்கள் நட்ட இடத்தில் மரக்கன்று கள் சரியாகப் பராமரிக்கப்படாத போது தங்கள் மனநிலை எப்படிஇருக்கும்? அதை எப்படிக் கடந்து செல்வீர்கள்?

வீட்டு உபயோகப் பொருட்களை வைக்க காரைவீடு போதும், ஆனால் அதனுள் மனிதர் வாழ உயிர்வாயு வேண்டும். குடியிருக்க காரை வீடு கட்டும் ஒரு பொறுப்புள்ள குடும்பம், மூச்சுவிட

உயிர்வாயு தரும் மரங்களை நட்டு வளர்க்க மறந்து விடுகிறார்கள். அவர்கள் வீட்டு வாயிலில் நான் நடும் மரங்களை பராமரிக்காமல் விட்டு, அச்செடி அழியும் போது அவர்களின் சுயநலமும், குறுகிய எண்ணமும் வெளிப்பட்டு விடுகிறது. மனிதர்களை புரிந்துகொள்ள கிடைத்த மற்றொரு வாய்ப்பு இது என்று வேறிடத்தை தேடிப் போய்விடுவேன்.. ஆனாலும் மிகவும் பிடித்த ஒரு பொருளை, வைத்த இடத்தில் காணாமல் போனால் ஏற்படும் அந்த வேதனை சில நாட்களுக்கு நெஞ்சில் நிற்கும் ...

**இக்கால மாணவர்களுக்கும் இளைஞர் களுக்கும் தாங்கள் கூறும் அறிவுரை**

மாணவர்கள் ஆசிரியர்களுக்கு இடையில் ஏற்பட்டுள்ள இடைவெளியில் கைபேசியும், மதுவும் புகுந்துவிட்டதால் கல்வியின்மையும் கலாச்சார சீரழிவும் ஏற்பட்டு மீண்டும் ஓர் அடிமைச்சமூகம் உருவாகும் சூழல் நிலவுகிது. சிறிதளவும் சமூக அக்கறையில்லாத இளைய சமுதாயம் அதற்கான எதிர்மறையான விளைவை எதிர்காலத்தில் சந்திப்பார்கள். அதை தவிர்க்க கொஞ்சம் சமூக. விழிப்புணர்வு பெறவேண்டும்.

**பெண்களுக்குத் தங்கள் அறிவுரை**

மக்கள்தொகையில் 50% இருந்தும், உயர்கல்வி பெற்றிருந்தும், பெரும்பாலான பெண்களின் மனித ஆற்றல் குடும்ப பராமரிப்பிற்கு மட்டுமே செலவாகி, நாட்டின் முன்னேற்றறத்திற்கு பெரிய தடைக்கல்லாக இருக்காமல் பெண்கள் அனைத்து துறைகளிலும் 50% பணிபுரியும் நிலையை ஏற்டுத்த பெண்கள் முயற்சிக்க வேண்டும்.

இத்தகைய சிறப்புடைய மருத்துவர் தமிழ் தென்றல் அவர்களின் மருத்துவர் பணியும் சமூகப் பணியும் சிறக்க வேண்டி வாழத்தி விடைபெற்றோம். ■

## அந்த அறுபது நாட்கள் !



அவள் மீது
அவள் கணவருக்கு
எல்லையில்லா
கொள்ளை ஆசை !

அவள்
தனிமையில் இருந்தால்
அவள் கணவர்
கண்களில் காதல்
செயலிலோ துடிப்பு !

அவள்
அருகே இருந்தால்
அள்ளி அணைப்பார்
தள்ளிப் போனாலும்
எட்டிப் பிடித்து
அவள் இதழ் பதிப்பார் !

அவள்
தேவையோ இல்லையோ
அவள் ஸ்பரிசம்
எப்போதுமே
அவருக்குத் தேவை !

அவள்
கடைவீதி சென்றால்
கைநீட்டி
கேட்பதெல்லாம்
புன்னகையுடன்
வாங்கித் தருவார் !

வெயில் அடித்தாலும்
மழை கொட்டினாலும்
அவளுக்காக
குடை பிடிப்பார் !

அப்போது
மோகம் முப்பதுநாள்
கணவர் !

இப்போது
ஆசை அறுபது நாள்
கடந்த கணவர் !

அவளுக்கு மட்டும்
ஒரு இன்பமான
இனிமையான
முடிந்துபோன சுகமான
அறுபதுநாள் பக்கங்கள் !

பொன்விலங்கு பூ.சுப்ரமணியன்
பள்ளிக்கரணை, சென்னை



## பாவிமனம் பொறுக்கலியே ..

சானி பொறுக்கையில
சண்டாளி குனியையிலே
ஆணி அடிக்கிறடி
அடிமனசில் எங்கேயும்

பச்சை வயல்பரப்பில்
பாவாட சட்டையில
இச்சையத்தான் கௌப்புறடி
இன்னுஞ் சூடு ஏத்துறடி

நீ கடந்து போகையில
நின்னுநானும் பாக்கையில
மீனுவிழிப் பார்வையால
மின்னலத்தான் வெட்டறடி

வானத்தப் பாக்கறச்சே
வகைவகையாப் பறவைங்களும்
கானத்தப் பாடிக்கூவி
காதலிச்சிப் பறக்குதடி

கன்னிமவ காத்தாயி
காத்தமௌனம் போதுமடி
இன்னுமென்ன சோதிக்காம
இப்போதே வாடிபுள்ள ...

**கோ . சிவப்பிரகாசம் ,**
கோர்க்காடு , புதுச்சேரி

## ஏதேதோ உளறுகிறேன்

( கலிப்பா )

கொள்ள ஒரு ஆளில்லாம
குதிக்கிற என் குத்தாலமே
நானும் அதப் போலத் தானே
நடந்துக்கிறேன் என்னாளுமே. (1)

மல சொமக்கும் தனத்துல தான்
மாராப்பா உன் தண்ணிச் சேல
பாலுருக்கித் தறியில் போட்ட
பாவன தான அள்ளும் ஆள. (2)

பொங்குமாங் கடலுக்குள்ள
பொசுக்குனு தான் குதிக்கிறியே
காலு சுளுக்காதா
கலகலன்னு கதைக்கிறியே. (3)

ரொம்ப தூரம் நடந்து வார
ரோதனையா இருக்காதா
கண்டதுலாம் கலக்க வரும்
கசகசன்னு அறுக்காதா. (4)

தண்ணிப் பொண்ணு ஒம் மேல தான்
தாவரங்கள் பூவெறியும்
வெக்கத்துல அப்போ நீ
வேர்த்ததாலா நீர் அதிகம். (5)

பொன்னு மணி சுமந்து வரும்
பொடவ கட்டி நீ குதிப்ப
மூலிகையின் சாற எங்க
மூஞ்சியெலாம் நீ பதிப்ப. (6)

விரிஞ்ச மல அதுக்கு மேல
வெள்ளத்துணி போல் கெடப்ப
தண்ணியால சமாதானத்த
தாரணிக்கே அறிவிப்ப. (7)

பெண்ணொருத்தித் தழுவுகிற
பேரழகுச் சொகத்த விட
ஒன் அருவி அதில் குளிச்சா
உண்டாகுமே சொர்க்கம் பல. (8)

முத்தந்தரும் நேரத்துல
மொளச்சிவரும் சத்தமெலாம்
தரை ஒதட்டில் நீ தருவ
ஜலதரங்க யுத்தமெலாம். (9)

தட போட்டக் காலமிது
தள்ளி நின்னு பார்த்துக்குறேன்
ஒங்கூட தான் கலப்பதெப்போ
ஒருவாட்டி நான் கேட்டுக்குறேன். (10)



**- விக்டர்தாஸ்**
திரைப்படப் பாடலாசிரியர்
சென்னை

## வாழி! தமிழ்நெஞ்சம் அமின்!

படைப்பாளர் தோழன்!பனியிமய ஊற்று!
நடைநதி!  நனைக்கும் நட்பு ! - குடைக்கையன்!
காக்க மழைவெயிலில் கால்நடந்து கூடவரும்
தேக்கொங்கள் தோளமினின் தோள்!

குங்குமப் பூச்சிரிப்பு! கொள்கை கொடைவிரிப்பு!
தங்குதடை யில்லாத் தமிழ்வளர்த்தல்! - பொங்கும்
புதுப்புனலாய் காடுகரை பாய்ந்துவந்தும் நெஞ்சமரும்
செதுக்கிவைத்த சிற்பம்  இவர்!

சுவைக்கு உமிழ்நீர்!சுடருக்குத் தீச்சுடர்!
அவைக்குமுந்தும் ஆற்றல்! உழைப்பு! - இவையே
தமிழ்நெஞ்சம் அமின் தலைப்பண்பு!வாழ்க!
இமைநரை காலம்வரை ஈண்டு!

நூலாக்க நுண்மை! நுவல்கின்ற மென்மை!ஓர்
ஆலாகத் தான்கொடுக்கும் திண்மை! - ஏலார்க்கும்
கனிமரமாய்க் கைகொடுக்கும் காப்பே!அமினே!
இனிநூறும் நீயாண் டிரும்!

**– கவிக்கோ துரைவசந்தராசன்**



## வாழ்த்துப் பாச்செண்டு!

கடல்கடந்தும் தமிழன்னை தாள்கள் போற்றும்
கனித்தமிழை அரியணையில் நாளும் ஏற்றும்
மடல்தமிழை  விரித்தென்றும்  மணம்ப  ரப்பும்
மாத்தமிழர் படையணியின்  கொடிப  றக்கும்
இடம்பெயர்ந்த  மயிலாடு  துறைசீர்  ஊரை
இதயத்தில் பொத்திவைத்து  மகிழ்ந்தி  ருக்கும்
தடம்மாறா  ”தமிழ்நெஞ்சம் அமின்”நல்  தோழர்
தாங்குபுகழ்  வளர்த்தென்றும் வாழ்க! வாழ்க!

பொன்னிலவுப்  புன்னகைநீ! தமிழில் தோய்ந்து
பொழுதளக்கும் புலமையும்நீ! வண்ணப் பூவாய்
மின்னிதழாம்  ”தமிழ்நெஞ்சம்” பூக்கும் தோட்டம்!
மேற்சிறந்த ஆளுமையர் தம்மை யெல்லாம்
தன்னிதழின்  அட்டைதனில் ஏற்றிக் காட்டும்
தலைப்பண்பின்  சிகரம்நீ!  விரல்பி  ரம்மன்!
மன்னவன்நீ!  நொடிப்பொழுதில்   நூறு   நூறு
மணித்தொகுப்பும்  வடிவமைக்கும்  மயன்நீ!  வாழ்க!

”முத்தமிழ்க லச” மேடு மின்னு தற்கும்
முனைந்துன்னைத் தருபவன்நீ! ”ஹைக்கூ திண்ணை”
கொத்துப்பூ  இதழ்மணக்கச் செய்மா  யன்நீ!
கூடுநட்புப்  பூங்காநீ!  தாய்மண் விட்டுத்
தித்திக்கும் பாரீசு   நகரின் வாசி!
தேரோட்டத்  திருவாழ்வு  காணும்  வாழ்வு
நித்திலம்போல் வாணாள்கள் நிறைக்கக் காண்க!
நீடுபுகழ்  நிலம்வளர்த்து வாழ்க! தோழா!

**- வெற்றிப்பேரொளி**

## துள்ளல் மனத்துடன் வாழ்க!

மயிலாடு துறையில் வளர்ந்தவரே
மனதில் முழுதும் நிறைந்தவரே
துயிலை ஒதுக்கிப் பணிசெய்தே
துள்ளல் மனத்தைக் கொண்டவரே
பயில புத்தகம் போட்டேதான்
பதிப்பும் செய்து தமிழ்வளர்ப்பார்
நயமாய்ப் பேசி மகிழ்ந்திடுவார்
நலமும் பெற்றே வாழியவே

**– வா. சண்முகம்,** கும்பகோணம்

## வாழ்க ‘தமிழ்நெஞ்சம்’ அமின்!

அயலகத்தில் வாழ்கின்ற பந்தம்!
அன்புநெஞ்சம் அமினென்னும் சொந்தம்!
அயராது பாடுபடும் உள்ளம்!
ஆக்கமுள்ள செயலாற்றல் கண்டோம்!
முயற்சியேதன் கொள்கையெனக் கொண்டு
முனைப்புடனே தமிழ்நெஞ்சம் கண்டார்!
உயர்ந்திடுவார்! உயர்த்திடுவார் நம்மை!
உலகுவாழ்த்த பல்லாண்டு வாழ்க!!!

- ஓசூர் மணிமேகலை

# தமிழ்நெஞ்சம் அமினார் வாழி



நெஞ்சமெலாம் தமிழொன்றே நினைவாய்க் கொண்டு
நெகிழ்ந்துருகி நெடுங்காலம் விளைந்த தொண்டு
கொஞ்சிடுவார் மின்னிதழின் வழியே நம்மை
குலவுமெழில் தமிழ்த்தேனை பருகத் தந்தே!
அஞ்சிடாத வகையினிலே எழுத்தைக் கோத்தே
அகிலமெலாம் தமிழ்பரப்பும் கவிதைப் பூங்கா
தஞ்சமென நாமாவோம் இவர்நெஞ் சத்துள்
தமிழ்நெஞ்சம் கொண்டவரே வாழி வாழி

ஐம்பதாண்டாய் இதழியலில் தடம்ப தித்தே
ஆள்கின்றார் தமிழுலகை இவரைப் போலப்
பைம்புனலாய்க் கவிதைகளைப் பதிப்போ ருண்டா?
பைந்தமிழில் இதழ்நடத்தி வென்றோர் உண்டா?
ஐம்பதோடு நூற்றாண்டைக் கடந்தே வாழி
அகத்தினிலே உயர்ந்தவரே வாழி வாழி
பைம்பொன்னின் குணத்தவரே வாழி வாழி
பல்லாண்டு பல்லாண்டு வாழி வாழி



தமிழ்வளர்த்தோர் வரலாற்றில் முன்னே சென்று
தரம்குறையாப் படைப்புகளை முன்னி றுத்தி
அமிழ்துநிகர் குணங்கொண்டு நட்பால் என்றன்
அகத்தினிலே புகுந்தவரே வாழி வாழி
நிமிர்நடையால் திரைத்துறையில் வென்றே நின்ற
நிகரில்லாக் கண்ணதாசன் பிறந்த திங்கள்
கமழ்தமிழர் நாட்டினிலே பிறந்த நண்பர்
கனித்தமிழின் நெஞ்சத்தார் அமினார் வாழி!

பார்போற்றும் புகழீட்டி வாழ்க வாழ்க
பயன்விளையும் வயல்வெளியாய் வாழ்க வாழ்க
கார்முகிலாள் பொழிமழையாய் வாழ்க வாழ்க
கவிமழையைப் பொழிந்தென்றும் வாழ்க வாழ்க
சீர்கொண்டு தமிழ்மகளைப் போற்றிப் பாடும்
செந்தமிழர்த் திலகமென வாழ்க வாழ்க
ஊர்போற்ற உலகெல்லாம் வாழ்த்திப் போற்ற
உளமாற வாழ்த்துகிறேன் அமினார் வாழ்க!



**இராம வேல்முருகன் வலங்கைமான்**



# நிறைந்தவுளம் கொண்டேதான் வாழ்த்து கின்றேன்

தமிழ்நெஞ்சம் இந்நாளில் வளங்கள் பெற்றுத்
தரணியெலாம் நல்வாழ்த்தால் நிறைந்தே வாழ்க
இமிழ்கடலாய் நீளாயுள் கொண்டே வாழ்க
இறைவனிடம் இறைஞ்சுகிறேன் இனிதே வாழ்க
கமழ்கின்ற நறும்பூவின் மணமாய் வாழ்க
கவிதையினால் வாழ்த்துப்பா பொழிந்தேன் வாழ்க
நமையாளும் செந்தமிழே வாழ்க வாழ்க
நலம்பலவும் பெற்றேதான் வாழ்க வாழ்க

அயல்தேசம் தமிழாலே சிறக்கச் செய்வார்
அனைவருக்கும் நூல்பலவும் செய்தே ஈவார்
இயற்றுகிற கவிதைகளும் அச்சி லேற
இதயங்கள் நிரம்பிடுமே மகிழ்ச்சி ஊற
கயலெனவே துள்ளிடுவார் இளமை யோடு
கடவுள்தாம் துணைநின்றே அருளல் வேண்டும்
துயரங்கள் துடைத்திடுவார் துன்பம் கண்டால்
தூயமனம் வாய்த்ததொரு மனிதர் வாழ்க

இருகைகளை எடுத்தேநான் வணங்கு கின்றேன்
இறைவாநீ யென்றென்றும் அருளல் வேண்டும்
தருவாயே எந்நாளும் நிறைந்த செல்வம்
தாய்தந்தை போலவரைக் காத்து நிற்பாய்
நிறைந்தவுளம் கொண்டேதான் வாழ்த்து கின்றேன்
நிலைத்திருக்கும் அப்புகழும் நீடு வாழ்க
சிறந்ததொரு மாமனிதர் நலங்கள் பெற்றுச்
சீரோடும் சிறப்போடும் நெடிது வாழ்க



- தென்றல் கவி



# செந்தமிழ் செல்வர் வாழ்க!

செந்தமிழ்ச் சொற்களின் இல்லமிவர்
சேவைகள் செய்திடும் உள்ளமிவர்
சிந்தையெல்லாம் - தமிழ்
விந்தையெல்லாம் - மனம்
செப்பியே ஓடிடும் வெள்ளமிவர்

சிந்திடும் பாக்களின் சொந்தமிவர்
சிக்கெனப் பற்றிடும் பந்தமிவர்
பண்ணெனவும் - அதைப்
பெண்ணெனவும் - விழி
பார்த்திட செய்திடும் அந்தமிவர்

பார்த்ததும் ஒன்றிடும் நட்புமிவர்
பாசமும் நேசமும் கற்புமிவர்
சேர்ந்துவிட்டால் - மனம்
ஓர்ந்துவிட்டால் - உடன்
சேர்த்துனை தேற்றிடும் பொற்புமிவர்


வார்த்தையை அன்புடன் சொல்லுபவர்
வாழ்வினை வாளென வெல்லுபவர்
கார்முகிலாய்ப் - புவி
சேர்முகிலாய் - உடன்
கைகளை தந்துடன் புல்லுபவர்

தானென எண்ணிடா தங்கமிவர்
தாழ்வறு தோழமை அங்கமிவர்
ஏழ்மையெனை - தொட
வாழ்வினிமை - தர
எண்ணிய நூல்தரு சிங்கமிவர்

தேனென சொட்டிடும் பேச்சுமிவர்
திக்கினில் செந்தமிழ் மூச்சுமிவர்
தேர்ந்தவரை - உடன்
சேர்ந்தவரை - கரை
சேர்த்திடும் நல்லொரு ஆட்சியிவர்

எல்லைகள் தாண்டிய ஏக்கமிவர்
எத்தனை நூல்களின் ஆக்கமிவர்
எண்ணடங்கா - புகழ்
மண்ணடங்கா - புகழ்
சொல்லிட நெஞ்சறு பாக்கமிவர்

கல்லறு சாமியின் காட்சியிவர்
கண்டதும் தந்திடும் மாட்சியிவர்
காலங்களே - புரி
கோலங்களே - தமிழ்
கண்முனம் வாழ்ந்திட சாட்சியிவர்



– ஏடி வரதராசன்



## ஏடணைத்தும் தமிழ்வளர்க்கும் ஏந்தல் வாழ்க!

பாலொத்த தூயமனம் பசுமை உள்ளம்
தாயொத்த பரிவு தமிழின் நெஞ்சம்
வாயொத்து மணக்கும் வஞ்சிப் பாவாய்
நூலொத்து தருமன்பு நூருள் அமின்

ஆலொத்து நாறாண்டு அதிக மின்னும்
அவனியிலே வாழட்டும் அகவை கூடி
வாலொத்து வழிபின்னே வருவோம் யாமும்
வாழுமிப் புவியினிலே படைப்பு கொண்டு!

பாடுமிளப் பறவையாய் பைந்தமிழ் தொட்டு
பல்லிதழும் பணிசெய்து தமிழ் நெஞ்சம்
கூடுகிற குயில்களுக்கு தோப்பு மாகி
கூடவே தனதுழைப்பு கூடும் தந்தார்!

ஏடணைத்தும் தமிழ்வளர்க்கும் ஏந்தல் இன்று
இம்மையிலே பிறந்தநாள் காணும் வேளை
நாடணைத்தும் போற்றவே நாமும் வாழ்த்தி
நற்றமிழ் பாமலரை தூவச் செய்வோம்!



– பொன்மணிதாசன்



# பூத்ததோர் நெஞ்சமிது வாழி

அன்பான நல்லிதயம் அரவணைக்கும் பேருள்ளம்
என்பால் பாசம் காட்டும் எழிலான நட்புள்ளம்
தன்பால் அனைவரையும் தமிழாலே இணைத்திட்ட
புன்னகை பொருள்சொல்லும் பூத்ததோர் நெஞ்சமிது.

நிலையான தமிழெடுத்து நெஞ்சகத்து ஒளி கூட்டி
கலை ஞான முகத்தோடு காட்சிக்கு விருந்தாக்கி
விலையில்லா விடியல் போல் வியப்பாகும் நூலாக்கி
அலைபாய வைக்கின்ற அழகான தமிழ் நெஞ்சம்

அறிவான ஆக்கமதை அழகுறவே ஆக்கும் அமினார்
குறிப்போடு குணத்தாலே கொள்கையால் தலைநிமிர
நெறிகாக்கும் மொழிமலராய் நெஞ்சமதில் தமிழேற்றி
தெரிவாகுமௌ வகைமலராய் தீந்தமிழாய் நிற்பாரே.

நல்லுள்ளம் இவர் சொத்தாய் நன்றெனவே யிருப்பதினால்
சொல்லேறு உழவர்களும் சுகமாக அணி வகுப்பர்
வெல்லும் வழி தெரிந்தவராய் வித்தை பல ஆற்றிடுவார்
அல்லும் பகலும் பாராது அருந் தமிழுக்காய் நின்றிடுவார்.

ஏட்டளவில் எழுதி வைத்தால் ஏறிநிற்கும் ஓராண்டு
காட்டுகின்ற நேர்முகத்தில் கழிந்திடுமே இளமையாகி
வாட்டமில்லா வாழ்வுக்குள் வகைதமிழே நிற்பதினால்
ஆட்டமில்லா அன்புடனே அகவை யிங்கு சிறக்கிறது.

– பரணி சுப சேகர்

# பிறந்தநாள் வாழ்த்துகள்

கலைமடந்தை மனமகிழக் கவிதை பூட்டிக்
கனவதனை நனவாக்குந் தேரை ஓட்டி
நிலைநின்று புகழ்பரப்பும் மரபே வாழ்க
நீடுபுகழ் பலபெற்றே ஓங்கி வாழ்க
தலைமகனே அமின்தோழா தமிழின் மாண்பைத்
தடைபோடும் கேடர்களின் விடத்தை நீக்கி
விலைபோகும் கயவரவர் வஞ்சம் போக்கி
வீதியெங்கும் மயில்துறையீர் ஒலித்து வாழ்க!

*– ஓ. சுந்தரமூர்த்தி,*
தமிழாசிரியர்.



***வாழ்க 'தமிழ்நெஞ்சம்' அமின்!***

உலகெலாம் போற்றும் வண்ணம்
உன்னதப் பணிகள் செய்து
இலக்கியப் பால மாக
இலங்கிடும் நெஞ்சம் வாழ்க!
பழசொடும் புதுமை சேர்த்துப்
படைத்திடும் இதழ்க ளாலே
உளமெலாம் நிறைந்து நிற்கும்
உயர்திரு நெஞ்சம் வாழ்க!

பிறந்தநாள் வாழ்த்துச் சொன்னோம்
பெருமகன் வாழ்க! வாழ்க!
தமிழுணர் வோடு வாழும்
தமிழ்நெஞ்சம் வாழ்க! வாழ்க!

– பாவேந்தல் பாலமுனை பாறூக்

# பிறந்தநாள் மங்கலம் பெருவாழ்த்து

இன்றமிழ்கனிந்த நெஞ்சர்
யாவர்க்கும் இனிய நண்பர்
அன்றலர் மலரைப் போலும்
அழகிய சிரிப்புச் சிந்தி
தென்றலின் தண்மை யோடு
செய்யுட்கண் அணியை ஒப்பார்
என்றும்எம் இனியார் அன்பர்
அமின்வாழி வாழி யென்பேன்

நெடுந்தொலை விருந்த போதும்
நேயத்தால் அருகி ருப்பார்
தொடுந்துறை யெல்லாம் செம்மை
துலங்கிடச் செய்ய வல்லார்
அடர்ந்துள மழைபோல் வையத்
தமிழ்த்தமாய் இயங்கி வாழ்க
நடந்துசெல் ஓடை யாகி
நற்றமிழ்ப் பயிர்கள் காக்க

அமின் வாழ்க வாழ்க வென்றே
ஆயிரம் முறைகள் வாழ்த்தில்
தமதுளம் நிறைவு கொள்ளும்
தமிழர்தம் உள்ள மெல்லாம்
எமதில்லத்து உற்ற நண்பர்
இனியவர் நீடு வாழ்க
தமிழ் நெஞ்சம் வாழ்க வாழ்க
தாய்த்தமிழ் போல வாழ்க

**- அன்புவல்லி தங்கவேல்**





# தமிழ் நெஞ்சம் வாழ்க!

ஆனியிலே அவதரித்த அரும்பதத்துத் தமிழொன்றே
அழகு சேர்த்து
நானிலத்தின் கவிஞர்கள் நன்றேதான் முன்னேற
நலங்கள் கூட்டி
ஏணியெனத் தான்நின்றே உயர்வுக்கு வழிகாட்டும்
இனிய நெஞ்சம்
கேணியென ஊறிநின்று பாலையினை உயிர்ப்போனின்
கீர்த்தி வாழ்க

தூளியினைக் கண்டநாளில் தொட்டதெல்லாம் துலங்கவேண்டும்
சுகமே பெற்றுத்
தோளதிலே புகழ்களெல்லாம் சேரவேண்டும் நிறைவாகத்
தோற்கா அன்பால்
ஆளுகின்ற தமிழின்நெஞ் சத்தாரை நினைவினிலே
ஆழப் பற்றி
நீளுகின்ற நாட்களெல்லாம் பேறாக நினைப்போமே
நேசம் கொண்டே !

ஆழியென நட்புண்டு அழகுதமிழ்ச் சொல்லுண்டே
அன்னை போல
நாழிகையும் மாறாத நலன்களையே மறக்காத
நாட்டம் உண்டு !
மேழியெனத் தமிழுலகை மிளிரச்செய் உயர்தருவே
மேன்மை கண்டு
வாழியென வாழ்த்துகிறோம் வளர்மதியாய் நிறைவான
வளங்கள் பெற்றே !

– பொலிகையூர் கோகிலா

## சிறப்போடு வாழ்க!

பிரான்ஸில் மையங்கொண்ட
பேரன்புப் புயல் நீங்கள்
பெண்ணியம் செல்வக்குமாரி
பரிசளித்த உறவு நீங்கள்

தமிழ்நெஞ்சம் அமின்அய்யாவே
தழைத்தோங்கி வாழ்க வாழ்க
அமிழ்தாம் தமிழ் பருகி
அனைத்து நலன் சூழ்க

நேரில் இதுவரைக்கும்
பார்க்காத சகோதரர்
பாரில் எனதெழுத்தைப்
பதிவுசெய்த பாசமலர்

ஆண்டுகள் பலவாகக்
கொண்டிருந்த கனவுதனை
ஈன்றுப் புறம் தந்த
ஈடற்ற ஆண்தாயே

வாழுங் கால மெல்லாம்
தமிழுக்குத் தொண்டாற்றி
சீரும் சிறப்போடு
செம்மாந்து வாழியவே

ஊரும் உறவுகளும்
உற்றத் தோழர்களும்
கூறும் வாழ்த்துகளின்
கூடவே என்வாழ்த்தும்

பேரும் புகழோடும் பேறு
பெற்று வாழ்ந்திடவே
பிறந்தநாள் வாழ்த்துகளை
பிரியமுடன் வழங்குகிறேன்

பலநூறு நூல்பதித்து
பலபேரை வாழவைத்து
சிலநூற்றாண்டு காலமேனும்
சிறப்போடு வாழ்க! வாழ்க!

- சிங்கார சுகுமாறன்

## பார்போற்றி புகழ்பெற்று வாழ்க!

மரபுடனே வந்திடுதே அகவை நாளும்
பண்பால் பாட்டெடுத்து வாழ்த்துகிறேன் நானும்!
பரந்திருக்கும் நேசப் பெருவெளியில் நாளும்
தமிழுக்குத் தனையீந்த அன்புத்தமிழ்நெஞ்சம்

அன்பாலே அகிலம் வென்ற நெஞ்சம்
தன்னடக்க மொன்றே இவர் அணிகலனாகும்
நன்னடத்தையாலே புகழ் விண்வரையேகும்
இவர் சொல்லில் என்றும் தெளிவிருக்கும்

மயிற்பீலி வருடலெனப் பேச்சிருக்கும்
மயக்கும் மின்னலெனப் பார்வை வீச்சிருக்கும்
சிறு தேனீயைப் போல் சுறுசுறுப்பிருக்கும்
சிறு செய்கையிலும் பெரும் பொறுப்பிருக்கும்

தமிழன்னை மடியில் தவழ்ந்திருக்கும் - இவர்
சுவாசத்தில் தமிழ்மணமே கமழ்ந்திருக்கும்
தமிழ் அன்பர்களை நேயத்துடன் தாங்கும்
தமிழொன்றே இவரிடத்தில் தேங்கி நிற்கும்

கைவண்ணம் காட்டும் கைவிரல்கள் யாவிலும்
கவிதையொடு கலைத்திறன்கள் துஞ்சும்
மண்மடியில் உலவும் உயிர் யாவும்
கண்மயங்கிக் காதலொடு கொஞ்சும்

குன்றா வளத்துடனே இதழாள வேண்டும்
மண்ணில் முடிசூடி வாழவே வேண்டும்
ஆயுள்ரேகையது நீள்நெடிதாக வேண்டும்
நல்லாசிகள் வலுகூட்டி வளமாக வேண்டும்

வெற்றிகளின் சிகரம் தொடும் வேந்தரிவர்
நூற்றாண்டுகாலம் நலம் வாழிய வாழியவே!
காற்றுள்ள வரைகவி மார்க்கண்டேயனாய்
போற்றி புகழ்பெற வாழிய வாழியவே!

**- வ.்.பீரா வ.்.பி**

## நலமாய் வாழியவே

நிரவி யூரில் பிறந்தாரே
நிறைந்த மனமும் கொண்டாரே
தரமாய்த் தமிழை வளர்ப்பாரே
தங்கம் போன்ற மனத்தாரே
வரவை நினையா மனிதரிவர்
வளமாய் நூலை வடித்தேதான்
பிறரின் மகிழ்வே தனதென்பார்
பிறர்க்கே உதவும் குணங்கொண்டார்

அன்பால் பேசிப் பழகிடுவார்
அருமை மனிதர் இவர்தானே
தன்பால் கொண்ட உறுதியினால்
தகுதி வளர்த்தே உயர்ந்தாரே
மின்னல் வேகப் பணியாலே
மிஞ்சும் இவரின் செயல்களுமே
கன்னல் மொழியாம் தமிழினையே
கனிந்தே வளர்த்தார் வாழியவே

கவிதை என்றால் களிப்பாவார்
கன்னல் தமிழைச் சுவைத்தேதான்
தவிக்க மனமும் விடமாட்டார்
தனித்தே நின்று சாதிப்பார்
செவிக்கு ணவுமே தந்திடுவார்
செம்மைத் தமிழால் பேசிடுவார்
நவின்றேன் நானும் வாழ்த்தினையே
நலமே பெற்று வாழியவே

**- வா.சண்முகம்,**
கும்பகோணம்



## பிறந்தநாள் மங்கலம் பெருவாழ்த்து

கட்புலனைத்தாண்டிக்கடல்தாண்டி வாழ்ந்தாலும்
நட்புறவால்நம்மை நயக்கின்றார் எட்பூப்போல்
வெள்ளைமனங்கொண்டார் வீறு தமிழ்நெஞ்சம்
கொள்ளைகொண்டார்வாழ்க குளிர்ந்து.

– அன்புவல்லி தங்கவேல்



பிரான்சில் வாழ்ந்தாலும், தமிழகத்தைச் சேர்த இவர், உலகம் முழுதும் வாழும் இலக்கியவாதிகளை நேசிப்பவர். என்னைப்போன்ற இலக்கிய குசேலர் களுக்கு, அபயமளிக்கும் இவர் ஒரு கிருஷ்ணர். இவரின் பிறந்தநாளில் வாழ்த்துவதில் என் உள்ளம் பேருவகை யடைகின்றது!

- உலகநாதன் காளியப்பன்

## நனிநன்றி

கொட்டும் அணிமழையில்
குந்தி நனைந்தென்னைத்
தொட்ட தமிழைத்
துடைக்காமல் – சட்டெனநான்
இன்பென்னுங் கம்பளியால்
என்தேகம் போத்திமனத்
துன்பெல்லாம் போனேன்
துறந்து.

வாழ்த்துகின்ற சொற்கள்
வளரட்டும் அஃதிங்குப்
போழ்தெல்லாம் பாக்கள்
புனையட்டும் – வாழ்தமிழும்
பொன்றா புவியில்
புதுமணங்கள் ஊட்டுமென்று
நன்றி உரைக்கின்றேன்
நான்.

அன்புடன்
தமிழ்நெஞ்சம் அமின்
ஆசிரியர் தமிழ்நெஞ்சம் பிரான்சு
26 / 06 / 2021




இதழ் அறிமுகம்



இணையத்தின் மூலம் மின்னி வரும் இதழ்கள் பல... பற்பல. அவற்றில் உருவ அழகால் மட்டுமின்றி, உள்ளடக்க அடர்த்தியாலும் மின்னி வருகின்ற இதழ்கள் சிலவே. அச் சிலவற்றில் முதல் வரிசையில் முகங்காட்டுவதுதான் "முத்தமிழ் கலசம்"!

இருமாதத்திற்கொருமுறை தன் இருப்பை வெளிப்படுத்த அல்ல... தன் கருப்பைச் சுமப்பை வெளிப்படுத்தும் இதழ் இது.

முத்தமிழ் கலசம் முதல் இதழ் கொரோனா முதல் அலையின் மூர்க்கம் கட்டவிழ்ந்திருந்த வேளையில், இலக்கிய இதயங்களுக்கு ஆறுதல் நிழலாக 2020 ஜூலை- ஆகஸ்டில் மலர்ந்தது.

முத்தமிழ் கலசம் மின்னிதழின் ஆசிரியர் சித்தி வஃபீரா ஆவார். ஐம்பது ஆண்டு கால இதழ் அனுபவம் பழுத்த "தமிழ்நெஞ்சம்" இதழாசிரியர் 'கவிஞர் தமிழ்நெஞ்சம் அமின்' இதன் மதிப்பியல் (கௌரவ) ஆசிரியராகப் பொறுப் பேற்றுள்ளார்.

2021 மே - ஜூன் முடிய முத்தமிழ் கலசம் 6 இதழ்கள் வெளிவந்துள்ளன. அந்த ஆறு இதழ்கள் குறித்த ஒரு பருந்துப் பார்வை விருந்தே இக்கட்டுரை.

## அட்டைப்படங்கள்

அ.ப.ஜெ. அப்துல்கலாம், பாரதியார், தீபாவளி மங்கை, 2021 - புத்தாண்டு மத்தாப்புச் சிதறல், மறைந்த ஈழத்து இலக்கிய ஆளுமை "மல்லிகை டொமினிக் ஜீவா", சென்னைக் கடற்கரையில் உள்ள உழைப்பாளர் சிலை என அழகிய ஆறு வண்ண அட்டைகள் முத்தமிழ் கலசத்தின் முகப்பை அலங்கரித்து உள்ளன. ஒவ்வொரு இதழின் பின்னட்டையும் ஒரு கவிதையைத் தாங்கி நிற்பது முத்தமிழ் கலசத்தின் தனித்தன்மைக்குத் தலைமை தாங்குகிறது. (ஓரிதழ் மட்டும் கவிதையின்றி வெறும் படத்துடன் உள்ளது.)

## ஆசிரியர் பக்கம்

'ஒவ்வோர் இதழிலும் "ஆசிரியர் பக்கம்'' பகுதியில் இதழின் பண்பையும் பயனையும் பற்றிப் பேசுகிறார் இதழாசிரியர சித்தி வஃபீரா.

- *முத்தமிழ் கலசத்தை அழகிய ஆக்கங்களால் நிரப்பி உங்கள் இலக்கியத் தாகத்தைத் தணித்துக்கொள்ளவாருங்கள்.
- எல்லோரும் விரும்பும் நல்ல ஆக்கங் களை வாசகர்களுக்குத் தர வேண்டும்.
- (கொரோனாவை முன் வைத்து) தகுந்த முறையில் சுகாதாரத்தைப் பேணி ஓர் ஆரோக்கியமான சமுதாயத்தைக் கட்டியெழுப்புவோம்.
- *சமூக வலைத்தளங்களில் சுய அறிவு உள்ளவர்கள் தேடித் தேடி அறிவை வளர்க்க, அறிவிலிகளோ அழிவைத் தேடிச் சென்று படுகுழியில் விழுகிறார்கள்.
- பெண்ணின்றி அமையாது உலகு (மகளிர் நாள் சிந்தனை.)
- அன்பைச் செலவு செய்து அன்பையே வரவு ஆக்குவோம்.

## சிறுகதைகள்

- ஷார்ஜாஃ பாத்திமா - காத்திருக்கிறேன்.
- உதயசகி - கதைக்கான தலைப்பை பின்னால் சொல்கிறேன்.. (அட.... சிறுகதை தலைப்பே இதுதாங்க!)
- டி.மோகன்ராஜ் - மரணவிளிம்பில் நான்.
- ஷெய்க் நிஸ்ரா - ஓருயிர்
- த.இர்பான் - தமுனி
- சஞ்சய்- முற்றுப்புள்ளி
- ரத்னராஜு ராஜராஜேஸ்வரன் ரத்னசபாபதி- கம்பளிப்புழு
- அனுராஜ் - தியாகச் சுடர்
- ராம்கிருஷ் - பசலை படர்ந்தது
- கனகாபாலன் - தம்பி மகள்
- கலைவாணி சுரேஷ்பாபு, துபாய் - தாய்மை
- கே.எம்.இராமகிருஷ்ணன் - எண்ணித் துணிக
- கும்பகோணம் நௌஷாத்- ஆதவனை மறைத்த மாதவன்....?

இப்படி முத்தமிழ் கலசம் ஆறு இதழ்களில் 14 சிறுகதைகளைத் தந்துள்ளது . குறிப்பாக நான்காம் இதழ் அறிவிக்கப்படாத “சிற்றிதழ்ச் சிறப்பிதழ்” போல நான்கு சிறுகதைகளை வெளியிட்டு சாதனை படைத்துள்ளது. பதினைந்தாவதாக ‘‘தீபாவளி’’ பற்றிய நரகாசுரன் புராணக் கதையும் வெளி வந்துள்ளது.

## தொடர்

வாசகர் ஒருவர் தொடர்கதை வெளிவருமா ? என்று கேட்டதற்கு அதற்கு வாய்ப்பில்லை என்று சொல்லியுள்ளார் ஆசிரியர். ஆனால், ‘‘வாழ்தல் இனிது’’ என்ற தன்னம்பிக்கைத் தொடர் முத்தமிழ் கலசம் மின்ன மெருகேற்றி வருகிறது. வாழ்வியல் சிக்கல்களை எதிர்கொள்வது குறித்துப் பேசும் இத் தொடரில் ஒரு துளி... ‘‘சும்மா இருக்காதீர்கள். சும்மா இருக்கும் இடம் சாத்தானின் பள்ளிக் கூடம்.!’’ இத் தொடரை சுவைபடத் தீட்டி வருபவர் நிஷா ரஹ்மான்.

## கட்டுரைகள்

- நுங்கின் சிறப்பை ஆக்ஸ்போர்டு சுரேஷ் சொல்ல, பயணச் சுற்றுலா என்று நம் பிறப்பையும் வாழ்வை யும் தத்துவநோக்கில் காட்டுகி றார் எஸ். ஜெர்லின் பிரீமா. கதை சொல்லாப் பாட்டிகள் என்று இன்றைய செல்போன் ஆதிக்கம் நௌஷத்கானால் சுட்டப் படுகிறது. கரம் பிடிக்க தெரியாத என் காதல் என்று தலைப்பு இருந்தாலும் மழைக்காலமும் இளமை நினைவுகளும் மட்டுமே வலம் வருகின்றன ரனூஸ் முஹம்மத் இஸ்மாயில் கட்டுரையில். நிலாப்பெண் அகிலத்தின் சக்தி என் பெண்மையைப் போற்றுகிறார்
- நடப்பதெல்லாம் நன்மைக்கே என் கிறார் டி. பாலகிருஷ்ணன்.
- தமிழ்நிலா இரண்டு இதழ்களில் வீட்டுத் தோட்டம் செய்வோம் என்று அழைத்துள்ளார்.
- கிளியோபாட்ரா பற்றிய கட்டுரை ஒன்றும் எழுதியவர் பெயரின்றி இடம் பெற்றுள்ளது..

## நூல் மதிப்புரை

நூல் மதிப்புரை என்பது முத்தமிழ் கலசம் இதழின் முத்திரைப் பகுதியாக இருக்கிறது. ஆறு இதழ்களில் 10 நூல்கள் மதிப்புரைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளன என்பதே முத்தமிழ் கலசம் ஆசிரியர் நூல் மதிப்புரைக்குத் தரும் முகாமையான இடத்தைக் காட்டுகிறது.

இந்த 10 மதிப்புரைகளில் ....

- வானும் மண்ணும் நம் வசமே! (மணிக்கூ கவி நஸீரா எஸ் ஆப்தீன்),
- மூன்று நவீன காவியங்கள் (பாவேந்தல் பாலமுனை பாறூக்)
- மொட்டுக்களின் மெட்டுக்கள் (கவிஞர் ஏரூர்.கே. நௌஷாத் )
- மகரந்தம் தூவும் மலர்கள்
- (அன்புச்செல்வி சுப்புராஜு தொகுத்த 26 பெண் கவிஞர்கள் பங்குபெற்ற தன்முனைக் கவிதைகள்)
- இவன் (கோவுஸ்ஸ கே.ராம்ஜி உலகநாதன் )
- சக வாழ்வியம் (பிஷ்ரின் முஹம்மத்) மொழிபெயர்க்கப்படாத மௌனம் (ரிம்ஸா டீன் )

இந்த ஏழு நூல்கள் வஃபீரா வஃபி-யால் மதிப்புரைக்கப் பட்டுள்ளன என்பது குறிக்கத்தக்கது.

ஏனைய மூன்றில் ...

- வே.பூங்குழலி பெருமாளின் ''வள்ளுவர் குறளும் வாரியார் வாக்கும்'' பிரான்சு க.மலர்வாணி ஜெயராஜாலும்,
- செல்லம் ரகுவின் ''விடியலின் முகவரிகள்'' ஹைக்கூ தொகுப்பு கவிநிலா மோகனாலும்,
- ஏ.டி.வரதராசன் வெண்பாக்களால் ஆக்கிய ''தமிழ்நெஞ்சம் புகழாரம்'' கிறிஸ்டினா அருள்மொழியாலும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

## கவிதைகள்

முத்தமிழ் கலசம் இதழின் பெரும் பான்மை பக்கங்கள் கவிதைகளாலேயே நிரம்பியுள்ளன.

வெண்பா, விருத்தப் பாக்கள் என மரபுப் பாக்களும், குறும்பா, ஹைக்கூ, ரென்கா, தன்முனைக் கவிதைகள் இவற்றுடன் சந்தக் குழிபு- வண்ணங்கள், இசைப்பாடல்கள்... ஆக தமிழின் அனைத்து வகைப் பாக்களும் ஒவ்வொரு இதழையும் மணம் வீசச் செய்கின்றன.

கவிதைப் படைப்பாளிகள் தமிழ் நாடு, ஹைதராபாத், ஈழம் (இலங்கை), பிரான்சு, மலேசியா, துபாய் ஆகிய பன்னாட்டுக் கவிஞர்களாக உள்ளனர் என்பது எண்ணி மகிழத்தக்க ஒன்றாகும். தமிழில் இன்று எழுதிக்கொண்டு இருக்கும், குறிப்பாக முகநூல் போன்ற இணை யதளங்களில் முன்னணியில் இருக்கும் அத்துணைக் கவிஞர்களும் முத்தமிழ் கலசம் இதழில் படைப்புக் கோலோச்சிக் கொண்டுள்ளனர். பெயர்களைச் சுட்டப் புகுந்தால் அது நூறு என்ற இலக் கத்தைத் தாண்டிவிடும், பெயர்ப் பட்டியல் பக்கங்களை விழுங்கி விடும், மேலும் யார் பெயராவது தற்செயலாக விடுபட்டிருந்தாலும் வீண் கசப்பையும், மன வருத்தத்தையும் உண்டாக்கி விடும். எனவே பட்டியல் எடுத்தும் பெயரைச் சுட்டுதலைத் தவிர்க்கிறேன்.

''இசுலாம் எங்கள் வழி ;
இனிமைத் தமிழ் எங்கள் மொழி!''

என்ற கொள்கை உறுதியோடு வாழ்ந்து வரும் இசுலாமியர்கள், குறிப்பாக இசுலாம் சகோதரிகள் அதிலும் குறிக்கத்தக்க வகையில் ஈழத்தை (இலங்கைத் தீவை)ச் சேர்ந்த இசுலாமிய இருபால் உடன்பிறப்புகள் முனைந்து தங்கள் படைப்புகளால் முத்தமிழ் கலசத்தை நிரப்பி வருகிறார்கள் என்பது மகிழ்வுக்கும் வரவேற்புக்கும் உரியதாகும்!

## சிறப்புக் குறிப்புகள்

இதழ் ஒவ்வொன்றும் அவ்விதழ் வெளிவரும் மாதங்களின் சிறப்பு நாள்களுக்கு சிம்மாசனமிட்டிருக்கின்றது. தீபாவளி மாதத்தில் தீபாவளி பற்றிய அட்டைப்படம், கவிதை, கட்டுரை வெளியாகியுள்ளன. 2021 புத்தாண்டு அட்டையே கொண்டாட்டக்

கொடி பிடித்துள்ளது. மகளிர் நாள் தனித்த கவனம் பெற்ற படைப்புகளால் மரியாதை செய்யப்பட்டது. உழைப்பாளர் நாளும் உரியமுறையில் மதிக்கப் பட்டிருக்கிறது.

மாலன் எழுதிய ''பாரதியும் இஸ்லாமும்'' கட்டுரை கவனம் கொள்ள வேண்டிய ஒன்று. எடுத்துக்காட்டாக.. ஒன்றைச் சொல்வதானால் ''பாரதியின் முதல் சிறுகதையும், கடைசி சிறுகதையும் இஸ்லாமியர்களைப் பற்றியதாகவே அமைந்தது!'' என்பதைச் சொல்லலாம்.

இரண்டாவது இதழில் "நம்ம ஊரு கதைகள்" என்ற கதைத் தொகுப்புகள் மூலம் புகழ்பெற்ற நா.ரமேஷ் என்னும் படைப்பாளி

''மஸ்குலர் டிஸ்ட்ரபி'' என்ற விநோதமான நோய்த் தாக்குதலுக்கு ஆளாகியும், தொடர்ந்து கதைகள் படைப்புகளைத் தந்துவருவதை ஊக்கப் படுத்தும் வகையில் எல்.முருகராஜ்

"நம்ம ஊரு கதைகளின் நாயகன் ரமேசின் கதை!" என அவரைப் பற்றிய செய்திகளைத் தொகுத்துத் தந்துள்ளார் படத்துடன். முத்தமிழ் கலசத்தின் ஆறு இதழ்களில் குறித்து வைக்க வேண்டிய படைப்பு இது.

27-06-1927 இல் பூத்து 28-01-2021 இல் உதிர்ந்த ஈழத்து "மல்லிகை" இதழாசிரியர் டொமினிக் ஜீவா படத்தை அட்டையிலிட்டும், விரிவான கட்டுரை தந்தும் அவருக்கு தகுதிமிகு இலக்கிய அஞ்சலியை செலுத்தியுள்ளது முத்தமிழ் கலசம்.

"டொமினிக் ஜீவா ஒரு படிக் காத மேதை; ஆயினும் முற்போக்குச் சிந்தனையாளர்; தலைசிறந்த பத்திரிக்கையாளர்; சிறந்த எழுத்தாளர்; திறனாய்வாளர்; கதாசிரியர்; சமூக சீர்திருத்தவாதி; அனல் கக்கும் பேச்சாளர்; கடின உழைப்பாளி; நவீன தமிழ் இலக்கியத்தின் உயிர்நாடி எனப் பன்முக ஆளுமை படைத்தவர் மல்லிகை இதழின் ஆசிரியர், பதிப்பாசிரியர், வெளியீட்டாளர், விநியோகிப்பாளர்" என்று தன் முன்னோடி இதழாளனின் இறுதிக்கு மரியாதை செய்து வரலாற்றில் தன்னைப் பதியனிட்டுள்ளது முத்தமிழ் கலசம்!

பாடகர் எஸ்.பி.பாலசுப்பிர மணியம், நடிகர் விவேக் ஆகியோரின் மறைவுக்கும் கலசம் கண்ணீர் பூக்கள் சொரிந்துள்ளது.

என்னுடைய கவிதைகள் கூட இரண்டு இதழ்களில் இடம்பெற்றுள்ளன என்பது எனக்குக் கூடுதல் மகிழ்ச்சி.

ஐந்தாம் இதழ் மட்டும் 44 பக்கங்களிலும் மற்ற ஐந்து இதழ்களும் 36 பக்கங்களிலும் வெளிவந்துள்ளன.

சில இதழ்களில் நகைச்சுவைத் துணுக்குகள் கிச்சுகிச்சு மூட்டுகின்றன. இரண்டு மூன்று மற்றும் ஆறாம் இதழ் களில் மட்டும் வாசகர் கடிதங்கள் இடம் பெற்றுள்ளன.

ஆறு இதழ்களையும் ஒட்டு மொத்தமாய் உரைத்துப் பார்க்கும் போது முத்தமிழ் கலசத்தின் இதழ்ப் பயணம் இனிமையானதாகவும், நம்பிக்கை யூட்டுவ தாகவும் உள்ளது.

கவிதைகள் சிறுகதைகள் கட்டுரை கள் நூலறிமுகங்கள் என ஒரு முழுமையை கலசம் முன்மொழிந்துள்ளது. ஏராளமான இளம் படைப்பாளர்களை அதுவும் குறிப் பாக பெண்படைப்பாளர்களை தாய் மடியாக முத்தமிழ் கலசம் ஏந்தி நிற்கிறது.

ஒவ்வொரு இதழும் படிப்பதற்கு முன்னே படிக்கத்தூண்டும் வகையில் கவனமாய் வண்ணத்தில் வடிவமைக்கப் பட்டிருப்பது முத்தமிழ் கலசத்தின் தனி சிறப்பு!

மொழிபெயர்ப்புச் சிறுகதை கவிதைகள் பக்கமும், சிறுவர்களுக்கு குறைந்தது இரண்டு பக்கமும் எதிர் காலத்தில் ஒதுக்கப் பட்டால் கலசத்தின் பொன்னொளி மேலும் கூடும்.

மொத்தத்தில் செந்தமிழ் என்னும் நீள்நெடும் கோபுரத்தின் உச்சியில் மின்னு கிறது முத்தமிழ் கலசம் என்னும் மின்னிதழ்த் தங்கக் கலசம்!

இதழ்களை
https://muththamizh-kalasam.com
படிக்கலாம்.
தொடர்புகளுக்கு
muththamizh.kalasam@gmail.com

# ஆசிரியப்பா

## விரட்டியடிப்போம் கொரொனா

மூக்கும் வாயும் முற்றாய் மூடத்
தேக்கின் உடலைத் தீண்டுமோ நோயும்
கொடிய கிருமி கொட்டம் அடக்க
நெடிய பயணம் நித்தம் வேண்டும்
விழித்துக் கொண்டால் விடிய லுண்டே
ஒழிப்போம் தீநுண்மி ஒற்றுமை கொண்டு
வீட்டிலிரு‘ ‘விலகியிரு‘ ‘விழித்திரு‘
வாட்டும் கொரொனா வாழ்வில் வாராதே

- வ. இராமதாசு தென்பசியார்



## குருதிக்கொடை!

உன்னதக் கொடையில் ஒன்றே குருதி
தன்னுயிர்ப் போன்றே தந்து காப்போம்!
சாதி மதங்களைத் தகர்த்தே எறிவோம்
நீதியின் வழியில் நின்று சிறப்போம்!
உதிரம் கொடுத்தும் உயிர்களைக் காப்போம்!
விதியின் சதியை வெல்வோம்!
தாயாய் உதிரம் தந்துகாப் போமே!

- செ.நிறைமதி மதுரை

## சாதியை ஒழிப்போம்

படைத்த இறைவன் பகுத்திட வில்லை
இடைவரு மாந்தனே இதனைச் செய்தான்
சாதி மதமெனும் சகதிப் பிரிவு
ஆதி மனிதனை அண்டவே இல்லை
பின்னால் வந்தவன் பிழைப்புக் காகப்
பின்னி முடித்தான் பேதமை வலையை
இன்று வரையில் இஃதொழிய வில்லை
என்று தீருமோ இப்பெருந் துயரம்
வழிவழி தழைக்கும் விடமரம்
அழித்தொ ழித்தால் அமைதி நிலைக்குமே..

- தென்பரை இராக. பாஸ்கர்

## குடியின் கேடு

குடித்தால் உன்றன் குடலும் கருகி
மடிவாய் சீக்கிரம் மாறிடு நண்பா
குணமும் குன்றிக் குடும்பம் குலைந்தே
தணலில் புழுவாய்த் தவிப்பாய் நண்பா
கடமை தவறிக் கண்ணியம் சிதைந்தே
உடைமை நீங்கும் உன்னை
உடனே குடியை ஒட்டுவாய் நண்பனே

- கவிஞர் முகிலை பாஸ்ரீ

## ஆல விழுதாய் இறங்கிடு தமிழா

தமிழை என்றும் தலையால் வணங்கி
இமியும் பிறழா ஏற்புடை வழியில்
கவிதை வானில் கவனம் செலுத்தியே
புவியில் பலரும் போற்றும் வண்ணம்
எழுதும் கவிகள் என்றும் ஆல
விழுதாய் இறங்கி வீணரை
முழுதாய் விரட்டிட முயல்வதும் நலமே

- இராம. வரதராசன், மதுரை

# இரண்டாம் சாயமேற்றப்படும் இழைகள்!

- பா.சக்திவேல்

கல்வி ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் திடமான மாற்றத்தை ஏற்படுத்துகிறது என்கிற நம்பிக்கையில் மாற்றுக் கருத்து இருப்பதற்கான வாய்ப்பு குறைவே.

''கற்பவை கற்றபின் நிற்க அதற்குத்தக'' என்ற வள்ளுவரின் வாய்மொழி நமக்கு வழிகாட்டுவது ஒன்று தான். தெளிந்து கற்க வேண்டும், கற்றுத் தெளிய வேண்டும், கற்றோர்க்கு உரிய பண்போடும், நெறியோடும் நடக்க வேண்டும். அப்படியொரு கல்வித் தேடலை மக்களுக்கு வழங்கி விட்டால், ஜென்ம சாபல்யம் பெற்றவர்களாக அனைவரும் மாறி, அகிலம் அறிவு கொண்டு விளங்கும், அன்பு தேசமாக மலரும். கல்வி கற்பதன் நோக்கம் எதில் உள்ளது என்பதை பொருத்து அதன் பிரதிபலிப்புகளும் உள்ளது. எதைக் கற்கிறோம் என்கிற கேள்வியும் கற்போரின் பரிமாணத்தை நிர்மானிக்கிறது.



அண்ணா பல்கலைக்கழகம் சென்ற ஆண்டு வெளியிட்ட அறிவிப்பு : எம்.இ, எம்.டெக் உள்ளிட்ட முதுநிலை படிப்பில் சேர்ந்துள்ள மாணவர்கள் பகவத்கீதை மற்றும் சில சமஸ்கிரித ஸ்தோத்திரங்கள் அடங்கிய பகுதிகளைப் பாடமாக படிக்க வேண்டும் என, அது சில சர்ச்சைகளுக்கு வழிவகுத்தது. அரசியல்கட்சிகள், நடுநிலையாளர்கள், தமிழ் ஆர்வலர்கள், பேராசிரியர்களின் பலத்த எதிர்ப்புகளுக்குப் பிறகு தமிழக அரசின் உயர் கல்வித்துறை அறிவுறுத்த லின்படி விருப்பப் பாடமாக மாற்றப்படும் என அண்ணா பல்கலைக் கழகத்தால் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இது போன்ற முன்னெடுப்பை பல்கலைக்கழகம் மேற்கொள் வதற்கான அடிப்படைக் காரணம் என்ன வென்று ஆழ்ந்து நோக்கினால் சில காரணிகள் வெளிப்படும். அகில இந்திய தொழில் நுட்பக் கல்விக் கழகத்தின் கீழ்தான் பொறியியல் படிப்பு, இந்தியாவின் அனைத்து பல்கலைக்கழகங்கள், பொறி யியல் கல்லூரிகளில் வழங்கப்படுகிறது. ஐ.ஐ.டி (இந்திய தொழில் நுட்பக் கழகம்) புவனேஸ்வரில் கிபி 2016 ஆம் ஆண்டு பொறியியல், தொழில் நுட்பம் பயிலும் மாணவர்களுக்காக எதிர்காலத்தைப் பற்றிய தெளிவுபடுத்துதல், நேர்மறை எண்ணங்களை வளர்ப்பது, மாணவர் - ஆசிரியர் உறவை மேம்படுத்துவது, கல்வியின் மீது நம்பிக்கை ஏற்படுத்துவது, கோஷ்டி பூசலைத் தடுப்பது, சமூகவிரோதப் போக்கைத் தணிப்பது என்கிற கருதுகோள்களை முதன்மையாகக் கொண்டு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டது. இந்த பயிற்சியின் மூலம் அந்த ஐஐடி

மாணவர்களிடையே நல்ல மாற்றம் ஏற்பட்டதை தொடர்ந்து, இது அனைத்து ஐஐடிக்களுக்கும் பரவியது. இந்த பயிற்சி வகுப்புகள் அனைத்து ஐ.ஐ.டிக்களிலும் வெற்றிகரமாக நடத்தப்பட்டு நல்ல முன்னேற்றத்தைக் கண்டனர். 2019 ஆண்டு முதல் அனைத்து பொறியியல் கல்வி போதிக்கும் நிறுவனத்துக்கும் இது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதற்கான வழி காட்டுதல்களை ஏ.ஐ.சி.டி.இ முறையாக வடிவமைத்து நாடு முழுவதும் உள்ள கல்வி நிலையங்களுக்கு அனுப்பி வைத்துள்ளது. இந்த நடவடிக்கையின் மூலம் மாணவர்களுக்கு 21 நாட்கள் புதிய பயிற்சிகள் வழங்கப்படும். இதில் மனிதவளம், இயற்கை, சமூக வளர்ச்சியில் மாணவர்களின் பங்கு, மனம், உடல், சரியான தேவைகள், சக உயிர்களை மதித்தல், உலகில் உள்ள ஒவ்வொரு அம்சத்தையும் அதன் பிறப்பையும் முறையாக புரிந்து கொள்ளுதல், உதவிகள் செய்வது மூலம் மற்றவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்தல், அன்போடு அணுகுதல், வெறுப்புணர்வை விலக்குதல், காந்திய சிந்தனை போதித்தல், காந்தி திரைப்படம் திரையிடுதல் ஆகியவை அடங்கும். வர இருக்கிற கல்வி ஆண்டில் இந்த குறிக்கோள்களை கொண்டு புதிய பாடம் ஒன்றும் அறிமுகப்படுத்தப்பட இருக்கிறது.

## இனிய இரவு

கால்கொலுசை விற்று
 கடுகுமட்டும் வாங்கிவிட்டோம்;
பால்வாங்க நாளைப்
 பதைக்கமுண்டு; --- கால்வயிறு
கஞ்சிக்கொவ் வொன்றாய்க்
 கழற்று; சிரிப்புமட்டும்
எஞ்சிநின்றால் போதும்
 இரவு.

**- ஏடி வரதராசன்**

இந்த பாடம் ஒவ்வொரு பொறியியல் மாணவருக்கும் படிப்பை தொடர்வதற்கு முன்,கட்டாயமாக்கப்படவாய்ப்புகள்அதிகம் உள்ளது. இதற்கான தொடர் முயற்சியாக, நாடு முழுவதும் உள்ள பொறியியல் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்க முடிவு செய்யப்பட்டு வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளது. அப்படியெனில், ஏற்கனவே பள்ளிக் கல்வியில் படித்த மொழிப்பாடங்களில் நீதி, நெறி, வாழ்வியல் சிந்தனைகளுக்கான பாடப்பகுதிகள் இடம் பெற்றிருந்தாலும்அவைமதிப்பெண்வழங்கும் பக்கங்களாகத்தான் பார்க்கப்படுகிறதா? என்ற கேள்வி நம் முன் நடனமாடுகிறது. மனப்பாடப்பகுதிகளாக மாறிப்போன வாழ்வியல் கருத்துகள், வாழ்வின் எல்லை வரை வரவேண்டியது, தேர்வு முடிந்ததும் மறந்து போனது வேதனையானது. உயர் கல்வியைப் பெறுவதற்கான திசைநோக்கிய கல்வியை, பள்ளியிலிருந்தே மாணவர்கள் பயிலத் துவங்கி விடுகின்றனர். இதில் சூத்திரங்களும் சாத்திரங்களும் அதிகம். பணிக்கு செல்வதற்கான படிப்புகள் விரும்பப் படுவதால் வாழ்வியல் நெறிமுறைகள், மனம், மனிதவளம், இயற்கைக் குறித்த புரிதல் குறைந்து விடுகிறது. இயந்திரங்களையும், பொறிகளையும், உபகரணங்களையும், சாதனங்களையும் பயன்படுத்தக் கற்று, சாதனைகள் படைக்கும் மனித குலம் நல்ல பொறியாளர்களை, கல்வியாளர்களை உருவாக்குவது எவ்வளவு முக்கியமோ அதே அளவிற்கு அவர்களை நல்ல நெறியாளர்களாக வார்த்து எடுக்க வேண்டிய பொறுப்பும் பல்கலைக்கழகங்களுக்கு உண்டு. தன்னையும் சுற்றத்தையும் சரியாக அறிந்தவர்கள், சகமனிதர்களையும் சமூகத்தையும் அறிந்து தனது இருப்பின் மூலம் சிறந்த பங்களிப்பை வழங்க முடியும்.

அண்ணா பல்கலைக்கழகத்தில் விருப்பப் பாடமாக பகவத்கீதையை போதிக்க முன் வந்திருக்கிற போதிலும் சமஸ்கிருதத்தை மட்டும் மையப்படுத்தாமல் விரும்புகிற மொழியில் படிக்க வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். தேர்வுமுறை ஆங்கிலத்தில் நடைபெற்றால் அனைவருக்கும் பொதுவான மதிப்பீடு பெறலாம். தமிழகத்தில் 540

கல்லூரிகளை தன்னகத்தே இணைத்துள்ள பெரிய பல்கலைக்கழகமான அண்ணா பல்கலைக்கழகம் பகவத்கீதைக்கு காட்டிய முக்கியத்துவத்தை திருக்குறள், நாலடியார் உள்ளிட்ட அற இலக்கியங்கள், நீதிநெறி நூல்களின் தேர்வு செய்த பகுதிகளைக் கொண்டு புதிய பாடத்திட்டத்தை உருவாக்க முன் வரவேண்டும். தமிழக அரசின் உயர் கல்வித்துறையும், தமிழ்வளர்ச்சித் துறையும் இணைந்து இதில்செயலாற்றினால் மிகுந்த பயனளிப்பதாக அமையும். தேவை இருப்பின் இந்த பகுதிகளை சிறந்த ஆங்கில மொழியாக்கம் செய்து பாடத்திட்டத்தில் இணைத்தால், மேதகு முன்னாள் குடியரத் தலைவர் அப்துல்கலாம் ஐரோப்பிய யூனியனில் ஒலித்த, தற்போதைய பாரதப் பிரதமர் ஐ.நாசபையில் மேற்கோள் காட்டிய "யாதும் ஊரே யாவரும் கேளிர்" கூற்றுக் கிணங்க நமது நாடு நேர்மையும், அகத்தில் தெளிவும் கொண்டு சிறந்த மனிதத்தை வளர்க்கும், உருவாக்கும் மையமாகத் திகழும்.

பள்ளிக் கல்வியில் இடம் பெற்ற ஒழுக்கத்தை போதிக்கக்கூடிய வகுப்புகள் கால ஓட்டத்தில் புறக்கணிக்கப்பட்டன. மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட உயர் கல்வி படிப்பதற்கு அறிவியல், கணித மதிப்பெண்களே அடிப்படையாக எடுத்துக் கொள்ளப்படுகின்றது. தத்துவங்களும், வாழ்வியல் கூறுகளும் நிறைந்துள்ள மொழிப்பாடங்கள்இரண்டாம்பட்சமாகத்தான் பார்க்கப்படுகிறது. அப்படி ஒதுக்கி வைத்து விட்டுச்சென்ற கருத்துகளைத்தான் உயர் கல்விநிலையங்களில் தொழிற்கல்விக்காக செல்லும் மாணவர்களுக்கு பயிற்றுவிக்க முயற்சி எடுக்கப் படுகிறது. "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது" என்பது பழமொழி. மாணவர்களை மதிப்பெண் எடுக்கும் இயந்திரங்களாகப் பாவித்தது பாடத்திட்ட அணுகுமுறை, நுழைவுத் தேர்வு முறை. ஆரம்பத்தில் இருந்த நல்ல விதைகளை விலக்கி வைத்தது யார் குற்றம். கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்கின்றன உயர்கல்வி நிலையங்கள். அரசும் கல்விப்புல ஆலோசகர்களும் இதனை கருத்தில்கொள்வார்களா?

■

## எனக்கு இனிய கண்ணதாசன் பா...



(பக்தி)

சூரியனை சில நேரம்
மேகம் மறைப்பது போல,
நாத்திக மேகம் சூழ்ந்த என்னை
மீண்டும் சூரியனாய் பிரகாசிக்க
செய்தது உன்
"அர்த்தமுள்ள இந்து மதம்"

"முதல் முத்தத்தின்
சுவையை உணர்ந்தவன்
ஒரு பைத்தியக்காரனைப் போலாகி
விடுகிறான்" என்று நீ
கூறியது உண்மை தான்
பக்தி ரசம் பருகி பழகிய நாள்முதல்
என்னால் இன்றுவரை
தெளிய முடியவில்லை
கனவிலும் வேதகீதங்கள் தான்
ஒலிக்கின்றன...

கோவில் விபூதியை வெரும்
சாம்பல் என நாத்திகம்
பேசிய உன்னை,
காஞ்சி பெரியவர் அருளிய
சாம்பல் எப்படி ஆத்திகனாய்
மாற்றி அற்புதம் செய்ததோ,
அதுபோல்
நானும் அவன் அருள் வேண்டி
விபூதி இட்டு காத்திருக்கிறேன்
அவன் திருவடிகளில்...

ஆறென்றும் நதியென்றும்
ஓடையென்றாலும் அது
நீரோடும் பாதை தான்
என்று கூறி,
உருவங்கள் வேறென்றாலும்
வழிபடும் விதம் வேறென்றாலும்
"பக்தி" ஒன்றே தான்
என புரியவைத்து
என்னை ஆன்மீக வழியில்
உடலும் மனமும் ஒன்றிணைந்து
லயணிக்க
வைத்த "ஞானகுரு"
எனக்கு இனிய கண்ணதாசன்...

**ச.சிவகணேஷ்** BE.,
பால்குளம்,
தூத்துக்குடி மாவட்டம்




- "மனசு" கருப்புகருணா
அவர்களின்குறும்படம்
பார்த்தேன்

- ஆழ்மனதுள் அதிர்ச்சி கொடுத்தது
மேலோட்டமாகப்பார்த்தால்
கொஞ்சம்மிகையான கருத்தியல்தான்

- ஆனால் செல் லநாய்குட்டிக்கும்
ஜோடிக்கிளிகளுக்கும்
அன்புகாட்டும்பெண்
சகஉயிராய் மதித்து உரையாடுகிறப்பெண்

- கணவனின்சாவுக்காக
சந்தோஷப்படுவதென்பது
யோசிக்கவைக்கிறது

- நண்பன் வி. உ. இளவேனில் தனது
பள்ளிக்காலத்தில் எழுதிப்புகழும்
பரிசும்பெற்ற கவிதையின் கடைசிவரி
நினைவுக்குவந்தது

- "வெளியில்கட்டப்
பட்டிருக்கிறது நாய் உள்ளே கட்டப்படாமல்
நான்"

- சுயத்தில் அச்சமூட்டுவது நம் சாவின்போது
அழுவதற்காக ஒத்திகைப்பார்க்கும்
நிலையை வாழ்க்கைத் துணைக்கு
ஏற்படுத்தாத வாழ்வை வாழ்கிறோமா?


- அவசியம் குறும்படத்தைக்காணுங்கள்
உங்களுக்கும்வரலாம் அச்சம்...

- படக்குழுவினருக்கு நெஞ்சார்ந்த
பாராட்டும் வாழ்த்துகளும்

- குறிப்பாக ஒளிப்பதிவாளர் மற்றும்
நடிப்பேதெரியாமல் நடித்த
அந்தப்பெண்மணிக்கும்...
அவரின் தேர்ந்த முகபாவத்திற்கும்
உடல்மொழிக்கும்
விருதுகள் கிடைத்திடவாழ்த்துகள்

- https://m.youtube.com/watch?v=rfr3ZgI8ths&feature=youtu.be

**- சிங்கார சுகுமாறன்**





# ஆசையில் ஒரு கடிதம்..

( நேரிசை ஆசிரியப்பா )

அன்பே என்னை அறிவாய் நீயென
என்னுளம் சாற்ற எழுதுகிறே னிதனை;
மனத்தின் ஆழத்துள் அனைத்தும் வைத்து
அணைந்த என்னைக் காட்டுகி றேனிதிலே,

கண்டு பலவரு டமாகினும் பசுமை
மண்டிக் காணும் அடர்வன மாகிநீ
நிலைகொண் டாயென் நினைவு நின்றாய்;
அலைகடல் போல்மனக் கரைமோ தினாய்,

ஆசை வளர்த்தேன்; அதில்நான் எரிந்தேன்,
நேசம் நாடி,நீ போனதிசைத் திரிந்தேன்,
கண்டும் காணாமல் கயல்விழி மறுத்துக்
கண்டஉன் மனத்தில் தனியிடம் பிடித்தேன்

ஆயிரம் கண்கள் சேயிழை உனைநாட
பாயிரம் ஆனேன் நானே உனக்கு;
மாதுளைக் கன்னக் கதுப்பிலே சிந்தும்
போதைகொள் சிரிப்பை ரசிப்பவ னானேன்,

ஓடிய காலம் மொத்தமாய்க் கழிய
நாடிய எனை,மலர் நீயோ ஒதுக்க
முற்றிய காதலை முடித்தாய் மானே;
முற்றுப் புள்ளிவைத் தாயேன் பூவே,

விண்ணின் மீனே விசும்பின் பொழிவே
கண்ணே என்னை மறந்ததும் நன்றோ?
எழிலே சிறப்பே ஏந்திழைக ளுயர்வே!
கழிந்த யென்காதல் காணுமோ இனியே?

**கு.லோகநாதன்..**

பல்சுவை
தமிழ்நெஞ்சம்
www.tamilnenjam.com ஜூலை 2021

# மலர்கள்

அதிகாலையில்
உன் சிரிப்பை செதுக்குவாய்
ஒரு சில தினங்களில்
உன் இறப்பை ஏற்பாய்!
இடையில் இருக்கும்
பொழுதினில்
என்னோடு களிப்பாய்!

கொடூரனையும்
உன் கொஞ்சும் முகத்தால்
மனம் மாறச் செய்வாய் !

உன்னைத் தேடி வரும்
தேனீக்களை
உன் அழகால் சொக்க
வைப்பாய்!
தேனை கொடுக்காமல்
அதனிடம் வேடிக்கை
காட்டுவாய்!

உன் வசீகரமான இதழ்களால்
தென்றலோடு இசை அமைப்பாய்!
உன் மவுனமான இசையால்
வண்ணத்துப்பூச்சியை
அடிமைப்படுத்துவாய்!

எக்காலத்திலும்
தோற்கடிக்க முடியாத
ஆஸ்கர் நாயகனாய் நிற்கிறான்
உன் ஒப்பனை கலைஞன்!
என் அழகே! என் மலரே!
உன் மௌன சிரிப்பில்
மயங்கி நீ விரித்த
மாய உலகில் நிற்கிறது
இந்தக் கவிஞனின் உயிர்!

- ச. தஸ்லிமா
தென்காசி